## பேரறிஞர் அண்ணா

# பவழ பஸ்பம்



# பவழபஸ்பம்

பேரறிஞர்
டாக்டர் சி. என் அண்ணாதுரை,
எம்.ஏ.,

பூம்புகார் பதிப்பகம்
63, பிராட்வே
சென்னை-600 108

விலை ரூ 6-90

பூம்புகார் வெளியீடு எண் : 232

முதற்பதிப்பு : நவம்பர், 1986

உரிமை : திருமதி இராணி அண்ணாதுரை

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பதிப்பகம் (பிரஸ்), சென்னை—600108.

# பதிப்புரை

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாக வும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை— விவஸ்தை கெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக, 'சிறுகதை' இருக்க வேண்டும்.

மனித மனத்தை நிறைவு படுத்தும் வேலையை, கொஞ்சம் அழகாக எழுதத் தெரிந்த யாராலும் செய்து காட்ட முடியும். அதுவல்ல, சிறுகதை.

ஒரு மனத்தின் சேஷ்டையை மற்றொரு மனத்துக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல; அந்த மனத்தின் கசிவைப் பிரதிபலிக்கும் கண் ணாடியாகவும் அது பொருந்தி இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கதையைத்தான் 'சிறுகதை' யாகக் கொள்ள முடியும்.

காலத்துக்கேற்ற மாதிரி—சூழ்நிலைக்குத் தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதருக்குப் புத்தி சொல்லக் கிளம்பும் சில புஸ்வாண எழுத்தாளர்கள் மட்டும் உடையை மாற்றிக்கொள் வதுபோல் மனத்தை மாற்றிக்கொண்டு, எழுது வதையெல்லாம் 'கதை' என்றுகதைக்கின்றஇந்தக் காலகட்டத்தில், உங்கள் கரங்களில், உண்மையான -உயிருள்ள கதைகளைச் சிருஷ்டித்த பெருமைக் குரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதைத்

தொகுப்பை, 'பவழபஸ்பம்' என்னும் தலைப்பில் தவழவிட்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 'சிறு கதை' என்பது சுவீகாரக் குழந்தைதான். அதுவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை அது.

அந்தக் குழந்தையை அமரர் அண்ணா அவர்கள், தம் கரத்தில் ஏந்தித் தவழவிட்டிருக்கும் பாங்கை இதில் நீங்கள் பரவலாகக் காணலாம். அந்தக் குழந்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் விழிப்பை மட்டுமா, நல்ல வெளிச்சத்தையும் தரக் கூடிய மருந்தாகும்.

அத்தகு சிறப்புள்ள—பேரறிஞர் அண்ணா அவர்களின் உயிர்த்துடிப்புள்ள கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி இராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

**—பூம்புகார் பதிப்பகத்தார்**

# முன்னுரை

சர் சண்முகம் அவர்கள் இதுபோது வகித்து வரும் 'பதவி'யினின்றும் விலக இருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. அந்தச் செய்தியுடன், பலர் தமது 'ஆசை'யையும் இணைத்துப் பார்க்கிறார்கள். அதாவது பதவியை விட்டுவிட்டு சர் சண்முகம், தமிழருக்குத் தலைமை தாங்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆவல். அவ்வித ஆவல் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

முன்னமோர் முறை இதுபோன்ற சமயம் இருந்தது. அவர் கொச்சி அரச சேவையினின்றும் விலகியபோது, இன்றுபோல் அன்றும் எனக்கு ஆவலிருந்தது. அதனைச் சில கட்டுரைகளாக்கி 'திராவிடநாடு' இதழில் வெளியிட்டேன். பலர் என் நோக்கம், சர் சண்முகத்தைக் குறை கூறுவது என்று எண்ணினர். சிலரால் மட்டுமே, என் உண்மை நோக்கம், அவரைத் தமிழருக்குப் பணி புரிய அழைக்கும் ஆவல் என்று உணர முடிந்தது.

அந்தக் கட்டுரைகளை, திருச்சி 'திராவிடப் பண்ணை', அன்று இருந்தது போலவே உள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் தொகுத்து வெளியிட முன் வந்தனர். என் மகிழ்ச்சியும் நன்றியும் அவர்கட்கு.

அன்பர்கட்கு ஒரு வார்த்தை. வர்ணாஸ்ரமம் என்ற மிகப் பெரிய கேட்டினைக் களைந்தாக வேண்டிய பெரிய, பாரமான, ஆபத்தளிக்கக்

கூடிய, பொறுப்பு நமக்கு இன்று இருக்கிறது. வர்ணாஸ்ரமத்தின் கோர விளைவுகளை நாம் நன்கு புரிந்துகொள்ளும்படி, நமது தலைவர் பெரியார், நமக்குப் பேருதவி செய்துள்ளார். அவருடன் துணை நின்று, வர்ணாஸ்ரமத்தைத் தாக்கித் தகர்க்க வீரர்கள் தேவை. சர் சண் முகத்தை, இத்தகு வீரப்படைக்குத் தலைமை தாங்கி நடாத்திச் செல்லுமாறு நான்—உங்கள் சார்பில்—அனுப்பும் அன்பழைப்புதான் இது. பல காலமாக அவரை, எங்கெங்கோ 'இரவல்' கொடுத்தோம். இனியும், நமக்கும் அவருக்கும் அந்நிலையேதானா! தமிழகம் தன் வீரப்புதல் வனை, உரிமையுடன் கூவி அழைக்கிறது, ''மகனே! மாநிலமெங்கும் உரிமைப் போர் நடக் கிறது. நானோ அரசியல், பொருளியல், சமுதாய மத இயல் சகலவற்றிலும் அடிமைப்பட்டுத் தவிக் கிறேன். நீயோ, யாராருக்கோ சென்று 'சேவை' செய்கிறாய். வீடு திரும்பி வா! பெற்றவளைப் பார்! அவளுக்குற்ற துயர் நீக்கு!'' என்று கூறு கிறது. இந் நூலின் கருத்து இதுவே.

15—6—1947 **சி. என். அண்ணாதுரை**

# 1

# பவழபஸ்பம்

''சகலகலாவல்லியே! நீ சாய்ந்திருக்கும் சர்ப்பாசனம் சந்திரசேகர பூபதிக்குச் சந்தனக் கட்டை விற்றதிலே கிடைத்த இலாபத்தால் வாங்கியதுதான். மாலையில் நீ மினுக்கிக் கொண்டு நிற்கிறாயே, பளிங்கு அறை யிலே, நிலக்கண்ணாடி, அது ஏது என்று தெரியுமோ? ஏலப்பனுக்கு என்னாலே பெருங் கஷ்டம் வந்தது என்று எவனெவனோ பேசினானே, அந்தச் சமயத்தில், அவனுடைய சஞ்சலத்தைப் போக்க, நான் தந்திரமாக என் மதியை உபயோகித்ததால் வந்தது, அவன், இதனை 60 பொன் கொடுத்து வாங்கினான் என்று நான் கேள்விப்பட்டதாகச் சொன்னேன், அவன் 600 பொன் கொடுத்துப் பெற்ற பொருள் அது என்பது எனக்குத் தெரியும்! அழுதுகொண்டே கொடுத்தான், அதன் முன்புதான் நீ சிரித்துக்கொண்டே நிற்கிறாய், சிங்காரியாக. உன் உடை, உல்லாசம், மாளிகை, தோட்டம், வண்டி, வாகனம், வேலையாள், இவைகளை வேதாந்தம் தேடித்தரவில்லை. மாயாஜாலப் பொருள் களல்ல! மக்கள் மன்றத்திலே நீயும் உன் சகாக்களும் பேசினீர்களாமே, கொள்ளை இலாபம் அடிக்கும் கூட்டத் தின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று! அந்தக் கொள்ளை இலாபம் கொடுத்த பொருட் குவியலிலே நீ இருக்கிறாய்! ஏழைகளின் இரத்தத்தை நாங்கள் குடிக்கி றோம் என்று ஏசினீர்களாமே, கூட்டத்திலே. அந்த இரத் தத்தை நான் கெட்டவாடை போக்கித் தங்கக் கோப்பை யிலே ஊற்றித் தந்தேன் உனக்கு. அதை நீயும் பருகி னாய். உனக்காகத்தான் நான் அந்த வேலையையும் செய்தேன். உன் அழகுக்கேற்ற அந்தஸ்து தேடிக்கொடுத் தேன். கண்டவர் மெச்சும் காட்சிப் பொருளாக்கினேன்.

பரிபூரண திருப்தியுடன் பாலும் பழமும் சாப்பிட்டுக் கொண்டு பரிமளவாடை கொண்ட பஞ்சணையில் நீ படுத்துத் தூங்கினபோதெல்லாம் நான் பாழும் கணக்கு கணக்கு என்று அதிலே மூழ்கி, இவ்வளவு போக போக்கி யங்களை உனக்கு அளித்தேன். நீ மக்கள் மன்றத்தில் பேசு கிறாய்! மக்கள் கூட்டத்திலிருந்து உன்னைத் தேடி எடுத்து, சீமாட்டியாக்கினேன். நீ சீறிச் சீறிப் பேசினாயாம், மன்றத் திலே அறிவு கெட்டவளே! நான், வணிகன், இலாபம் பெறுவது என் தொழில், அதை அனுபவிப்பவள் நீ. அனுபவிக்கும் சுகத்தையும் மறந்து அந்தச் சுகத்தை உனக்கு அளிக்கவே, சுவடியும் கையுமாகக் கிடக்கும் எனக்கு நன்றி செலுத்துவதையும் விட்டு. யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு, தாறுமாறாகப் பேசிவிட்டு வந்தாயே, இது தகுமா? நான் சாமர்த்தியமாகத் தொழிலை நடத்தி யிராவிட்டால், நீ எங்கு இருப்பாய்! என்ன செய்து கொண்டிருப்பாய்! பாவம் சுடச்சுட நடுப்பகல் வெயிலில் தலையில் சோற்றுச் சட்டியைச் சுமந்து கொண்டு, அங்காடிச் சாவடிக்கு வந்து, எனக்குப் பரிமாறும் பணிப் பெண்ணாக இருந்திருப்பாய். பட்டமகிஷிபோல் உன்னை இப்போது வைத்திருக்கிறேன், பக்குவம் பெறவில்லையே, நீ. வியாபார முறையை மாற்றப்போகிறீர்களாமே நீங்கள்! வஞ்சனையை வாட்டி வதைத்து, கருணையை முடிசூட்டப் போகிறீர்களாமே. உங்கள் முதுகுக்குச் சூடிட மன்னன் கட்டளைப் பிறப்பிக்கப் போகிறான், ஜாக்ரதை. நாளை முதல் நீ அந்த நாசக்காரர்களுடன் சேராதே. நமக்கிருக்கும் மதிப்பைக் கெடுக்காதே. இந்த மண்டலத்தில் நான் வியாபாரம் செய்வது போலச் செய்து பொருள் திரட்டு பவர்கள் பலர் உண்டு. அதிலே பாதகம் இல்லை! வல்லவன் வாழ்வது இயற்கை. இதை மாற்ற முயலும் பேர்வழிகள் வெறும் வீணர்கள்! அரசன் அடங்காக் கோபம் கொண்டுள்ளான். நீ என் மனைவி என்பதை மறவாதே. வணிகனுக்கு வாழ்க்கைப்பட்ட உனக்கு வாயாடி வேலை வேண்டாம்!''

சீறிச் சீறிப் பேசினான், கணவன். சிந்திய கண்ணீரைத் துடைக்கவும் மனமின்றி, அவன் உரையைக் கேட்டுக் கலங்கினாள் அவன் துணைவி. புருஷன் கோபத்தால் காரசாரமாகப் பேசுகிறானே என்பதல்ல அவள் கலக்கத்துக்குக் காரணம். அவன் கூறினது உண்மை! அவைகளை அவள் உணராமலேயேதான் இருந்து வந்தாள். அவன் சொன்ன பிறகுதான், உண்மை அவளை உறுத்தத் தொடங்கிற்று. அதனாலேயே, அவள் அவ்வளவு கலங்கினாள்.

*

புத்தருடைய பொன்மொழிகள் நாட்டிலே பரவிக் கொண்டிருந்த காலம், பூபதிகள் சிலர் புத்தமார்க்கத்தையே தழுவியும் கொண்டனர். பண்டைய மார்க்கம் நிலைத்திருந்த சில மண்டபங்களிலேகூட, சிலர், புத்தமார்க்கத்தைக் கடைப்பிடித்து, பிட்க்ஷுக்களாகி விட்டனர். ஓங்கி வளரும் புத்த சமயத்தைத் தடுப்பது, பலமான புயலை விலை கொடுத்து வாங்குவதற்கொப்பாகும் என்று யூகமுள்ள மன்னர்கள் உணர்ந்து நடந்தனர். உருத்ர தேவன் ஆலயமும் அதற்குப் பக்கத்திலேயே புத்த மடமும் கட்டலாயினர். புத்தபிட்க்ஷுக்களைக் கண்டவுடனே, தமது ஆதிக்கத்துக்கு உலை வைக்கிறார்களே இந்தப் புது முறைக்காரர்கள், என்று கோபம்தான் சனாதனமார்க்கப் பூஜாரிக் கூட்டத்திற்கு. ஆனால் வெளியே தெரியவிடுவதில்லை. பௌத்தம், அரிய பெரிய உண்மைகளுக்கு இருப்பிடம், தூய்மைக்குப் பிறப்பிடம், என்று பாராட்டிப் பேசுவர். இந்த உத்தமமான கோட்பாடுகள் சாமான்யமானவைகளன்று, என்று புகழ்வர். இங்ஙனம் புகழுரை, கூறிப், புதுமுறைக்காரரை மயங்க வைத்துவிட்டு, மெள்ளத் தமது மார்க்கத்தைப் பிணைப்பர்; இம்முறைகள் அனைத்தும் உபநிஷத்துக்களிலே உள்ளன, வேதசாரம் அது என்று கூறுவர். அவர்களின் வஞ்சகம், பசும் புற்றரையிலே, வளைந்து நெளிந்து செல்லும் சர்ப்பம் போல் உலவிற்று. வேங்கைப் போலப் பாய முடியாது. வேந்தர் பலர்

புதிய மார்க்கத்தை ஆதரித்து வந்ததால் சனாதன மார்க்கம் சாகசத்தால் மட்டுமே சாகாது தப்ப முடியும் என்ற நிலை. ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டு வந்தது மக்களிடையே. அதாவது போகப்போக்கியங்களிலே ஒரு வகைச் சலிப்பு, கொஞ்சம் வெறுப்பு. புத்தரின் வாழ்க்கை வரலாற்றினை, பிட்க்ஷுக்கள் கூறிடக்கேட்டு நெஞ்சு நெகிழ்ந்த மக்களுக்குச், சுகம் சுகம் என்று அலைவது, கானல்நீர் வேட்டை என்ற எண்ணம் ஏற்பட்டது. போக போக்கியத்திலே பலன் இல்லை என்ற எண்ணம், வேறு ஒரு எண்ணத்தைக் கொண்டுவந்து சேர்த்தது. ஏன், சிலர் போக போக்கியத்திலே புரள வேண்டும்? ஏன் பல மக்கள் கஷ்டத்தில் உழல வேண்டும்? மக்களை இந்த நிலையில் வைத்திருப்பது கொடுமை அல்லவா? இந்தக் கொடுமையைச் செய்து சிலர் கொள்ளைப் பணத்தைக் குவித்துக் கொண்டு, கோபுரம் அமைத்த மாளிகையும், தடாகம் உள்ள தோட்டமும் அமைத்துக் கொண்டு வாழுவானேன். முத்து, பவளம், வைரம், வைடூரியம், பட்டு முதலியவற்றை, நாட்டுக்கு நாடு எடுத்துச் சென்று விற்பதும், உள் நாட்டிலேயே பொருள்களை, ஒன்றுக்குப் பத்தாக விற்பதும், ஏழைகள் தலையிலே தாங்க முடியாத சுமையை ஏற்றுவதும் கொடுமை. பாடுபடும் மக்களைப் பராரியாக்கிவிட்டு, ஒரு சிறு கூட்டம் மட்டும் பல்லக்குப் பரிவாரத்துடன் வாழ்வது, அக்ரமமல்லவா, என்ற எண்ணம் தோன்றி, மக்கள் மன்றம், என்ற ஓர் சபை அமைத்தனர் மரத்தடியில் தோன்றி, சாவடியில் குடி ஏறி, பிறகு ஒரு அழகிய மாடி வீட்டிலேயே, நடைபெற ஆரம்பித்தது, மக்கள் மன்றத்தின் கூட்டம்.

மருதவல்லி, அகவல் அம்பலவாணக் கவியின் அழகு மகள். வணிகருக்கு வாழ்க்கைப் பட்டவள். அம்பலவாணரின், கவிதைகளிலே, சமூகத்திலே ஏழைகள் படும்பாடுகளே, கருத்தாக இருக்கும். எனவே, மருதவல்லியின் மனதிலே, மக்கள் மன்றத்தார் பேசியவைகளின் வித்து ஏற்கனவே ஊன்றப்பட்டிருந்தது. மக்கள் மன்றத்தினர் பேசப்பேச, அவள் மனதிலே, வித்து முளைவிட்டுச் செடி கொடியாகி

விட்டது. அவளுடைய முயற்சியாலும் உதவியாலுமே, அந்த அழகான மாடி வீட்டிலே, மக்கள் மன்றம் கூட ஆரம்பித்தது. மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும் நிலை மாறி, மருதம், பேச ஆரம்பித்தாள் மன்றத்திலே. அம்பல வாணரின் அருங்கவிதைகளால் உண்டான அரிய கருத்துக் களை, மருதவல்லி, மக்கள் மன்றத்திலே, எடுத்துக்கூறி, மன்றத்தினருக்கே புதிய பார்வை பிறக்கச் செய்தாள். சில புத்த பிட்க்ஷுக்களும், மக்கள் மன்றத்தினருக்கு உதவி செய்யலாயினர். மன்னன், மக்களை ஏய்ப்பதில் மதி மிக்கவன், ''மொட்டைத் தலையருக்கு மடமும், கொட்டை கட்டிகளுக்குக் கோயிலும் கட்டிக் கொடுத்து விட்டால், சட்டமும் சாந்தியும் நிலைத்துவிடும், பயம் என்ன என்பது அவனுடைய ஆட்சிமுறை. மக்கள் மன்றத்தின் வளர்ச்சி பற்றி, அவன் கேள்விப்பட ஆரம்பித்ததே, மருத வல்லியின் புகழ் ஓங்கிய பிறகுதான். மன்னன் முதலிலே கொஞ்சம் கவலைப்பட்டான். பிறகோ, ''ஓ! நமது நவ கோடியாரின் மனைவி மருதவல்லிதானே மக்கள் மன்றத்துக்கு ஜீவன். அவ்விதமாயின் அஞ்சவேண்டுவ தில்லை, மன்றத்தின் சக்தியை, சிறியதோர் யுக்தியால் போக்கிவிட முடியும்'' என்று யோசித்தான். வழக்கப்படி கைகட்டி வாய் பொத்தி நின்று காரியம் ஏதேனும் உண்டோ என்று கேட்டுவந்த வணிகர் நவகோடியாருக்கு, அன்று மன்னன் ஆசனம் தந்தான். குளிர்ந்த பானம் கொடுக்கச் செய்தான் பணியாளை ஏவி. புன்னகை யுடன் பேசலானான்.

''நவ கோடியாரே!'' நமது எல்லையில் உள்ள சந்தனக் காட்டிலே, இரண்டாண்டு கட்டை வெட்டி, விற்பனை செய்யும் உரிமையை உமக்கு அளித்திருக்கி றோம். அதற்கான பட்டயம் தயாராகிவிட்டது'' என்றான் மன்னவன். நவகோடியார், மன்னர் முன் மண்டியிட்டுத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண் டார். ''காட்டிலே சந்தனக் கட்டை வெட்டும் போது, ஏதேனும் ஆபத்து ஏற்படக்கூடுமல்லவா! அதற்காகப்

பத்துப் போர் வீரர்களை நீர் பணி புரிய அமர்த்திக் கொள்ளலாம் என்றும் ஓர் உத்தரவு பிறப்பிக்கிறேன்'' என்று மன்னன் கூறினான். நவகோடியாருக்கு, காவலனின் கருணையின் காரணம் புலப்படவில்லை. அரசனுடைய அன்பு. சில சமயங்களிலே ஆபத்தின் முன் அறிவிப்பு என்பது மட்டும் தெரியும் வணிகருக்கு. எனவே, யோசிக்கலானார்!

''நவ கோடியாரே! உம்மிடம் ஒரு இரகசியம் கூற விரும்புகிறேன். ஆண்டவன் விதித்த முறைப்படி, அரசனும் ஆண்டியும் அனைவரும் தத்தமக்கு ஓர் நிலை எனப் பெற்று உள்ளனர். இந்தத் தத்துவம் தவறானது என்று பேசுவது, பாபச் செயல். ஏழை எளியோருக்கு உபகாரம் செய்யத்தான் வேண்டும். தயாபரன், தனம் தருவதே அதற்காகத்தானே! ஏழைகள் தங்குமிடம், சாப்பாட்டு விடுதி, சாவடி, இவைகள் அமைக்க வேண்டும். ஆனால் ஏழையைப் படைத்தவன் இறைவனாக மாட்டான் என்று பேசுவதா? ஏழையின் நிலைமைக்குக் காரணம், அவனுடைய '''விதி'' அல்ல, பிரபுக்களின் சூழ்ச்சி என்று பேசுவதா? இதுபோன்ற பாப மொழி பேசுவோர் படுபாதாளத்திலே வீழ்வது மட்டுமல்ல, மக்களையுமன்றோ மீளா நரகு புக வைப்பர்'' என்று கூறினான். மன்னன். நவ கோடியார், ''அரசே! அதற்கென்ன சந்தேகம்'' என்றார். அவருடைய வழக்கமான பாடம் அது. ''இத்தகாத செயல் புரிவோரைத் தண்டிக்க நெடுநேரம் பிடிக்காது'' என்றான் மன்னன். ''ஒரு வார்த்தை சொன்னால் போதாதோ, உளறி உலகைக் கெடுக்கும் அந்தக் கும்பலைத் தூக்கு மேடைக்கே இழுத்துச் சென்று விட மாட்டார்களோ, படையினர்'' என்று, வீராவேசத்தோடு வணிகர் பேசினார். ''உண்மை! ஆனால், அங்ஙனம் நான் உத்தரவு பிறப்பித்தால் உமது உத்தம மனைவியார், மருதவல்லி அம்மையாருமன்றோ சாகவேண்டும்!''—மன்னன், கடைசியில் அம்பை எய்தான். அடி வீழ்ந்து எழுந்தார் வணிகர், கெஞ்சினார்; மன்னன் பிறகு மக்கள் மன்றத்திலே மருதவல்லி பேசுவது பற்றிக் கூறி, உடனே, மருதவல்லியைக் கண்டித்து,

மன்றத்துடன் கொண்டுள்ள தொடர்பை அறுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும், என்று எச்சரித்தான். நவ கோடியார், அதன் பிறகே, மருதவல்லியைக் கண்டித் தார்.

மருதவல்லி, பணம் தேடித் தேடி பண்பை இழந்து விட்ட, தன் கணவனிடம் வாதாடி, அவரைத் திருத்து வது முடியாத காரியம் என்பதை உணர்ந்தாள். கணவனுடைய கருத்திலே நெளிந்து கொண்டிருந்த சுய நலத்தையும் பேராசையையும் சாகடிக்கத் தக்க திறமை தனக்கு இல்லை என்பதையும் உணர்ந்தாள். இவற்றை விட அதிகத் தெளிவாக வேறொன்றையும் மருதவல்லி உணர முடிந்தது. கணவன் மனம் கோணா மல் நடந்து கொள்வோம். நாட்டிலே உள்ள காட்டு முறையைப் போக்க நாம் தானா இருக்கிறோம். மற்றவர்கள் அக்காரியத்தைக் கவனித்துக் கொள்ளட்டும், 'நாம்' 'குடும்ப விளக்காக' இருந்து விடுவோம். என்ற எண்ணத்தைத் தன்னால் கொள்ளமுடியவில்லை என்பதை உணர்ந்தாள். வாழ்வுக்காகக் கொள்கையை மறந்து விட முடியாத அளவுக்கு, மருதவல்லியின் மனம் உரம் பெற்று விட்டது. எனவே, இனிக் கொள்கைக்காகப் பணிபுரிவது, அதற்காக , 'விடுதலை' பெறுவது என்ற துணிவும் பிறந்து விட்டது.

அந்த அழகிய முகத் தோற்றத்தையும், அன்பு வழியும் விழிகளையும் கண்டு, நவகோடியார், பரவச மடைந்த காலம் ஒன்று உண்டு, அது பேழைகளிலே, முத்து, பவழம், வைடூரியம் நிரம்பாததற்கு முன்பு!

அரண்மனையிலே செல்வாக்குப் பெற்றுள்ள நிலை யில் இருக்கிறோம்—இந்த மருதம் அரசிளங்குமரிகளுடன் அளவளாவி அகமகிழ்வதை விட்டு, அறமாம், நெறியாம், அன்பாம், அருளாம், சங்கமாம் சன்மார்க்கமாம், இவ்வித மான கவையற்றவைகளைக் கட்டி அழுகிறாளே என்று கவலைப்பட்டார் முதலில். மன்னன் மிரட்டிய பிறகோ,

மருதவல்லி மீது நவகோடிக்கு வெறுப்பே பிறந்து விட்டது. வெண்ணிலாவின் மீது ஏற்பட்ட மோகம், அந்த வெறுப்பை அதிகமாக்கி விட்டது. வெண்ணிலா, அரண் மனைப் பணிப்பெண். அலங்காரத்தால் அழகுக் குறை வையும், ஆடல் பாடலால் வஞ்சகத்தையும் மறைத்துக் கொண்டிருந்த மயக்கு மொழியினள்.

நவகோடியாரின் மனைவியாக இனியும் இருத்தல் இயலாது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டாள் மருதம். நள்ளிரவுச் சந்திப்புகளும், அவசர அணைப்பு களும் போதாது. மாளிகையிலேயே வெண்ணிலா வந்திருக்க வேண்டும் என்ற அளவுக்கு ஆசைக்கனல் புகுந்து விட்டது நவகோடியார் உள்ளத்தில். எனவே கவிராயருக்கு ஓலை அனுப்பப்பட்டது. மகளைக் கண்டு அறிவுரை கூறி, ஒழுங்காக நடந்து கொள்ளச் சொல், இல்லையேல், உன்னோடு அழைத்துச் செல் என்பதே ஓலையின் கருத்து— வெண்ணிலாவின் வெற்றிகளிலே அதுவும் ஒன்று—அதிக விலை கொடுத்தும் அந்த வெற்றியை அவள் பெறவில்லை, இரண்டொரு 'இச்' சொலிகள் மட்டுமே செலவிட்டாள்.

மக்கள் மன்றத்தின் எதிர்காலமே, மருதவல்லியின் நிலை என்ன ஆகிறது என்பதைப் பொருத்திருந்தது. பொறி பறக்கப் பேசினாள்; அறம் என்றாள். போர் என்றாள், முழக்கத்துக்குக் குறைவில்லை. எனினும், வசதியான மாளிகை வாழ்வை இழக்க நேரிடும் என்று தெரிந்ததும், மருதவல்லி, கொள்கையைக் கட்டிப் பரண்மீது போட்டு விட்டு, சீமாட்டி வாழ்வையே நடத்துகிறாள் என்ற நிலை ஏற்பட்டு விட்டால் மன்றத்திலே திகைப்பு மிகுந்துவிடும், மூடுவிழாதான் பிறகு! மருதவல்லி இதனை நன்கு அறிந் திருந்தாள். மனப்போர் பலமாக, மக்கள் மன்றத்தின் எதிர்காலம், தன் முடிவுடன் இணைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தாள். காட்டிக்கொடுக்கும் கயமைக்குணம் அவளி டம் தலை காட்ட மறுத்தது. ஆனால், கணவனைவிட்டு விலகுவது, கொள்கைக்காக என்ற உண்மையை அறியாத மக்கள் கோணல் நடத்தைக்காரியோ என்று சந்தேகித்தால்

என்ன செய்வது என்ற சஞ்சலம் மட்டும் அவளை வாட்டி வந்தது. வெண்ணிலா வீண் வதந்திகளைப் பரப்புவாள் என்ற அச்சமும் இருந்தது மருதவல்லிக்கு. தலையணை நனைந்தது, கூந்தல் பளபளப்பை இழந்தது, இறுதியில் சஞ்சலத்தையும், அச்சத்தையும் கடந்தாள். கவிராயரிடம் தன் உள்ளக்கிடக்கையை ஒளிவு, மறைவு இன்றி எடுத்துரைத்தாள்.

''நான் பெருமை அடைகிறேன் மகளே! பெருமை அடைகிறேன்! வீரமும் அறமும் உருவெடுத்ததுபோல் இருக்கிறாய். வா, அம்மா! இனி நாம் நமது இல்லம் செல்வோம்' என்று கவிராயர் கூறியபோது, நீண்ட நாட்களாக அவளை விட்டுப் பிரிந்திருந்த புன்னகை திரும்பிவந்து தவழ்ந்தது.

''தொலைந்தால் போதும். மனைவியாகக்கொண்ட தோஷத்துக்காகப் பணம் வேண்டுமானாலும் அழுகிறேன்'', என்று நவகோடியார் கூறியபோது, ''பணமா! வேண்டாமப்பா.....உன்னிடம் இருப்பது அது ஒன்றுதானே, கட்டிக் காத்துக் கொண்டிரு'' என்று முதியவர் கூறினார். மருதவல்லி தாக்க வந்த நவகோடியாரைத் தைரியமாகவே தடுத்து நிறுத்தினாள். தந்தையும் மகளும், மாளிகையை விட்டு வெளியேறினார்கள் — மன்னன் மகிழ்ந்தான், வெண்ணிலா விருந்தளித்தாள் தோழிகளுக்கு!

விளக்கமில்லாத மக்கள், தன் மகளைக் குறித்துக் கேவலமாகப் பேசுவர் என்பதை எண்ணி, கவிராயர் சிறிது ஆயாசமடைந்தார், எனினும், தூற்றலைத் தாங்கிக் கொண்டு, தூய வாழ்க்கையாலும், தொண்டின் சிறப்பாலும், மக்களின் ஏளனத்தையும், வீழ்த்தவல்லவள் மருதவல்லி என்ற தைரியம் அவருக்கு இருந்தது. கிராமம் சென்று, சிறார்களுக்கெனப் பள்ளியொன்று அமைத்து அதிலே மருத்தைப் பணியாற்ற ஏற்பாடு செய்வது என்று திட்டமிட்டார். மருதவல்லியோ மனதிலே வேறோர் திட்டம் வகுத்து வைத்திருந்தாள். ஊர்க்கோடி வந்ததும்,

தந்தையின் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, மருதம் ''அப்பா! இனித் தாங்கள் வீடு செல்லலாம் நான் போக வேண்டிய இடம் இதோ'' என்று கூறி, புத்த மார்க்க போதனைக்காக அமைத்திருந்த மடாலயம் ஒன்றைக் காட்டினாள். ஒரு கணம் திகைத்துப் பேனார் கவிராயர்—எனினும் மாற்ற முடியாத முடிவு அது என்பதையும், மக்களின் கேலியும் எதிர்ப்பும்கூட மகளைத் தீண்டமுடியாத நிலையை தரத்தக்க திருஅகம் அந்த இடம் என்பதையும் உணர்ந்தார். ''மகளே! தடை கூற நான் யார்? தள்ளாத பருவம் எனக்கு, உன் துணை கிடைக்கும் என்று எண்ணி னேன், தூய ஒளி உன்னை அழைக்கிறது. குழந்தாய்! சென்று சேவை செய்! நான் என் கடைசி மூச்சு இருக்கும் வரையில் அறிவுப் பணிபுரிந்தே வருவேன்'' என்று கூறினார். மருதவல்லி மடாலயம் சேர்ந்தாள், கவிராயர் கிராமம் சென்றார், வெண்ணிலா நவகோடியார் மாளிகை புகுந்தாள்!

*

மக்கள் மன்றம் மகிழ்ந்தது. மருதவல்லியின் 'தியாகம்' மன்றத்தின் பெருமையை மண்டிலம் அறியச் செய்தது. கொள்கைக்காக வாழ்வின் சுவையை இழக்கும் பண்பு வளரும், புத்தமார்க்கம் வெல்லும் என்ற நம்பிக்கை பலப்பட்டது. மன்னன் மார்த்தாண்டனுக்கு அடக்க முடியாத கோபம். இனித் தாக்கித் தீருவது என்ற முடிவுக்கு வந்தான்—தாக்கீதுகள் கிளம்பின, புத்த மடாலயங்களைக் கலைத்து விடும்படியும், சதிகாரர்களைச் சிறைபடுத்தும் படியும். மருதவல்லி தங்கியிருந்தது, புத்தமடாலயம் கூட அல்ல, புத்த மார்க்கம், அளித்த நன்னெறியின் மாண்புகளை மக்களிடம் எடுத்துரைத்து, மாசுதுடைக்கும் பிரசாரம் புரியும் அமைப்புத்தான் எனினும், அந்த மடாலயத்துக்கும் மக்கள் மன்றத்துக்கும் இருந்த தொடர்பைக் காரண மாகக் காட்டி, புதிய மார்க்கப் போதனை என்ற திரை மறைவில் வெளிநாட்டு வேந்தனை வரவழைத்து அரநாட்

டைத் தாக்கச் சதி செய்கிறார்கள் என்று மன்னன் மார்த் தாண்டன் கூறினான்—சட்டம் கொட்டலாயிற்று. மருத வல்லி மகிழ்ந்தாள். அறநெறிப் போதனையில் ஈடுபட்ட மக்கள் மன்றம், ஆதிக்கம் புரியும் அரசனை அச்சமடையச் செய்திருக்கிறது என்பதை எண்ணிப் பெருமகிழ்வு கொண்டாள். இதுகள் கத்திக் காணப்போகும் காரியம் என்ன, இவர்கள் என்ன செய்துவிடமுடியும், என்று இறுமாந்து கிடந்த மன்னன், இவர்களைச் சிறையிலே தள்ளினால் மட்டுமே, அரநாடு தன் ஆதிக்கத்தில் இருக்கும் என்று எண்ணிட வேண்டிய கட்டம் இவ்வளவு விரைவிலே வந்து விட்டதே என்பதை எண்ணிப் பூரிப்பும் பெருமையும் அடைந்தாள். சிறைக்கு மட்டுமல்ல, சித்திரவதைக்கே தயாராக இருக்கிறார்கள் தன் நண்பர்கள் என்பதைக் கண்டறிந்தபோது, மருதவல்லிக்குப் பெருமை ஓங்கி வளர்ந்தது. வெற்றி! வெற்றி! என்று தனக்குள் கூறிக்கொண்டாள். 'பிடி! அடி! என்று மன்னனுடைய போர் வீரர்கள் கொக்கரித்தனர். மருதவல்லியின் செவியிலே, 'வெற்றி! வெற்றி!' என்ற சத்தமே கேட்டது.

''உண்மையைக் கூறிவிடு. சதித்திட்டம் என்ன?''

''திட்டம் என்ன என்று கேள்—சதி ஏதும் கிடையாது. மமதை நிறைந்த மன்னன், கபடம் நிறைந்த குரு, இந்த இடுக்கிலே சிக்கிச் சீரழியும் மக்களை அறிவு பெறச் செய்து, விடுவிப்பதே எமது திட்டம்.''

''விடுதலைப் போரா! வீராங்கனையே! விழி, வேலாகுமோ! மொழி கணையோ! மன்றமாம், மன்றம்! நாட்டுக்கும் மதத்துக்கும் நாசம் தேடும் காலிகள் கூடிடும் குகைக்குப் பெயர், மன்றம்!''

''எது அப்பா. காலிகள் கூட்டம்? உத்தமமான கொள்கைக்காக உயிரையும் இழக்கத் துணிந்து, ஊராள்

வோனிடம் ஊழியம் செய்து, கொழுக்கும் உலுத்தர்களின் உறுமலைச் சட்டை செய்யாது மக்களின் நல்வாழ்வுக்காக வும் மார்க்கத்தின் மாசு போக்கவும் பாடுபடும் நாங்களா காலிக் கூட்டம்?''

சிறை விசாரணைக் கூடத் தலைவனால் அதற்குமேல் பேச முடியவில்லை. மருதவல்லியின் பேச்சிலே கனல் தெறித்தது. உடலிலே இரத்தம் பீறிட்டு வருமளவு சவுக்கடி விழுந்தது. பதறவில்லை! மருதவல்லியின் அஞ்சா நெஞ்சு கண்ட மற்றவர்கள் கொஞ்சநஞ்சம் கொண்டிருந்த அச்சத் தையும் நீக்கிக் கொண்டனர். விடுதலை தருவதாயினும், தமது பிரச்சாரத்தை விடமுடியாது என்று சூள் உரைத் தனர். எங்கிருந்து 'இதுகளுக்கு' இவ்வளவு துணிவு பிறந்தது? எங்கோ உலவிய புத்தனுக்கு இப்படி, நாடெங்கும் படை களா! என்ன ஆச்சரியம்! என்று எண்ணினான், சிறைகூடத் தலைவன்—அவனையும் புத்தமார்க்கம் தழுவ முனைந்தது— மிக்க சிரமப்பட்டு அதனைத் தடுத்து நிறுத்தினான்.

✱

அரநாடு புரட்சியைப் பொசுக்கியே தீரும். புது மார்க்கம் புக இடமளிக்காது, என்று முழக்கமிட்ட மார்த் தாண்டன், அறநெறிப் பிரச்சாரம் செய்துவந்த மருவதல்லி போன்றாரைச் சிறையிலே தள்ளியதோடு விடவில்லை, இதனையே வாய்ப்பாகக் கொண்டு, 'வருவாய்' தேடவும் ஒருவழி வகுத்துக்கொண்டான். புரட்சிக்காரர்கள், புது மார்க்கத்தைப் புகுத்த முனைவோர், ஆகியோரைச் சிறைப் படுத்துவதுடன், அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது என்று திட்டமிட்டான். துளியும் தொடர்பு அற்ற பல செல்வர்களையும், புது மார்க்கத்தவர் என்ற சந் தேகத்தின் பேரில் சிறையில் தள்ளி, பெரும்பொருள் அபராதம் செலுத்தச் செய்தான்—வளமிக்க வயல்கள், சிங்கார மாளிகைகள், பொற்குவியல்கள், பறிமுதலாயின! பணம் படைத்தோர்களிடையே புதிய பீதி உண்டாயிற்று. புதிய மார்க்கத்துக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை

என்பதை எடுத்துக் காட்டுவதற்காக, தேரும் திருவிழாவும், அபிஷேகமும் ஆராதனையும் பழைய கடவுளருக்குச் செய்து, 'பக்தர்' கோலத்தைக் காட்டினர், பலர், வெண்ணிலா வேலுடையான் கோயிலுக்கு நடத்திய உலா உற்சவம், நவகோடியாரின் அடிவயிற்றைக் கலக்கிவிட்டது—அவ்வளவு பெரும் செலவு—வெண்ணிலாவுக்கு ஊர்ப்பிரமுகர்கள், உயர் குடும்பத்தினரின் புகழ்மாலை கிடைத்தது! வெண்ணிலாவின் 'பக்தி' ஒளி குறித்து அரண்மனையிலும் பேசப்பட்டது. நவகோடியாருக்கு வர இருந்த ஆபத்தை நீக்கிவிட்டதாக வெண்ணிலா கருதி மகிழ்ந்தாள்—ஆனால், வேல் பாய்வது போலச் சேதி வந்தது, மருதவல்லியின் மாஜி கணவன் என்ற காரணம் காட்டி நவகோடியாரையும் மன்னன் குற்றம் சாட்டப் போகிறான் என்று தெரிந்தது. வெண்ணிலா விம்மினாள்.

*

''கடுகடுத்த முகமல்லவா காட்டினாய், கள்ளீ! காவி உடைக்கு ஏற்றபடி நடந்துகொள் என்று ஏசினாயே! உன் கண்கள் கமலம் என்றேன், பவளம் உன் அதரம் என்றேன், முத்துப் பற்கள் என்றேன். செந்தேனே! என்றேன்—ஆண்டிக்கு ஆகாது இந்தக் காரியம் என்றல்லவா, அன்று சொன்னாய். அறிவிலி! அன்று நான் ஆலயத்துக்கு மலர் தொடுத்து அளிப்பவனாக இருந்தேன் என்கிற அலட்சியம்தானே உனக்கு! இன்று நான் மார்க்க விசாரணைக்கூடத் தலைவனாகிவிட்டேன். காலடி வீழ்கிறாய், அல்லவா? உன் மயக்கு மொழிக்கு நான் வீழ்வேன் என்று எண்ணாதே. நவகோடி கிடைத்து விட்டான் என்ற மண்டைக் கர்வத்தில், இருந்தாய். படு!படு! அவன் சொத்துப் பறிமுதலாகும்! அவனுடன் இருந்த உனக்கும் சிறைதான்! சிரிக்கவும் தைரியம் வருகிறதே உனக்கு! இந்தச் சாகசத்துக்கு, நான் பலியாகமாட்டேன் மோகனப் பார்வையைக் கண்டு நான் ஏமாறமாட்டேன்! ஏ ! வெண்ணிலா! சற்று விலகியே நில்! ஆடை நெகிழ்ந்தால், என் உறுதி ஒன்றும் கவிழ்ந்துவிடாது.

அந்த ஆட்கொல்லிப் பார்வையை வேறு ஏமாளி மீது செலுத்து. போ! போ! இங்கு ஏன் நிற்கிறாய்! என் அருகே வராதே! சீ! எழுந்திரு, என் பக்கத்தில் ஏன் உட்காருகிறாய். பத்தினித் தங்கமல்லவா நீ! என்னைத் தொடலாமா! வேண்டாம், வேண்டாம், உன் சரசம்! விளக்கை அணைக் காதே! விடு! விடு! போடி மாயக்காரக் கள்ளி! யாருக்கு வேண்டும் உன் முத்தம் ஊஹூம்..முடியாது...வேண்டாம்.. கீழே தள்ளிவிடாதே... வெண்ணிலா! வெண்ணிலா... அன்பே! இவ்வளவு ஆசையை எங்கெ ஒளித்து வைத்துக் கொண்டிருந்தாய்...இந்த இன்பத்தைப் பெற நான் எவ் வளவு ஏங்கிக் கிடந்தேன்...இன்று தான் உன் திருஉள்ளம் இடமளித்ததா...தேனே! தேவாம்ருதமல்லவா தருகிறாய்! பேசாதே...நீ பேசவே கூடாது...உன்னை நான் விடவே மாட்டேன்...தன் உடலில் பாதியை உமையவளுக்குத் தந்த சிவமதக்காரனல்லவா, நான்! சக்தி! நம் சக்தி! ஆஹா! இந்த விருந்தை நவகோடியானல்லவா பெற்றுவந்தான்... கண்ணே! வெண்ணிலா!...கட்டளையிடு...என்ன செய்ய வேண்டும், அவனைக் காப்பாற்றுவதா, உனக்காகச் செய் கிறேன்...காரியம் முடிந்ததும் மறந்து விடுவாயோ என்னை ...இந்த அன்பு நிலைத்து இருக்குமா...அடிக்கடி வருவா யல்லவா... அன்பே இன்பமே...

*

மார்க்கத்தைக் கெடுப்பவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்காக நிறுவப்பட்ட தனி விசாரணைக் கூடத் தலைவன் தானப்பனின், படுக்கை அறைப்பதிகம் மேலே இருப்பது. வெண்ணிலாவுக்காக, தானப்பன் பதிகம் பொழிந்தான், அவள் அதற்கேற்ப அபிநயவிருந்தளித்தாள். நவகோடியார் தப்புவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. ஒளி நிரம்பிற்று அறையிலும் வெண்ணிலாவின் மனதிலும்.

*

நவகோடியாரைக் காப்பாற்றுவது மட்டுமா, சிறையிலே உள்ளவர்கள் அனைவரையும் விடுவிக்கவும்

செய்யலாம், வெண்ணிலாவுக்காக, என்றுதான் தானப்பன் எண்ணினான், அவள் மகிழ்வளித்தபோது. கதிரவன் கிளம்பினான், மனதிலேயும் புது எண்ணம் உண்டாயிற்று. பொருளும் தட்டிப்பறித்தாக வேண்டும் என்று திட்டமிட்டான். நவகோடி வருவான் என்பது தெரியும், வெண்ணிலா, உருத்திராட்ச மாலையை அறுத்தபடி. அதைத் தானே அவனிடம், முன்னாள் இரவு சொன்னாள். மறந்து விடவா முடியும்!

''புத்தமதத்தைப் புகுத்த அல்லவா சதிசெய்கிறார்கள். இரக்கம் காட்டலாகாது இந்தத் தீயவர்களிடம்—திரு நெறியை ஒழிக்கத் திட்டமிடுகிறார்கள்.''

''ஏழை எளியவர்களை எப்படியோ மயக்கி விட்டார்கள்.''

''இல்லாதவனிடம் ஆத்திரமூட்டினால் எதையும் செய்வானல்லவா!''

''ஒரு பிரபல வியாபாரியின் மனைவியும் இதிலே சேர்ந்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.''

''மன்னன் சீற்றத்துடன் இருக்கிறான்.''

தானப்பன், அடுத்த தானப்பனுடன் உரையாடல் நடத்துகிறான், வெண்ணிலாவின் ஏற்பாட்டின்படி, நவகோடியார் வருகிறார், காலடி வீழ்கிறார்.

''ஐயனே! என்னைக் காப்பாற்றக் கோருகிறேன். என் மனைவி...மகாபாபி...''

''பதறாதே அப்பா, பதறாதே! என்ன செய்யலாம் உன் தீவினை அவள் உருவில்!''

''எப்படியாவது அவளை மீட்டாகவேண்டும். அவளுக்காக அல்ல. என் மனைவி இப்படிப்பட்டவள் என்று தெரிந்தால் என் மானம் போகும். வியாபாரம் நாசமாகும்''.

''உண்மைதான், சொத்தும் பறிமுதலாகக்கூடும்''

''ஆமாம் அரசன் கடுங்கோபத்துடன் இருக்கிறார். அரசைக் கவிழ்க்கச் சதிசெய்தால் கோபம் வராமலிருக்குமா''

''மன்னன் கோபிப்பது மணிமுடி பறிபோகுமோ என்பதற்காக அல்ல. மதம்—நமது மதம்—புராதன மார்க்கம்—வேத நெறி—இதை நாசம் செய்ய ஒரு கூட்டம் கிளம்பி இருக்கிறதே என்ற கோபம்தான்!''

''தாங்கள்தான் நல்வழி காட்டவேண்டும்!''

''நேற்றிரவு வெண்ணிலா ஒளியுடன் இருந்த நேரம், நான் இது குறித்து யோசித்தவண்ணமிருந்தேன். நவ கோடியாரே! சதிபுரியும் ஒரு பெண்ணை ஏனய்யா துணைவி யாகக் கொண்டீர். உமது கண்களை மறைக்கும் அழகியோ அவள்! எவ்வளவு அழகு இருந்தாலும், ஏனய்யா! மதத்தை நாசமாக்குபவளிடம் மையல் கொள்ளலாமா!''

''அவளைக் கண்டால், யாரும், சதிகாரி, என்று கூற முடியாது ஐயனே!''

''முகம் நிலவு என்றே வைத்துக்கொள்ளுமய்யா. பொற்கொடி, பூங்கொடி! என்றுகூடப் புகழ்ந்து கூறத் தக்கவள் என்றே வைத்துக்கொள்—அதற்காக—ஒரு பெண்ணின் பிரேமைக்காக, மார்க்கத்தை இழப்பதா?

''நான் அவளை இழக்கச் சம்மதித்தேனே...முன்னால் இருந்த தொடர்பல்லவா, இன்று ஆபத்தாக உருவெடுக் கிறது''

''ஏதாகிலும் செய்ய இயலுமா என்று யோசிக்கிறேன், இவ்வளவு ஆபத்தும் வந்திராது, உன் போன்றவர்கள் சரியாக நடந்துகொண்டிருந்தால். மடம்கட்ட, மகேஸ்வர பூஜைசெய்யப், பணம் கேட்கும்போது கையை விரித்து விடுகிறீர்கள்''

''காணிக்கை தரச் சித்தமாக இருக்கிறேன்...மருத வல்லியைக் குற்றமற்றவள் என்று கூறிவிட்டால் போதும்''

''பெயர் மருதவல்லியா! அழகான பெயர். வணிகரே! உமக்கு என்ன வயதாகிறது, அறுபது இராது?''

''ஐம்பது முடிந்தது — கவலையால் முதுமை தெரிகிறது.''

''இந்த மருதம் இருபதாண்டுப் பெண்ணாமே...''

''ஏறக்குறைய முப்பது இருக்கும்...''

''சரி, மருதம், சித்த சுவாதீனமற்றவள் என்று கூறி விடுகிறேன்—மருத்துவருடைய வாக்குமூலமும் கிடைக்கச் செய்கிறேன்—விடுதலை கிடைத்துவிடும்—விவரமாக நான் ஏதும் கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன்—வில்வ பூசைக்காக, ஒரு சிறு கிராமத்தைத் தானமாகத் தந்தால் போதும்.''

''கட்டளைப் படி நடந்துகொள்கிறேன்.''

*

வெண்ணிலாவின் விருந்தும் சீமானின் காணிக்கையும் பலனளித்தது, சிறைகூட அதிகாரியிடம், நவகோடியார், தானப்பன் தந்த தாக்கீதையும் மருத்துவர் தந்த ஓலையையும் எடுத்துக்கொண்டு சென்றார்.

''அப்படியா? நானே சந்தேகப்பட்டேன்'' என்றான் சிறைக்கூடத் தலைவன்.

''வெளியே சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு இருந்தேன் வெகுகாலமாக'' என்றான் வணிகன்.

விடுதலைக்கு உத்தரவிட்டான்—விழுந்து விழுந்து சிரித்தாள் மருதவல்லி.

''பைத்யமா! எனக்கா! யார், என் கணவரா கூறினார்? உண்மைதானய்யா, உண்மைதான்! பலமுறை, பைத்யக்காரி, நமக்கு என்னகுறை, மாளிகை இருக்கிறது மனோகரமாக, செல்வம் இருக்கிறது ஏராளமாக, ஆனந்தமாக

அனுபவிப்பதை விட்டு, ஊர்த்தொல்லையை உன்மேல் போட்டுக்கொண்டு அவதிப்படுகிறாயே, இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று அவர் கூறியிருக்கிறார். பைத்தியமய்யா, எனக்கு, பைத்யம்! உல்லாச ஓடம் கொந்தளிக்கும் கடலிலே செல்லக் காண்கிறேன். ஓடத்திலே, பார்வை பழுதான பணந்தேடிகள் கூத்தாடக் காண்கிறேன், குழப்பம், பீதி, ஏற்படத்தானே செய்யும்!'' என்று மருதவல்லி கூறக்கேட்ட, சிறைகூடத்தின் தலைவன், பரிதாபப்பட்டான் பித்தம் முற்றிக்விட்டது என்று எண்ணிக் கொண்டு. மாளிகைக்கு அழைத்துச் சென்றான் நவகோடி. வெண்ணிலாவின் விழி, மருதத்தை ஓராயிரம் கேள்வி கேட்டது. மருதவல்லியின் சிரிப்பின் பொருள் அவளுக்கு விளங்கவில்லை.

''பெயர், வெண்ணிலாவா! அழகான பெயர். அவருக்கு உன்னிடம் நிரம்ப ஆசையா? இருக்கும், இருக்கும். ஆவலைக் கிளறும் விழிதான் உனக்கு. வெண்ணிலா! நான் அவருக்கு ஏற்றவளாக முடியாமற் போய்விட்டது. உன்னால் அவருக்கு அந்தக் குறை தீரட்டும்'' என்று மருதவல்லி சொல்ல, வெண்ணிலாவுக்கு இலேசாகப் பயமே உண்டாயிற்று. மன்னனின் கோபத்தைத் தடுக்கத் தந்திரமாக, மருதவல்லிக்குப் பைத்யம் என்று கூறச்செய்தோம், பார்க்கப் போனால், இவளுக்கு உண்மையாகவே பைத்யம்போல் அல்லவா இருக்கிறது என்று எண்ணித் திகிலடைந்தாள்.

*

நீண்ட நாட்கள் மருதவல்லியை மாளிகையில் அடைத்து வைக்க முடியவில்லை. வெண்ணிலாவுக்கு வேறோர் பயமும் புகுந்துவிட்டது. மருதவல்லியை மீண்டும் நவகோடி விரும்ப ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம். எனவே மருதவல்லியை விரட்டத் திட்டமிட்டாள். இதற்குள் கவிராயர் வந்து சேர்ந்தார், சேதியைக்கேள்விப்பட்டு, தந்தையும் மகளும் மீண்டும் மாளிகையை விட்டுக்கிளம்பினர்.

''மேனி வாடி வதங்கிவிட்டது மகளே!''

''மனம் வளமாகிவிட்டதப்பா''

''கறுத்துப்போய்விட்டிருக்கிறாய் கண்ணே!''

''உடல்தானே! உள்ளத்திலே புதிய ஒளி இருக்கிறதப்பா இப்போது''

தந்தையும் மகளும், கவலையற்றுப் பேசுகிறார்கள்—மாளிகையை இழந்தோம், இன்ப வாழ்வு இழந்தோம் என்பது பற்றிய கவலையற்று.

*

''என்னங்க! புரட்சி எப்ப வருதுங்க. இந்த ஆடியிலேயாவது வருங்களா? என்று கேலி பேசுகிறார்கள் பேதைகள்.

''டேய், அதோ, கிழவன் கைத்தடியைப் பார்த்திங்களா! மந்திரக்கோலடா அது, மந்திரக்கோல்'' என்று ஏளனம் செய்கிறான் ஒரு காலி.

மருதவல்லி சிரிக்கிறாள். ''அப்பா! இவ்வளவு பேர்களையும் குணப்படுத்த வேண்டும். வேலை நிரம்ப இருக்கிறது ஓயாமல் உழைத்தாக வேண்டும்'' என்று கூறுகிறாள்.

*

ஓயாமல் உழைக்கிறார்கள் இருவரும், திக்கற்றோருக்கு உதவி புரிகிறார்கள். கலனான ஒரு கோயிலில் குடி ஏறி, அங்குக்கூன், குருடு, செவிடு, ஊமை, கைகால் இழந்தவர் ஆகியோரைத் தங்கவைத்து, பிச்சை எடுத்தும், சிறு உதவித் தொகைகள் திரட்டியும், அன்னமிடுகிறார்கள். திக்கற்றவர்கள் இருப்பது பற்றி அதுவரை துளியும் கவலைப்படாத அரசு, ஆலயத்தை அவர்கள் தமது இருப்பிடமாகக் கொண்ட செய்தி தெரிந்ததும், வேகமாகக் கிளம்பிற்று அவர்களைக் காப்பாற்ற அல்ல, ஆலயத்தைப் பாதுகாக்க!

''ஏ! கிழம்! இதென்ன தண்டச் சோற்று மடமாக்கி விட்டிங்க, தண்டாயுதபாணி கோயிலை'' அரசனுடைய படையினர், முதியவரைக் கேட்கிறார்கள், மருதவல்லி பதில் கூறுகிறாள்.

''கோயில் கலனாகி விட்டது, யாரும் இப்போது இங்கே வருவதில்லை''

''அதனாலேயே, இதுகளுக்கு வீடு ஆக்கிவிட்டாயா, கோயிலை?''

''வௌவால்கள் தானய்யா இங்கு வட்டமிட்டுக் கொண்டிருந்தன!''

''வாயாடியாச்சே நீ, தெரியுமே தேவாலயத்தை அசுத்தமாக்கினால் என்ன தண்டனை தெரியுமா?''

''அசுத்தமாக்கவில்லையே. இங்கே இருந்த குப்பைக் கூளத்தை நான்தான் கூட்டி எடுத்து அப்புறப்படுத்தினேன்.''

''வீண்பேச்சுப் பேசாதே. நாளைக் காலை வருவோம். இடம் காலியாக இருக்கவேணும்—இல்லே...மறுபடியும் கம்பி எண்ணவேண்டியதுதான்!''

மிரட்டிவிட்டு, மேலதிகாரியிடம் கூறச் சென்றார்கள் படையினர். பெருமூச்செறிந்தபடி, மருதவல்லி திகைத்துக் கிடந்த திக்கற்றோரைப் பார்த்துவிட்டு, ''இந்தக் கண்றாவிக் காட்சியைக் காண மறுக்கிறார்கள் கருணா மூர்த்திகள்'' என்று கூற, முதியவர், ''நேரம் ஏது மகளே! தேரும் திரு விழாவும் காணவே காலமெல்லாம் செலவாகிவிடுகிறதே! கை கால் போனதுகளைக் காண நேரம் ஏது! வா, வா இவர்களை அழைத்துக்கொண்டு வேறிடம் போகலாம்'' என்றார்.

''வேறு எங்கே அப்பா போவது?'' என்று விசாரத் துடன் மருதவல்லி கேட்க, கவிராயர் ஒளி நிரம்பிய கண் களால் அவளைப் பார்த்தபடி, ''எங்கே போனார் புத்த பிரான்! காடு, மேடு, எங்கெங்கோ சென்றாரே, அழகான

அரண்மனை அவருக்கென்று இருந்தும், அன்னக்காவடிகள் நாம்—எங்கு போனால் என்ன! வா, மகளே, வா, மரத்தடியெல்லாம் நமது மாளிகைதான்'' என்று கூறினார். மருதவல்லி, தந்தையின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டு, ''என் குருவப்பா, நீங்கள் எனக்கு ஞானக்குரு!'' என்று கனிவுடன் கூற்றினாள். பெரியதோர் மரத்தடி புதிய மாளிகையாயிற்று. தொடர்ந்து தொண்டு செய்து வந்தனர்.

*

வெண்ணிலாவும் தொடர்ந்து தொண்டு செய்துவர வேண்டியிருந்தது—தானப்பன் விட மறுத்தான். துவக்கத்திலே அவளுக்குக் கோபம்தான், நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு அவன் தன்னைக் கொடுமை செய்கிறானே என்பதால். பிறகோ அவளுக்கு அது பழகியும் விட்டது, பலனும் கிடைக்கலாயிற்று. சந்தேகம் கிளம்பிற்று. நவகோடிக்கு, கேட்கும் துணிவு எழவில்லை, துணிவு எழக் காலம் பிடித்தது. ஆனால் அதற்குள் வெண்ணிலா வேங்கையாகி விட்டாள்.

''எல்லாம் உனக்கு ஆபத்து வராமல் தடுக்கத்தான்'' என்று நவகோடியிடம் கூறியனாள். ''என்னால் அந்தக் கிழத்தின் தொல்லையைச் சகித்துக்கொள்ள முடியாது'' என்று தானப்பனிடம் கூறினாள். தானப்பன் சீமானாகி விட்டது, வெண்ணிலாவுக்குத் தெரியுமல்லவா!

தானப்பன், அடிக்கடி மிரட்டலானான் சீமானை. சீமானோ வேகமாகச் சாமான்யராகிக் கொண்டு வந்தார்! இந்நிலையில், வெண்ணிலா தானப்பன் அமைத்துக் கொடுத்த புதிய மாளிகைக்கே சென்றுவிட்டாள். விசாரம் நவகோடிக்கு. ஆத்திரம்தான், ஆனால், என்ன செய்வது!

தானப்பன் புதிய வெடிகுண்டு வீசினான்.

''அடிக்கடி மன்னர் கேட்கிறார், உம்மைப்பற்றி. நான் பல தட்வை சமாதானம் சொல்லிப் பார்த்தாகிவிட்டது. எப்படியாவது மருதத்தைப் பழைய மார்க்கத்துக்குக்

கொண்டு வந்து சேர்த்தாகவேண்டும். அதை நீர் செய்து முடிக்காதவரையில் உம்மீது சந்தேகம் இருந்துகொண்டே தான் இருக்கும். எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும், என்மீது நொந்துக்கொள்வதில் பயனில்லை'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான்.

வெண்ணிலாவை அபகரித்துக் கொண்டான்-செல்வமோ கரைந்துவிட்டது—மிரட்டுகிறான் முரட்டுத்தனமாக! என் செய்வது, என்று துக்கித்தார் நவகோடி. தானப்பன், இந்தப் புதிய போக்குக் கொண்டதற்குக் தக்க காரணமும் ஒன்றிருந் தது. புது மார்க்கம் சென்றவர்களை ஆசை காட்டியும் அச்ச மூட்டியும் பழைய மார்க்கத்துக்குத் திரும்பி வந்து சேரும் படி செய்வது திட்டமிட்டு நடந்து வந்தது. திரும்பி வந்த வர்கள் பழைய மார்க்கத்தின் பெருமைகளை எடுத்துக் கூறிய துடன், புதிய மார்க்கம் கேவலம் நாத்திகம் என்று கூறி வந்தனர். பழைய மார்க்கத் தரகர்கள் இந்த வேலையை வெற்றிகரமாக நடத்தி வந்தனர்.

''மயக்கமொழி கேட்டேன், கெட்டேன்!''

''மதுக்குடம் போலிருந்தது அவள் விழி, ஏய்க்கப் பட்டேன், நாத்திகனானேன்.''

''மண்டையிலே ஒரே குடைச்சல், கை கால் இழுத்துக் கொண்டது. கண் அவிந்து—போயிற்று, ஆண்டவன் கனவில் தோன்றிப் பாபிகளை விட்டு விலகு! புண்ய மார்க்கத்தில் வந்து சேர் என்று கூறினார். தவறை உணர்ந்தேன், புதிய மார்க்கத்தை விட்டுத் தொலைத்தேன்; உடனே தீவினை அகன்றது, தன்யனானேன்.''

இங்ஙனம் தப்புப் பிரசாரம் நடைபெற்றது, தெளி வற்ற மக்கள் மனதிலே, மீண்டும் புராதன மார்க்கத்திடம் பற்றுப் பலமாயிற்று.

மருதவல்லி, புதிய மார்க்கத்தை விட்டொழித்து புராதன மார்க்கத்தை மீண்டும் வந்தடைந்தால், பெரும் வெற்றி கிட்டும்—விருது தனக்குக் கிடைக்க வேண்டும்

என்பது தானப்பனின் எண்ணம். எனவே தேளானான். நவகோடி துடியாய் துடித்தார். மரத்தடி மடாலயம் விரிவடைந்தது—பொறுப்பும் பாரமும் வளர்ந்தது, தந்தையும் மகளும் தளராது உழைத்து வந்தனர், தோழர்கள் பலர் துணை நின்றனர். புத்த மதம் பரவியிருந்த மண்டலங்கள் சிலவற்றிலிருந்து உதவி அவ்வப்போது கிடைத்து வந்தது—உதவியைக் கடுகளவினதாக்கும் வகையில், வேறு மண்டலங்களிலே, புராதன மார்க்கத்தால் கொடுமைப்படுத்தப் பட்டுப் புகலிடம் தேடி வந்தவர்களின் தொகை பெருகிற்று. தொகை பெருகுகிறபோது, கடும் நோயும் படை எடுத்தது, மருத்துவரின் முயற்சி போதுமான பலன் அளிக்கவில்லை. இருமல், காசம், இளைப்பு, ஈளைகட்டி, இழுப்பு இப்படிப்பட்ட பல நோய்கள். பவழபஸ்பம் தயாரித்துத் தந்தால், கடும் நோயைக் களையலாம் என்றார் மருத்துவர். உயர்தரப் பவழமோ விலை அதிகம் மருதவல்லியைச் சுற்றிலுமோ அன்னக்காவடிகள்.

மருத்துவர், கிடைத்த மூலிகைகளைத் தருவார், பிறகு ஆயாசமடைவார். பவழபஸ்பம் செய்தால் நல்லது என்று பன்னிப்பன்னிக் கூறுவார். மருதவல்லி, நிலைமை கஷ்டமானதாகி வருவது கண்டு வருந்தினாள். அதேபோது, தானப்பனால் தாக்கப்பட்ட நவகோடியாரின் நிலைமையும் அவளுக்குத் தெரியவந்தது. பரிதாபப்பட்டாள்.

*

''படமெடுத்தாடும் பாம்பாகிவிட்டான் தானப்பன். பழைய மார்க்கத்துக்கு நீ திரும்பியாக வேண்டுமாம், இல்லையானால் என்மீது பழி தீர்த்துக்கொள்வானாம். என்ன செய்வேன் மருதவல்லி! அவனுடைய பேராசைப் பசியைப் போக்கப் பெரும்பணம் தொலைத்தேன். அதே முறையில் நீண்ட காலம் செய்து வரவும் முடியாது. என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னுடையதுதான். நீ, புதிய மார்க்கத்தவளாக இருக்குமட்டும் எனக்கு ஆபத்துதான்'' என்று புலம்பலானார் நவகோடியார்.

''வேறு நாடு சென்று விடுவோமா?'' என்று யோசனை கூறிய மருதவல்லிக்கு அவர் கூறின பதிலெல்லாம், ''இங்கே உள்ள என் நிலபுலம் தோட்டம், தோப்பு, வியாபாரம் இவை என்ன ஆவது?'' என்பதுதான்.

பவழபஸ்பத்துக்கு வழி என்ன என்று கண்டுபிடிப்பதா, இந்தப் பரிதாபத்துக்குரியவரின் ஆபத்தைத் தடுக்க என்ன வழி என்று கண்டறிவதா, என்ன செய்வாள் மருதவல்லி.

நோயாளிகள் மரணப்படுக்கையில் — மருத்துவர்கள் நிலைமையை எடுத்துக் கூறியபடி—நவகோடியார், தனக்கு வர இருக்கும் ஆபத்தை எடுத்துக் கூறியபடி, மருதவல்லியின் மனதிலே கடும்போர் மூண்டது. தானப்பன் நாள் குறித்து விட்டான், நவகோடியார் மருதவல்லியின் காலில் வீழ்வது தான் பாக்கி—மற்ற அளவு தீர்ந்துவிட்டது.

*

மருதவல்லி மாளிகை திரும்பினாள்—மரத்தடியினர் திடுக்கிட்டனர்—தானப்பன் கூட திகைத்துப் போனான்—நவகோடியார் களிப்புக்கூத்தாடினார். மருதவல்லி புதிய மார்க்கத்தவரைவிட்டுப் பிரிந்துவிட்டாளாம், பழைய மார்க்கத்தில் சேர்ந்து கொண்டாளாம் என்று ஊரார் பேசிக் கொள்ளலாயினர். சிலர் கேட்கவே செய்தனர்; மருதவல்லி புன்னகை புரிந்தாள், வேறுபதில் இல்லை, கவிராயர் கண்ணீர் சொரிந்தார்—மகளைப் போய்ப் பார்க்கவும் அவருக்கு மனம் இல்லை.

''பேதைப் பெண்! அவ்வளவுதான் அவளால் முடிந்தது!'' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

*

புதிய மார்க்கத்தைப் பொசுக்கிட அரசன் கடுமையான முறைகளைக் கையாண்டும், கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளப் புது மார்க்கத்தினர் முன்வருவதுகண்டு,

பழைய மார்க்கத்தைத் தம் பிழைப்புக்கும் ஆதிக்கத்துக்கும் வழியாக்கிக் கொண்டிருந்த பூஜாரிக் கூட்டம், திகைத்தது. ரசமான பாடல்கள், சுவையுள்ள காதைகள், களிப் பூட்டும் கூத்துகள் ஆகியவைகள் மூலம் புராதன மார்க் கத்தைப் புகுத்தும் பணியிலே, புது உற்சாகம் காட்டி வேலை செய்து பார்த்தனர். பலன் விரும்பிய அளவு ஏற் படவில்லை. விசாரப்பட்டனர்.

கொடுமைகளுக்கு ஆளான மக்களோ, புத்தர் உண்மையைக் கண்டறிய எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதை எண்ணினர். என்றும் தோன்றாத அளவுக்கு மனதிலே அவர்களுக்குத் தைரியம் ஏற்பட்டது.

மமதை நிரம்பிய மன்னர்கள், செருக்குமிகுந்த சீமான்கள், புத்த மார்க்கம் தந்த பொன்னொளியின் காரணமாகச் சீலர்களாகிவிட்டனர் என்று செய்திகள் பல பக்கங்களிலிருமிருந்து வந்த வண்ணமிருந்தன.

போக போக்கியத்திலே மூழ்கிக்கிடந்தவர்கள், புத்தரின் புத்சொளிக்கண்டு, ஆசைகளை அகற்றிக் கொண்டனர். சுயநலத்தை விட்டொழித்தனர் என்று செய்தி கிடைத்தது. அரசனுடைய அக்ரமத்தால் தாக்கப் பட்ட அர நாட்டு மக்கள், இன்றில்லாவிட்டால் நாளை, புத்தபிரானின் பொன்னொளி, இங்கும் பரவியே திரும் என்று நம்பினர். கொடுமைகளைக்கண்டு கொதித்து எழும் போக்கினரோ அக்ரம ஆட்சியை எதிர்த்தொழிக்க வேண்டும் என்று துடித்தனர்.

மக்கள் மனதை மாற்றிக்கொண்டு வரும் புத்தயப் புயல் ஒரு புறம்.

அக்ரம ஆட்சியை அழித்தொழிக்கவேண்டும் என்ற புரட்சிப் பொறி மற்றோர் புறம்.

இருபெரும் சக்திகளும் ஒன்று கூடிவிட்டால்? மன்னன் மார்த்தாண்டன் இதனைத்தான் எண்ணி அஞ்சினான்.

அரசனுடைய தயவு நமக்கு இருந்தும், மக்களுடைய எதிர்ப்பு வளருவதுகண்டு, பூஜாரிக் கூட்டம் கோபமும் வருத்தமும் கொண்டது. மக்களை, 'ராஜபக்தி—பழைய மார்க்க பக்தி' கொண்டோராக்குவதற்கான வழியிலே, தளராது உழைத்து வந்தனர்.

பழைய மார்க்கத்திலே ஓரளவு பற்று வைத்துக் கொண்டிருப்போரிலே சிலருங்கூட, மன்னனுடைய ஆட்சி முறையிலே காணக்கிடக்கும் கேடுகளை ஒழித்திட வேண்டு மென்பதிலே ஆர்வம் காட்டினர்.

மன்னராட்சியை ஆதரித்தவர்களிலே சிலர், மக்க ளுடைய எதிர்ப்புணர்ச்சிக்குக் காரணமே, பழைய மார்க் கத்தைத் தமது சுயநலத்துக்குப் பயன் படுத்தும் பூஜாரிக் கூட்டத்தின் புரட்டுத்தான் என்று எடுத்துரைத்தனர்.

இவர்களிடம் வாதாடுவதே, பூஜாரிக் கூட்டத்தினருக் குக் கடினமானதாக இருந்தது.

"அரசன் ஆண்டவனின் அம்சம்! ராஜனாவது, என்றால், பூர்வபுண்யவசந்தான் காரணம்."

"அரசன் அக்ரமம் புரிந்தால்? நாட்டுக்குக் கேடு தான், மக்களுக்கும் கேடுதான்...."

"அப்படிப்பட்ட ஆட்சியை எதிர்த்து ஒழிக்கும் கடமை மக்களுடையதல்லவா...."

"சிவ! சிவ! அரசனை எதிர்ப்பதா? யார் மக்களா? ஆட்சி முறையை மாற்றுவதா! மக்களா? மக்களுக்கு ஏது அந்த உரிமை? எப்படி முடியும் மக்களால்? ஆண்டவ னுடைய அம்சத்தை அழிக்கக் கிளம்புவது, ஆண்டவனை அவமதிப்பதாகுமே? ஆண்டவன் சும்மா விடுவாரா?"

"மக்கள் மடிகிறார்கள்! அவர்களுடைய சொத்து சூறையாடப்படுகிறது—சுதந்திரம் நசுக்கப்படுகிறது..."

''துக்ககரமான சம்பவங்கள்தான்!''

''கற்பழிக்கப்படுகிறார்கள் பெண்கள்! கட்டி வைத்துக் கொளுத்தப்படுகிறார்கள் ஆடவர்கள்!''

''மனம் பதறத்தான் செய்யும்!''

''கொதித்தெழும் மக்கள், எவ்வளவு வலிவுள்ள படையையும் எதிர்த்து ஒழிக்கும் வல்லமை பெறுவார்கள், சந்தேகமா? சிறைகளைத் தூள்தூள் ஆக்கிவிடமுடியும். சிங்காரக்கொலு மண்டபங்களை மண்மேடுகளாக்க முடியும்! தீயோனின் அரண்மனையைத் தீக்கிரையாக்க முடியும்!''

''முடியாது! முடியும் என்ற எண்ணம் கொள்ளவும் கூடாது. அவ்விதமான எண்ணம் கொள்வதே மாபாபம்!''

''பாபமா! மக்களைக் காப்பாற்றக் கிளம்புவதா மாபாபம்!''

''மதியில்லையே உனக்கு! உன்னையும் உன்போன்ற ஜீவராசிகளையும் படைத்து ரட்சிக்கும் ஆண்டவனுடைய காரியத்தைச் செய்ய, நீ, கிளம்புவதா! அவன் ஆணை கேட்டுத்தானே சூரியன் காய்கிறான், அவனோடு! சூரியனால், உலகையே பஸ்மீககரமாக்கிவிட முடியுமே, செய்கிறானா, செய்ய அனுமதிக்கிறாரா ஆண்டவன்! கடல் நீர் அவ்வளவையும் கண்மூடிக் கண்திறப்பதற்குள், கதிரவனால் குடித்து விடமுடியும்—அலைகள் நிரம்பிய கடலை மணற்காற்றடிக்கும் பாலைவனம் ஆக்கிவிடமுடியும்! சூரியன் செய்கிறானா? செய்ய விட மாட்டார் கடவுள்! சர்வசக்தி படைத்தவர், எம்பெருமான். அவர் அறிவார், எதை, எப்படி, எப்போது செய்ய வேண்டுமென்று! அவருக்குத்தான் தெரியும்!''

''ஆண்டவனுடைய வல்லமையை, யார் சந்தேகித்தார்கள்! அரசனுடைய அக்ரமத்தை அல்லவா, எதிர்த்து

அழிக்கவேண்டும், என்கிறோம். அந்த அக்ரமம் ஒழிக்கப் படாவிட்டால், மக்கள் வேதனையிலிருந்து விடுதலை பெற மாட்டார்களே!''

''எப்படி, எப்போது, மக்களின் வேதனையைப் போக்க வேண்டும் என்பது பகவானுக்குத் தெரியும், மழையைப் பொழியச் செய்பவன், நீயா? காற்றை வீசவைப்பவன், யார்?—நீயா? பைத்தியக்காரா! பைத்தியக்காரா!! அது போலவே தான் இதுவும். அரசனைத் திருத்தவும் ஆட்சி முறையை மாற்றவும் ஆண்டவனால்தான் முடியும். மக்களைச் சோதிக்க மகேசன், எத்தனையோ வழிகளைக் கையாள்வார்! மன்னனைக்கொண்டு, மேலும் மேலும் வரிகளைப் போடச் செய்வார்! காராக்கிரத்திலே மக்களை—தலைவர்களைக் கூட—தள்ளும்படி, மன்னனை ஏவுவார்! தாங்கமுடியாத அளவுக்குக் கஷ்டங்கள் எற்படுகிறபோது, மக்களின் நிலை எப்படி இருக்கிறது, நினைப்பு எப்படி இருக்கிறது, என்பதைக் கண்டு களிக்கக்கூடச் செய்வார்!''

''கொடுமைகளைச் செய்பவர் மன்னன்—மகேசன் அல்ல என்பதை மக்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டார்கள். அதனால்தான் மக்களிடம் எதிர்ப்புணர்ச்சி வீறிட்டு எழுகிறது.''

''முதலில் எழும்—பிறகு விழும்! தெரியுமா விஷயம், மாளிகை வேண்டாம், கணவனே வேண்டாம் என்று கூறி விட்டு, புது மார்க்கத்தாருடன் கூடித் திரிந்து வந்த மருத வல்லி, நமது புராதன மார்க்கத்துக்கே திரும்பி வந்து சேர்ந்து விடப்போவது!! சத்யம் வெல்லும்! பொறுமை தான் வேண்டும்.''

*

வேத நிந்தகர்கள்! சண்டாளர்கள்! பாஷாண்டி மத ஸ்தாபகர்கள்! ஆச்சார அனுஷ்டான விரோதிகள் என்றெல்லாம் கூறினோம்...''

''சர்வநாசம் சம்பவிக்கும்! சர்வேஸ்வரனின் கோபத்துக்கு ஆளாவீர்! என்று கூடத்தான் சொன்னோம்..''

''வெள்ளத்தை, வைக்கோற் போர்களைப் போட்டுத் தடுக்க முயற்சித்தோம்...பலன்...''

''பூஜ்யம்தான்! ஏன் மக்கள் மனதிலே பயம் தோன்ற வில்லை...கீறின கோட்டைத் தாண்டினால் ரௌரவாதி நரகம் சம்பவிக்கும் என்று நம்பி, நடு நடுங்கிக் கொண்டிருந்த மக்கள், இப்போது நிமிர்ந்து நிற்கிறார்கள்—நாம் அதிகமாக அதட்டினால், புருவத்தை நெறிக்கிறார்கள்—இப்படி ஆகிவிட்டதே நிலைமை...முன்பெல்லாம், ஸ்ரீமன் நாராயண மூர்த்தியுடைய லீலாவினோதங்களைப் பற்றிய திருக் கதைகளைக் கூறினால், எவ்வளவு பக்தி சிரத்தையோடு கேட்பார்கள்—எவ்வளவு உருகுவார்கள்—கோபால கிருஷ்ணன் குழலை எடுத்தார், அதரத்தில் வைத்தார் மதுரகீதம் பொழிந்தார். கீதம் கேட்டதும், கொல்லவந்த புலியும், சாக இருந்த பசுவும், அம்பு எய்திடச் சென்ற வேடனும், அவனால் இறந்திட இருந்த பறவையும், சகல ஜீவராசிகளும் பிரம்மானந்தமடைந்தன என்று கூறின போது, எவ்வளவு குதூகலமடைந்தார்கள்—கோவிந்த நாமத்தைப் பஜித்தார்கள்...''

''கோபிகைகளுடன் கண்ணன் பிருந்தாவனத்திலே ஆடிப்பாடி இருந்த ஆனந்தக் காட்சியை வர்ணித்தபோது, மக்களின் முகமெலாம், செந்தாமரையாகிவிடும்...''

காணிக்கை குவியும்—பூஜைகளோ அமோகம்—பூதேவர் என்ற பெயருக்கு ஏற்றபடியான நிலைமை நமக்கு...அந்தப் பொற்காலம் போயே விட்டதே!''

''வேள்வி என்றால், வீண் என்கிறார்கள்! யாகப்பசு என்று கேட்டால், ஜீவ இம்சை என்கிறார்கள்—தானம்என்று கேட்டால், அதிகாரப் பிச்சையா என்று மிரட்டுகிறார்கள், தவசிகள் என்று சொன்னால், எதைத்துறந்தீர்கள் என்று

கேட்டுக் கேலி செய்கிறார்கள்...சகிக்க முடியவில்லை, அவர்களுடைய போக்கை! புரியவில்லை, ஏன் இப்படி போக்கு மாறி விட்டது என்று! இதை நீக்கும் மார்க்கமோ துளியும் தெரியவில்லை...''

''எல்லாம் புத்தன் கிளப்பிய புயலின் விளைவு தான்.''

''அண்டசராசரங்களைப் படைத்த ஐயனின் மார்க்கத்தை, புத்தப்புயல் அழித்துவிடுவதா...?''

''புத்தன் மட்டும் யார்? ஐயன் படைப்புதானே!''

''ஐயனேதான், என்று கூடத்தான் சொல்கிறார்கள்.''

''ஒரு காரணம் எனக்குத் தெரிந்த அளவிலே கூறுகிறேன்.....''

''எதற்கு......?''

''புத்த மார்க்கம் பரவுவதற்குக் ..காரணம் என்ன என்றால், புத்தனுடைய கதை மக்கள் மனதை உருக்குகிறது—ராஜகுமாரன்—போக போக்கியத்தைத் துறந்து அழகு மனைவியையும், குழந்தையையும் பிரிந்து, அடவிகள் எல்லாம் சுற்றி அலைந்து, மக்களுக்குச் சேவை செய்தார். என்று கதை கூறும்போது மக்கள் மனம் பாகாய் உருகத் தான் செய்கிறது. மனிதனுடைய துக்கத்துக் காரணம் என்ன, விமோசனத்துக்கு வழி என்ன, என்பதைக் கண்டு பிடிக்க சித்தார்த்தர் பட்டபாடு, கேட்போர் மனதைக் கரையச் செய்கிறது. பொன்னிறமேனி மயங்க,தேகம் துரும்பாக இளைத்துப் போக, அன்ன ஆகாரமின்றி அடவியிலே அலைந்து சிந்தித்துச் சிந்தித்து ஞானத்தைக் கண்டறிந்தார் என்று கூறுகிறார்கள்—கேட்கும்போது,மக்கள் சொக்கிப் போகிறார்கள்.''

''போமய்யா, போம்! புத்தி கெட்டுபோய் உளறுகிறீர்! அரச போகத்தைத் துறந்தாராம், அடவியிலே

அலைந்தாராம்...பதினான்கு ஆண்டுகளய்யா, பதினான்கு ஆண்டுகள்—ஒன்றல்ல இரண்டல்ல, பதினான்கு ஆண்டுகள் கானகவாசம் நம் ஐயன் இராமபிரானுக்கு—மரவுரி—கனியும் காயும் உணவு—தரைதான் பஞ்சணை.....கல் மனமும் கரையுமே, ராமகாதை கேட்டு...

''ஆமாம்—முன்பு! இப்போது, மக்கள், ஸ்ரீராமர் அடவி சென்றது, அங்கு ஈரேழாண்டு வாசம் செய்தது எல்லாம், அவருடைய தகப்பனாரின் வாக்கைக் காப்பாற்றத்தான்—மக்களுக்காக அல்லவே—புத்தர், மக்களுக்காக அல்லவா அரச போகத்தைத் துறந்தார், என்று கேட்கிறார்கள்''

''கேட்பார்களய்யா, கேட்பார்கள்! அவர்களின் நாக்கை அறுக்கத்தக்க வீரர்கள் இல்லை இப்போது, அதனால் கேட்கிறார்கள் ...''

''கானகத்திலே கஷ்டம் அனுபவித்தான பிறகு, ராமபிரான், நாடு திரும்பி பட்டாபிஷேகம் செய்துகொண்டு சுகப்பட்டார்—புத்தர், துறவியானவர், துறவியாகவே இருந்து விட்டார்—இது வேறு மக்கள் மனதை மயக்கி விடுகிறது....''

''மயக்கும், மயக்கும்! எவ்வளவு காலத்துக்கு என் பதைப் பார்த்து விடுகிறேன்...''

''ஒவ்வொரு மண்டலமாகப் பரவுகிறது புதிய மார்க்கம்....''

''இங்குமட்டும் என்னவாம்! நேர்த்தியான யாகம் நடத்தி எவ்வளவு காலமாகிறது—ஏதோ ஆலய பூஜைகள் நடக்கின்றன—வேறு என்ன விசேஷம் நடக்கிறது...?''

''மன்னனிடம், கூறினேன்—ஆகட்டும் பார்ப்போம்—என்று இழுத்தாற்போலத்தான் பேசுகிறார்....செலவு அதிகமாகுமோ என்று ஆயாசப்படுகிறார்...''

''காமக் கூத்தாடமட்டும் காசைக் கரியாக்கத் தயங்குவதில்லை—கடவுள் காரியமென்றால், கையை விரிக்கிறார்..''

''நானும், ஒவ்வொரு விநாடியும் யோசித்தபடியே தான் இருக்கிறேன்—என்ன செய்வது, என்ன செய்வது என்று.....''

''நாங்களும், மக்கள் முன்போலப் பக்திசிரத்தை யுடன் கேட்காவிட்டாலும், பாகவதக் கதைகளைக் கூறிய படிதான் இருக்கிறோம்...''

''மாபலி கதையைமட்டும், கூறவேண்டாம், இப் போது....''

''ஏன்?''

''வேண்டாம்! மாபலியிடம் மூன்றடி தானம் வாங்கிய மகாவிஷ்ணு, பிறகு, விஸ்வரூபமெடுத்து இரண்டு அடி களால் பூலோகத்தையும் வானலோகத்தையும் அளந்து விட்டு, மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டு, மாபலியின் சிரத்தின் மீது வைத்தார்...''

''ஆமாம், அதுதான் மகாத்மியம்...''

''அதுபோல, அரசர்களை அடுத்து, தானம் தருமம் கேட்டுப் பெறும் குருமார்கள், கொஞ்சம் இடம் கிடைத் தாலும், அரசுகளையே அபகரித்துக்கொள்வார்கள்—இதற்கு மாபலி புராணமே போதும்—என்று விதண்டாவாதிகள், மக்களிடம் சொல்லி வைத்திருக்கிறார்கள்—அதனால்தான், மாபலி கதை கூறவேண்டாம்...''

''மற்றக் கதைகளை''

''கூறுங்கள்...ஆனால் எதைச் சொன்னாலும், கொஞ்சம் திரைமறைவுடன் சொல்லவேண்டும்...எதற்கும் நாம் பொறுமையை இழந்துவிடக்கூடாது! புத்த மார்க்கம் பெரும்புயல்தான், எனினும் அதைச் சமாளிக்கும் வலிமை நமக்கு உண்டு என்ற நம்பிக்கை நிரம்பவேண்டும். பாருங்களேன், அதிசயத்தை! சிங்காரமாளிகை வாழ்வை இழந்து, சிறைக்கோட்டம் செல்லத் துணிந்த மருதவல்லி,

மீண்டும் சீமாட்டியாகி விடச் சம்மதிக்கவில்லையா! நவகோடியார் எவ்வளவு திறமையாக—வெற்றி பெற்றிருக்கிறார், கவனியுங்கள்! மருதவல்லியின் மனம் மாறியதை, மகத்தான புண்ய கதையாக்கி மக்களிடம் கூறவேண்டும்.''

''காரிருளிலே தோன்றும் மின்னல்போல இருக்கிறது, மருதவல்லியின் மனமாற்றச் சம்பவம். தோன்றி மறைந்திடும் மின்னலாகி விடக்கூடாது மருதவல்லி சம்பவம். அதை 'திவ்யஜோதி'யாக்கிக் காட்ட வேண்டும். மருதவல்லி, பிட்ஷுக்களின் பொய்யுரைகளைக் கேட்டு மயங்கினாள், கணவனை எதிர்த்தாள், பதியை விட்டுப் பிரிவது மாபாவம் என்ற சாதாரண அறிவையும் இழந்தாள். ஆனால், நவகோடியார் பரமபக்தர், தெய்வ நம்பிக்கை உள்ளவர், எனவே அவர் எப்படியும் எம் பெருமான் அந்தப் பேதைப் பெண்ணின் அஞ்ஞானத்தைப் போக்கி ரட்சிப்பார் என்ற திடசித்தத்துடன், பகவானைப் பஜித்து வந்தார், விசேஷ பூஜைகள் நடத்தினார், அதன் பலனாக , மருதவல்லியின் அஞ்ஞானம் அழிந்தது, புது மார்க்கம் ஒரு புரட்டு என்பதை உணர்ந்தாள். கசிந்து கண்ணீர் மல்கி, கணவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினாள். நவகோடியார் , ''என் பாதத்தில் வீழ்ந்து வணங்கினால் என்ன பலன்? பெண்ணே! ஐயன் பொற்பாத கமலத்தை வணங்கு—அவர் உன் பாபத்தைப் போக்குவார், அருள் பாலிப்பார்'' என்ற உபதேசம் செய்தார். மருதவல்லி இப்போது புதியதோர் முகதேஜஸோடு இருக்கிறாள்! இப்படியும் இதைவிட ரசமாகவும், கூறவேண்டும் மருதவல்லியின் மனமாற்றச் சம்பவம், கலம் உடைபட்டபோது கிடைத்த தெப்பக்கட்டை போன்றது! பக்குவமாகப் பயன்படுத்த வேண்டும் ''

*

மருதவல்லி மாளிகை திரும்பிய சம்பவம், வைதீக வட்டாரத்திலே ஒரு திருவிழாவாகக் கருதப்பட்டது. எங்கும் இதே பேச்சுத்தான்! ஒவ்வொருவர் ஒவ்வோர்

வகையான விளக்கமளித்தனர் இதற்கு. மருதவல்லியோ, யாரிடமும் இதுபற்றி ஏதும் பேசுவதில்லை—மனதிலே ஏதோ தீர்மானமிருக்கிறது என்பது, முகத்திலே தெளிவாகத் தெரிந்தது. நவகோடியார், ஊரிலே கெம்பீரமாக உலவினார்.

*

வேலுடையான் கோயிலிலே விசேஷ பூஜைக்கு நாள் குறித்துவிட்டார் நவகோடியார். பூஜை நாளன்று மருதவல்லி ஆலயம்சென்று தரிசனம் செய்வது என்றும், பிறகு அங்குகூடிடும் பக்தர்களிடம் புதிய மார்க்கத்தைவிட்டுத் தான் விலகிய காரணத்தை எடுத்துரைத்துப் பழைய மார்க்கத்தின் மேன்மையை விளக்குவது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மன்னன் வரையில் சேதி சென்றது. மண்டலமே திடுக்கிட்டு, தானப்பன் அரச குருவே ஆகி விடக்கூடும் என்று பேசிக்கொள்ளப்பட்டது.

பழைய மார்க்கத்துக்குத் திரும்பும் புனிதவதியை வாழ்த்தினர் பலர்.

செல்வர்கள் காணிக்கை செலுத்தினர்—மருதவல்லி மூலம் விசேஷ பூஜாநாளன்று வேலுடையான் கோயிலுக்குத் தர

மருதவல்லியும், நவகோடியாரிடம் காணிக்கை கேட்டாள்—விலையுயர்ந்த பவழ மாலைகள்! ஆபத்து நீங்கும் அந்தஸ்து உயரும் என்ற மகிழ்ச்சியில், நவகோடியார் பவழ மாலைகளைக் கொண்டு வந்து குவித்தார். அவைகளை அணிந்துகொண்டு, தன் உருவத்தைத்தானே பார்த்துச் சிரித்தாள் மருதவல்லி.

''இது என்ன பைத்யம் மருதம்! பவழமாலையிடம் இவ்வளவு பைத்யமா உனக்கு? வைரம் இருக்கிறது, விலையுயர்ந்த வேறு மாலைகள் உள்ளன'' என்றார் நவகோடி. எனக்குப் பவழம் என்றால் கொள்ளை ஆசை என்று கூறினாள், மருதவல்லி.

அதிர்வேட்டுகள் முழங்கின! மறுநாள் விசேஜ பூஜைக்கு அறிவிப்புகள், மருதவல்லியின் மாளிகையிலே வேதம் ஓதப்பட்டது. பஜனைக் கோஷ்டிகள் வீதிகளில் வலம் வந்தன. வெண்ணிலாவுக்குப் புதிய வைரமாலையைத் தந்து மகிழ்ந்தான் தானப்பன்.

நள்ளிரவு! கவிராயர் கவலையுடன் படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறார். காசநோய்க்காரன் இருமல் அங்கு அதிர்வேட்டென இருக்கிறது. மருதவல்லி இரைக்க இரைக்க ஓடி வந்தாள்—தலைமீது இருந்த மூட்டையைக் கீழே போட்டாள்.

''அப்பா! அப்பா!''

''யாரது? என் மகளா? மருதமா?''

''ஆமப்பா, நான்தான் அப்பா!''

''மகளே! இதென்ன நள்ளிரவில்''

''கடைசி இரவு அப்பா இது...அதோ உம்காலடியில் இருப்பது பவழ மாலைகள் பவழபஸ்பம் வேண்டுமளவுக்குத் தயாரிக்கலாம்...இவ்வளவும் தந்தார்...நாளைக்குக் காட்டிக் கொடுக்கும் விழா! நான் உயிரோடு இருக்குமட்டும் அவருக்கு ஆபத்துதான். பவழபஸ்பம் தயாரித்து இவர்களைக் காப்பாற்றுங்க...என்னால் இவ்வளவுதான் முடிந்தது.... இதற்குமேல் தொண்டாற்ற முடியாதப்பா...புத்த மார்க்கத்துக்கு என் சேவை இந்த அளவுதானப்பா...நல்ல பவழமப்பா, நல்ல பவழம்...விலை உயர்ந்த பவழம்... மருத்துவர் கேட்டபடி...பவழபஸ்பம்....பவழபஸ்பம்....!

*

கோவெனக் கதறினார் கவிராயர், உடன் இருந்தோர் அலறி எழுந்தனர், மருதவல்லியின் பிணத்தைக் கண்டார். இறுதியில் விஷம் வென்று விட்டது.

□ □ □

# 2
# வர்ணாஸ்ரமம்

## I

''பாகனே! தேரை விரைவாகச் செலுத்து.

''நற்றிறம் வாய்ந்த பாகனே! தேர் விரைந்து செல்வதாக! ''

''விரைந்து செல்லவேண்டும். அங்குதான்! அறியாயோ நீ? கேள்!''

''பைங்கிளியே! மழலை பல பேசவல்லாய் எனினும், நான் கேட்டுக் களித்திட ஒரே ஒரு சொல் கூறு; வேறு வேண்டிலேன். அவர் இன்று வருவார் என்றுரை. நம்மைப் பிரிந்து சென்றவர், இன்று வருவார் எனும் இன்சொல்லை, கிளியே, நீ கூறு' என்று தன் முன்கையில் அமர்ந்துள்ள தத்தையினைக் கேட்கும், என் கிளிமொழியாளின் இல்லத் திற்குச் சென்றாக வேண்டும், விரைவாக! நொந்த மனத் துடன் வெண்மதிநுதல் சுருங்க, கிள்ளையுடன் பேசும் சொல்லினை வீட்டார் கேட்டிடுவரோ, என்று பயந்து, நாணி உரையாடுவாள் அந்நங்கை, தன் அங்கையில் கிளி ஏந்தி! அவள் துயர் துடைக்க, நாணம் நீக்க நான் செல்ல வேண்டும். நற்றிறம் படைத்த பாகனே! செலுத்துக தேரினை விரைந்து!! சிவந்த மாலையை யணிந்தது போன்ற கழுத் தினையுடைய, அந்தப் பச்சைக் கிளி, பலப்பல பேசவல்லது தான். எனினும் ஒரே ஒரு சொல் நீ உரைப்பாய், 'இன்று வரல் உரைமோ' என்று மட்டுமே கேட்கிறாள், என் மனத்தைக் கோயில் கொண்டாள்! என் செய்வாள் ஏந்திழை? இல்லத்துள்ளோர் அறிந்திடுவாரோ, என்ற அச்சம்; அஞ்சு

கத்தினிடம் அதிகம் பேச நேரமில்லை. நினைப்போ என் மாட்டுளது. அந்த நேரிழையாளின் மனை செல்ல; விரைவாகத் தேரை நீ செலுத்து! உனக்குத்தான் திறமை உண்டே! பாகா! செலுத்து! அந்த மனையின் கண்ணே, அக மகிழ்வுடன் அன்னங்கள் விளையாடுகின்றன; பெடையும் ஆணும், பெருமிதத்தோடு ஆடுகின்றன. தூய்மையான சிறகு, அந்த அன்னங்கட்கு. வெண்மை, அழகான வெண்மை நிறச் சிறகுகள். பெரிய தோள்களையும் மெல்லிய விரல்களையும் உடைய, ஆடை ஒலிப்பவள், நீர்த்துறையிலே, ஆடையிலே தோய்ந்துள்ள கஞ்சிப் பசையினை அலசிவிடுவது கண்டுள்ளாயன்றோ! அதுபோன்ற நிறம், அன்னங்களின் சிறகுக்கு!! அவை ஆணோடு பெண் அளவளாவி, அகமகிழ்கின்றன! காதல் இன்பத்தை அவை நுகரக்கண்டு, என் அன்னம் பச்சைக்கிளியுடன் பேசுகிறாள், பாகனே! செலுத்துக தேரை விரைவில்! என் நெஞ்சமோ நோகிறது! காதலின் மேம்பாட்டை, காதலின் பெருங் குணத்தை நான் கண்டேன் ஈண்டு. என் இச்சைக்கிளியாளைப் பச்சைக் கிளியுடன் பேசி ஏங்கிட விட்டுப் பாவியேன், பரிதவித்தேன். தெளிந்த நீர் தழுவிச் செல்லும் மணற்கரையிலே, பெண் மான் படுத்துறங்கக், கனிவுடன் காவல் புரியும் ஆண்மானைக் கண்டேன். அதன் பெருந்தன்மையினைக் கண்டு எனது நெஞ்சம் தளர்ந்துளது. அறுகு அருந்தச் செய்து, அருவியோரத்தில் அழகுறத் தூங்கச் செய்து, ஆண்மான், துயிலும் தன் பெண் மானுக்குத் துணைநிற்பது கண்டேன்; துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது; என் துடியிடையாளை நான் தனியே தவிக்கவிட்டேன். அவள் தத்தையைக் கேட்கிறாள், 'இன்று அவர் வருவாரோ, கூறு' என்று. அந்த மனைக்கு விரைந்து சென்று, அவள் துயர் தீர்த்துத், தளர்ந்த என் நெஞ்சம் இன்பம் பெறச் செய்யவேண்டும். வேகமாகத் தேர் செலுத்தும் திறமையுடைய பாகனே! தேரை, விரைந்து செலுத்து!!''

வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக் குரைத்தது, நான் மேலே தீட்டியிருப்பது. மதுரை மருதன் இளநாகனார்

எனும் புலவர் பெருமானின் மணிமொழியினை, கொழித் தெடுத்துக் கோத்தேன், சிறு சொல்லாரம்.

தலைவியைப் பிரிந்து, தலைவன் சென்றான். தத்த ளித்தாள் தளிர்மேனியாள். தத்தையிடம் பேசித் தவித்துக் கிடந்தாள். சென்றவிடம் சிறப்புப்பெற்று, தேரிலே மீள் கிறான் தலைவன். மானினத்தினிடம் காதற் பாடம் காண் கிறான்; மங்கை நல்லாளை எண்ணி ஏங்குகிறான்; அவள் மனையிலேயும், அன்னங்கள் காதற் களியாட்டத்திலே ஈடுபட்டு உலவுமே என்பதை எண்ணினான், நாணமுடைய நங்கை, நெஞ்சிலேயுளதை வீட்டார் அறியக்கூடாதே என்று எண்ணி அஞ்சிப், பிரிந்துபோன தலைவன், வருவார்! இன்று வருவார்!! என்ற இன்சொலை எவரேனும் பேசிடக் கேட்டால் புண்ணாறும் என்று கருதிப், பேசிட ஓர் பைங் கிளியை எடுத்துத் தன் அங்கையில் ஏந்தி, பல பேசிச் சல சலப்புண்டாக்கி மனையுளோருக்குத் தன்னைக் கிளி காட்டிக் கொடுத்துவிடுமோ என்று அஞ்சி, 'கிளியே! அவர் இன்று வருவார் என்ற சொல்மட்டுமே உரைத்திடு', என்று கேட் பாள், எனத் தலைவன் எண்ணி, வேகமகாத் தேரைச் செலுத்து, என்று தேர்ப்பாகனுக்குக் கூறுகிறான். அவனை ஊக்குவிக்கக் கருதிப்போலும், 'நற்றிறம்படைத்த பாகனே' என்றும் அவனைப் புகழ்கிறான். காதற் பாதையைக் கவி இளநாகனார் கன்னித் தமிழிலே, கவிதையாக்கிக் கூறி யுள்ளார், அகநானூறு எனும் அருந்தமிழ் நூலிலே!

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, பட்டமளிப்பு விழாவிலே, அண்ணல் சர் சண்முகம் ஆற்றிய, அழகிய, அரிய, சொற்பொழிவினைப் படித்ததும் எனக்கு இந்தச் செந்தமிழ்ச் செய்யுள் நினைவிலே நர்த்தனமாடிற்று.

''பரதா! சர் சண்முகத்தின் வீரவுரை படித்த உனக்கு விரகதாபச்செய்யுள் நினைவிற்கு வருவானேன்! தமிழ்க் கலையின் உயர்வு பற்றி, சேர நாட்டாட்சியினைச் சில ஆண்டுகள் நடாத்திய சண்முகம் செப்பினாரே, இதுபற்றி, ஏடு விரித்து எடுத்தாயோ இன்சுவையை,'' என்று கேட்

பீர்கள். இல்லை தோழர்களே! கன்னித் தமிழின் கரு வூலத்தைத் தேடியல்ல, நான் அக்கவிதையைக் கண்டது. என் நெஞ்சத்திரை முன்னே, இரு காட்சிகள் ஒரே சமயத்திலே நின்றன. ஒன்று சர் சண்முகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, அறிவாளிகள் சுவைக்க, மாணவர் மகிழக் கம்பீரமாக நின்று, சொற்பெருக்காற்றிய காட்சி; மற்றொன்று,தேரிலே தலைவன், அவன் உரைகேட்கும் பாகன், வரவு நோக்கி வாடிடும் தலைவி, எனும் காட்சி; இரண்டும் நின்றன!

''தேறியோருக்குத் தெளிவுரையாற்றும், சர் சண்முகத்தையும், தேரிலே அமர்ந்து பாகனை விரைந்து செலுத்தச் சொன்ன தலைவனையும், ஒருங்கே கண்டது ஏன்?'' என்பீர். கண்டேன், இதோ உம்மிடம் விண்டிடுவேன்; காரணம் சரியா, என்பதனை முடிவுசெய்யும் கடமை, எனதன்று, உமதே!

சர் சண்முகம், தென்னாட்டுத்தாகூர், இந்தியாவின் கிளாட்ஸ்டன், என்று புகழ இழிமனமற்ற எவரும் தயங்கார்! அவருடைய அரசியல் அறிவும், தரணியறிந்த தன்மையும், தளராத்திறனும், நிர்வாக நேர்மையும், எவருமறிவர்! திராவிடமணி—மாசு இல்லை! தமிழகத்தின் நிலவு—வளர் பிறை! உன்னதமான ஊற்று, அவருடைய ஆற்றல்! ஆம்! சர் சண்முகம், ஏடெடுப்போரின் மொழிமாலையைச் சூடிட வேண்டிய பருவத்தைக் கடந்து விட்ட காவலர். கொங்கு புகழ் கோமான் மட்டுமல்ல, மங்காப்புகழைத் தமிழ் மாநிலமும், அதை அடுத்த தரணிபலவும் பரப்பி அரச அவையிலும், அறிஞர் சபையிலும், களத்திலும் கொலுமண்டபத்திலும், எங்கும் புகழ்பெற்று விளங்கும் ஆற்றலரசர். ஆயினும், அவரைத் தென்னாட்டுத்தாகூர் என்று கூறேன்! ஏன் கூறல் வேண்டும்? இவர், எந்நாட்டுவீரர், தமிழகத்தின் தளபதி. தாகூருக்கு வங்கத்திலே, பங்கம் விளைவிக்கக் கொடுங்கையில் வஞ்சனை வாளேந்தினார் எவருமில்லை! தாகூரின் நாத நடையினைக் கண்டதும், சங்கை கொண்

டோர், வங்கத்திலே இல்லை! அவர்மொழி, வங்க மக்கள் எவரின் விழியிலும் களிப்புத் துளி எழச் செய்ததேயன்றி, காய்ச்சலும் குளறலும், எழச் செய்யவில்லை. வங்கம் தாகூரை, உச்சிமோந்து முத்தமிட்டு, வாரி அணைத்து வாஞ்சனையுடன் கொஞ்சிற்று. இங்கோ?எவ்வளவு எதிர்ப்பு, எத்துணை வஞ்சனை, எவ்விதமான சதிகள்! பழி எத்துணை, பதைப்பு எவ்வளவு! சிங்கமென முழக்கமிட்ட சண் முகத்தைச் சீறிக் கடிக்கச்சென்ற செந்நாய்க் கூட்டமும், பாய்ந்து பிடுங்கச் சென்ற ஓநாய்களும், நகைமுகங்காட்டி பகைச் செயல்புரிந்த நரிக்கூட்டமும், கொஞ்சமா? வங்கம், தாகூரை உயர்த்திடக் கண்டோம் தமிழகத்திலோ, சர் சண்முகத்தைச், சாணக்கியர்களும் குடிலர்களும் சாய்த்திட ஜல்லடம் கட்டியதையும், சரங்கள் பல தொடுத்ததையும் கண்டோம். வங்கத்தின் அணைப்பிலே, கவி தாகூர் வளர்ந் தார்! தமிழகத்திலே தருக்கரின் எதிர்ப்பிலே, தழைத்தது கொங்குநாட்டு வேங்கை! தாகூர், மாசு மருவற்ற வானத் திலே உலவிய முழுமதி; சர் சண்முகம், முகிலைக் கிழித் தெறிந்த முழுமதி! இத்தமிழரைக், கவியுடன் ஒப்பிட நான் ஒப்பேன்!

கண்டனங்கள் எழுதி அலுத்த கரங்களும், கேலிப் படங்கள் வரைந்து அலுத்த பேனாமுனைகளும், சபித்துச் சலித்துப்போன திருவாய்களும், கனல்கக்கிக் கருகிப்போன விழிகளும், சுருக்குக்கயிறு வீசிச்சோர்ந்துபோன வலைவீசி களும், படுகுழிவெட்டி ஆயாசமடைந்த அரசியல் வெட்டி யான்களும் இன்று, சர் சண்முகம் அறிஞர் உலகிலே அரசு ஓச்சக்கண்டு, அயர்கின்றனர். ஒருகாலத்திலோ! ஏ, அப்பா! எவ்வளவு கேலி கிண்டல், என்னென்ன வசவுகள்! இவ்வ ளவுக்குமிடையே பூத்தமலர், அதனை, வளமிகுந்த வங்கத் திலே வாஞ்சனை எனும்நீர் பெய்து வளர்த்த தாகூரெனும் தமிழர்; பண்டைத்தமிழரை, தமிழ்வீரரை, நினைவூட்டும் தமிழர். வேறு உவமைகள் ஏன்?

அவன் அன்று ஆற்றிய அறிவுரை, அகநானூற்று கவியை, எனக்கு நினைப்பூட்டுவானேன், என்று மீண்டும்

கேட்பீர். நான் கூறுமுன்னர், நீவிர் சற்று எண்ணிப் பாருமின்.

இந்தத் திங்கள், பல்வேறு இடங்களிலே பட்டமளிப்பு விழாச்சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. டாக்டர் ஜெயகர், பேராசிரியர் ஜா, பண்டித குன்சுரு முதலிய அறிஞர் பலர், வடநாட்டிலே, பட்டமளிப்பு விழாச் சொற் பெருக்காற்றினார்கள். படிப்பிலும் பாராளுந் திறனிலும், மேலானவர்களான இம்மேதாவிகள், தேசிய சர்க்காரின் அவசியத்தைப் பற்றியே பெரிதும் வலியுறுத்திப் பேசினர். தேசீயம், ஏன் இங்கு சரியான முறையிலே கமழவில்லை என்ற ஆராய்ச்சியிலேயோ அவர்கள் புகவில்லை. ஏகாதிபத்தி யத்தைக் கண்டிப்பது எளிது; கண்டிக்கவேண்டிய அளவு கசப்பு வளர்ந்துவிட்டதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் கண்டனத்தோடு நின்றுவிடாமல், நோய் போக எம்மருந்து உட்கொள்வதென்றுரைக்கும் நேர்மையும் நெஞ்சழுத்தமும், அந்தப் படிப்பாளிகட்கு இல்லையோ என்று அஞ்ச வேண்டி இருக்கிறது. சர் சண்முகம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சாடினார், சர்ச்சிலுக்குச் சூடேற, அமெரிக்காவுக்கு அழுகை கிளம்பக் கூடிய விதத்திலே! ''தன் மானம் உண்டு எனக்கு! எனவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திலே நமக்கிருக்கும் அந்தஸ்துக் குறித்து மகிழ முடியாது. நான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் புகழ்பாட முடியாது. எந்த ஆப்பிரிக்க மண்ணிலே என் இனத்தவரின் இரத்தம், போரிலே சிந்தப்படுகிறதோ, அதே ஆப்பிரிக்காவிலேயே அவர்கள் அவமதிக்கப்படுவதைக் கண்டும், பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்துக்கு லாலி பாட மனம்வருமோ! மனம் முறிந்து விட்டது அன்பர்களே!'' என்று சர் சண்முகம் கூறியிருப்பது கேட்டு, அறிவும் தன்மானமும் உள்ள எவர்தான், 'சபாஷ்!' என்று கூறார்? ஆனால், இந்தப் பகுதி எனக்குப் புளகாங்கித மூட்டவில்லை. ஏனெனில், கண்ணியத்துடனும் காரணத்துடனும், கம்பீரமாகச் சர் சண்முகம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் போக்கைக் கண்டித்தார். ஆனால், இதனினும் கடுமையாகவும், நரகல் நாடையில், பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியத்தின் போக்கைக் கண்டிக்கத் தேசியத் திருக் கூட்டத்திலே பலருண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சின்னாபின்னமாக்குவேன் என்று சினந்து சூள் உரைத் தோரையும், அதன் பிடரியைப் பிடித்துக் குலுக்குவேன் என்று முழக்கமிட்டோரையும் நாடு கண்டிருக்கிறது. எனக்குத் தெரிய, ஒரு தேசீயப் பிரசங்கியார் (இன்று அவர் இந்து மகாசபை வீரராக வேடமெடுத்துள்ளார்) ஒருமுறை பிரிட்டனைக் கண்டித்துப் பேசுகையிலே கூறினார், ''மகா ஜனங்களே! பிரிட்டனிலே என்ன இருக்கிறது என்று எண்ணு கிறீர்கள்? வெறும் சுண்ணாம்பும், நிலக்கரியும்! நிலக்கரிக் காகச் சுரங்கங்கள் தோண்டித் தோண்டி, பிரிட்டன் பாழாகி விட்டது. முப்பதுகோடி இந்தியரும் (அன்றைய ஜனத் தொகை 30 கோடி) சேர்ந்து மூச்சு விட்டால், பிரிட்டன் ஆடிக்காற்றிலே சிக்கிய இலவம் பஞ்செனப் பறந்துபோகும்.' இந்த உரைகேட்ட வீரர் குழாம் கைதட்டி ஆரவாரித்ததும், எனக்குத் தெரியும். ஆகவே நான், சர் சண்முகம் அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துப் பேசியதை மாபெரும் வீரம் என்று கூறவில்லை. 1920லே அம்மொழி வீரமாக இருந்திருக்கலாம். இன்றோ! அம்மொழி பழங் கஞ்சி. வீட்டுக்கு வீடு, கலயத்திலே அது உளது! இந்நாட்டுச் சொற்பொழிவாளரின் அரிச்சுவடியே அதுவாக இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியல்ல எனக்கு ஆனந்த மூட்டியது.

நாட்டுவிடுதலை பற்றிப் பேசிடாத தலைவர் இல்லை. ஆனால், அந்த விடுதலை கிட்டாததன் காரணம் என்ன என்று உசாவிடுவோர் வெகு சிலரே. உண்மை தெரிந்தபின், அதனைத் தைரியமாகக் கூறிடுவோர் அதனினும் மிகச் சிலரே. உரைத்ததோடு அமையாமல், உறுதியுடன் நின்று பணிபுரிவோர் அதனினும் மிகமிகச் சிலரே. அன்னிய நாட்டினரை மிரட்டவோ, மயக்கவோ, இங்கு ஆட்கள் அனேகர். ஆனால் இங்கு விடுதலைக்கு விரோதிகளாக உள்ளவர்களை ''சற்றே விலகு'' என்று கூறும் ஆண்மை யாளர் மிகக் குறைவு.

சர் சண்முகத்தின் பேருரையிலே, ஆண்மை ததும்பு கிறது; அதனைக் கண்டே நான் களிப்படைகிறேன்.

> ''நம்மை ஆளும் அயல்நாட்டாரின் வாக்குறுதி களினாலோ, நல்ல எண்ணத்தினாலோ, நாட்டு விடு தலை கிடைத்துவிடுமா? கிடைத்து விடாது?!''

என்று கூறுகிறார் சர் சண்முகம். சுதந்திரம் சீமையிலே தயாரிக்கப்படும் சரக்கல்ல, சன்மானமாகப்பெற! அது, நாட்டு மக்களின் நாடி முறுக்கினால் விளையக்கூடிய நிலை. அதனை இங்கேயே தான் பயிரிடமுடியும். ஆனால், அந்த வயலிலே, கள்ளி படர்ந்திருக்கிறது. அதனைக் களையா முன்னம், பயிர் இல்லை, பண்பு இல்லை. இதனை சர் சண்முகம் அஞ்சா நெஞ்சுடன் அறைவது கேண்மின்.

> ''இந்நாட்டிலே, அதிர்ப்தியும் துவேஷமும் அதிகரித் துளது. இது வருந்தத்தக்கது. ஆனால், இதற்குக் காரணம் என்ன? இங்கு ஒரு கூட்டம், தனது நோக்க மும் கலையுமே பிரதானமென்று கூறி, மற்ற மக்கள் மீது அவைகளைத் திணித்தது. அதன் பலனாகவே கேடு பல தோன்றின. தேசீயத்தின் பெயரால் அக் கூட்டம், மற்றவர்களை அடக்கித் தன் அதிகாரத்தை யும் செல்வாக்கையும் ஸ்திரப்படுத்த முயற்சிக்கிறது.''

இந்தப் பொன்மொழியை ஆராய்ந்து பாருங்கள். இந்த உபகண்டத்தின் வரலாறுகளிலே புதைந்து கிடக்கும் உண்மை களை உணருங்கள். அந்த ஒரு கூட்டத்தின் செருக்கு எவ்வளவு! அது அழித்த அரசுகள் எத்தனை? அதன் வயப் பட்டு அழிந்த வீரர்கள் எவ்வளவு! இறுமாப்புடன், அக் கூட்டம், தனது ''தாசராக'' மற்றவரை மாற்றிய கொடுமையை எண்ணிப் பாருங்கள். அப்போதுதான் அறிஞர் சண்முகத்தின் அறவுரையின் அழகு புலனாகும். இதோ வெளிப்படையாகவே வீரர் சண்முகம் விளம்புகிறார் கேளுங்கள்.

> ''இந்தியாவிலே வர்ணாசிரமம் ஏற்பட்டதனால், ஆளும் ஜாதி தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டு ஏகபோக உரிமையாக அந்த அதிகாரத்தை அனுபவித்து வருகிறது. இந்த வகுப்பு, தனது ஏக போக உரிமையையும் பேராசையையும் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகக் கைவிடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு துரிதமாக இந்தியாவுக்குச் சுதந்தரமும் ஜன நாயகமும் ஏற்படும்.''

விடுதலை வீரர்களே! ஆசிரம அரசியலிலே அர்ச்சகராக உள்ள அருமைத் தோழர்களே! ஆகாத திட்டத்தைச் சுமந்துகொண்டு ஆமை வேகத்திலே செல்லும் அந்தணரின் அடிவருடிகளே! நாட்டை மீட்டிட நானா விதமான முயற்சிகள் செய்தீர், அலுத்தீர், முடக்குவாத நோயால் வாடுகிறீர். இதுகாறும் செய்த பலமுயற்சி, வெற்றி தரக் காணோம். வீணருக்கு அரசியலிலே உறைவிடமும், சுய நலமிகளுக்குச் சமுதாயத்திலே புகலிடமும் தரவே, உமது தொண்டு பயன்பட்டது. இதோ எமது தலைவர் இயம்பிடும் திட்டத்தைப்பற்றி யோசியுங்கள். விடுதலைப் பாதையை அடைத்துக்கொண்டுள்ள மமதையாளர்களை, மட்டந்தட்ட முன்வாருங்கள். பாருங்கள் பிறகு, பரிதிபோல் விடுதலை தோன்றிடக் காண்பீர். சர் சண்முகம் ஏகபோக மிராசு பாத்யதை அனுபவிக்கும் கூட்டத்திற்கு நன்னெறி புகல் கிறார். பேராசையை ஒழிமின்! எல்லாம் எமக்கே எனும் இறுமாப்பை, நீக்குமின்! என்று இதோபதேசம் புரிகிறார். காடியிலே பன்னீர் தெளித்துப் பயனென்ன என்பீர். ஆம்! இதோபதேசத்தோடு நின்றுவிடவில்லை, இளங்கோ மன்றத்திலே இருந்தாண்ட வீரர். தாங்களாகப் பேராசையை விடவில்லையானால், என்ன நேரிடும்? இந்த நிலை இப்படியே, என்றென்றும் நீடித்திருக்கும் என்று மனப்பால் குடிக்க வேண்டாம். ஜனநாயக வேகம் இந்தக் கூட்டத்தின் கொட்டத்தை ஒழித்துவிடும் என்ற உண்மையை உரைத்திருக்கிறார். ஆம்! இது சரிதங்கண்ட உண்மை. கிரேக்கநாட்டு ஹெலாட்களைப் (Helot) பலகாலம் அடக்கி

வைத்திருந்த ஆண்டக் கூட்டம் (Masters) அழிந்து போனது சரிதம்! ரோம்நாட்டு பிளபியன் (Plebian), பெட்ரீஷியன் (Patrician) தகராற்றின் முடிவு என்ன? ?ஆதிக்கம் செலுத்திய கூட்டம் அநிழிக்கப்பட்டுவிட்டது. பிரிட்டனிலே காமன்ஸ் (Commons) பிரபுக்கள் (Lords) தகராற்றின் முடிவு என்ன? பிரபுக்கள் பெட்டிப்பாம்பு ஆனதுதானே! ஆண்டவனால் ஆளப் பிறப்பிக்கப்பட்டவன் என்று ஆணவமாகப் பேசி (Divine Right of Kings) கடவுட் புதல்வர்கள் என்ற தத்துவத்தைப் பேசிய, முதலாம் சார்லஸ் மன்னனின் முடியும் முடி தரித்த சிரமும், என்ன ஆயிற்று ரஷிய நாட்டிலே? முதலாளி (பூர்ஷ்வா) தொழிலாளி (புரோலேடேரியன்) போர் மூண்டதன் பலன் என்ன? இங்குமட்டும் என்ன? ஆரிய திராவிடப்போர் மூண்டு விட்டது. சரிதமுணர்ந்தோரின் உள்ளத்திலே, இதன் முடிவு என்னவாக இருக்கும், என்று தெரியும்! குடிலர்கள் கெடுவர்!! சழக்கர் சாய்வர்! இத்தகைய வீர உரையாற்றிய சர் சண்முகத்தைப் பாராட்டுவதோடு நின்றுவிடக்கூடாது. எந்த ஏகபோகமிராசு ஒழிக்கப்படவேண்டும் என்று சர் சண்முகம் கூறினாரோ, எந்த வர்ணாஸ்ரமம் ஒழிய வேண்டும் என்று அவர் கூறினாரோ, அதனை ஒழிக்க மாணவர்கள் முயலவேண்டும். முனைய வேண்டும். இல்லையேல் அவர் மொழி கேட்டு யாது பயன்?

''எல்லாம் சரி, பரதா! நாங்களும் சர் சண்முகத்தின் பேருரை கேட்டுப் பூரித்தோம். ஆதிக்கம் செலுத்தும் இனம் பிரமித்தது. ஆனால் அவருடைய சொற்பொழிவுக்கும், உனக்கு அகநானூற்றுச் செய்யுள் நினைவிற்கு வந்ததற்கும் என்ன சம்பந்தம் என்பது தெரியக்காணோமே'' என்றே அன்பர்கள் கேட்பர்.

தோழர்களே! சர் சண்முகம் தமது சொற்பொழிவின் இறுதியிலே, (வர்ணாசிரமம் ஒழிய வேண்டும்! ஒரு இன ஆதிக்கம் அழியவேண்டும்! ஏகபோக உரிமை மடியவேண்டும்! பேராசைப் பித்தம் போகவேண்டும்!) என்று முழக்க

மிட்டாரே, அந்தப் பகுதி, என் செவிக்கு, 'தேரை விரைவாகச் செலுத்துவாய் பாகனே!' என்று தலைவன் கூறும் செய்யுள் போன்றிருந்தது. சர் சண்முகம், வர்ணாசிரம ஒழிப்புக்காகவே வாழும் கட்சியை விட்டுப்பிரிந்து, வேறு வினையில் ஈடுபட்டு, நெடுநாட்கள் பிரிந்திருந்தார். அவர் பிரிய நேரிட்டதால் திராவிடக் கட்சி தவித்துக் கிடக்கிறது. காவல் மிகுந்த மனையிலே கன்னி நிற்பதுபோல, வினை முற்றிய தலைவன், விரைந்து சென்று தலைவியின் துயர் தீர்த்தல்போல சர் சண்முகம், தன் நெஞ்சமெனும் பாகனுக்குத் தேரை விரைந்து செலுத்து எனக் கூறுமாறு வேண்டுகிறோம். துயிலும் பெண்மானருகே ஆண்மான் நின்று காவல்புரிவதுபோல, ஆரியரிலே தலைவர்கள், ஆரிய இனத்தைத் தமிழ்ப் பண்ணையிலே மேயவிட்டுத் தமிழ் வளம் நீர்பெருகச் செய்து, உல்லாச வாழ்வு எனும் வெண் மணலிலே படுத்துறங்கச் செய்து, காவல்புரிவதை சர் சண்முகம் காணவில்லையா! சங்கராச்சாரி கோலத்திலும் சரி, சர்க்கார் நிர்வாகி எனும் கோலத்திலும் சரியே, ஆரிய இனத்தலைவர்கள் ஆரிய இனத்தின் சுகமொன்றே குறிக்கோளாகக் கொண்டு உழைப்பது, சர் சண்முகத்துக்குத் தெரியாதா? மானினம் காதல் மேம்பாட்டைத் தலைவனுக்குரைப்பது போல இக்காட்சிகள், சர் சண்முகத்துக்குத் திராவிட இனத்திடம் அவர் காட்டவேண்டிய அன்பின் பெருக்கை உணர்த்தவில்லையா! ஆமெனில், தேரை விரைவாகச் செலுத்துக, என்றுரைக்கத்தானே வேண்டும்.

திராவிடமணியை, பண்டைப் பெருமை வாய்ந்த டில்லியில் ஜொலித்திடவும், சேரநன்னாட்டிலே ஒளிவிடவும், இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான், வேறு எவரெவருக்கோ, ''இரவல்'' தந்தவண்ணமிருப்பது? திராவிடச் செல்வத்தை ஓமானுக்குப் பலியிட்டோம், அதன் பாழும் பசியடங்க! திராவிடத் திருவிளக்கு (சர் இராமசாமியை) வைசிராய் மாளிகைக்கு ஒளிதர ''இரவல்'' அளித்துள்ளோம். திராவிடமணி சர் சண்முகம் தேரை விரைவாகச் செலுத்தித் தமது காதலகத்தை நோக்கி வரத் தாமதித்தால்,

திராவிடத்தைக் கப்பிக்கொண்டுள்ள காரிருள் நீங்கிட வழிகாணோமே என்றே நான் திகைக்கிறேன். எனவே, சர் சண்முகம் எந்த வர்ணாசிரமம் ஒழிந்தால் மட்டுமே, நாடு மீளும் என்று கூறினாரோ, அந்த வர்ணாசிரம ஒழிப்பையே. வாழ்க்கை இலட்சியமாகக் கொண்ட திராவிடக் கட்சியிலே, இன்றே பங்கு எடுத்துக்கொண்டு பணிபுரிய வேண்டுகிறோம். இன்று அதன் பாரத்தைச் சுமந்து, பெரியார், உடல் தளர்ந்து, நோய்வாய்ப்பட்டு, படுத்த வண்ணம், பல எண்ணிச் சிலமட்டுமே வெளியே கூறிச் சோகித்தவண்ணம் இருக்கிறார். வைத்தியர்கள் மருந்தூட்டுகின்றனர். கட்சியோ அவருக்கு நோயூட்டுகிறது. ஓய்வு இல்லை; மனநிம்மதி இல்லை, ஒன்றா இரண்டா அவருக்குள்ள தொல்லை. உண்மையிலேயே, வாலிபமும் வீரமும் அறிவும் ஆற்றலுமிக்க, சர் சண்முகம் போன்றவர்கள், கட்சியிலே பணிபுரியாதிருப்பது கண்டு அவர் மனம் நோகாதா என்று கேட்கிறேன். கிளைகளை ஒடித்தெடுத்து விட்டால், மரத்திற்திற்குத்தான் என்ன அழகு? ரோஜாவைப் பறித்துக்கொண்டு செடியிலே முள்ளைமட்டும் வைத்திருப்பதுபோலப், பதவியும், சுகவாழ்வும், பலரைப் பறித்துக்கொண்டுபோகச், சுயநலமிகளும் சொல்லம்பரும் ஒரு கட்சியிலே இருந்து பயன் யாது?

சர் சண்முகம், அமெரிக்கா சென்று திரும்பி எவ்வளவு காலமாயிற்று! ஈரோடு மாநாட்டிலே முன்னம், கொச்சித் திவானாக இருந்தகாலை, சர் சண்முகம் வந்திருந்தார். ''இன்று நம்மிடை ஓர் விருந்தாள் வந்திருக்கிறார்'' என்று பெரியார் உரைத்தார். அதற்குச் சர் சண்முகம் விடுத்த பதிலின்போது, அவர் மனம், முகத்திலே தாண்டவமாடக் கண்டேன்; ''வந்திருப்பது விருந்தாளியல்ல, (குடும்பத்து மகன்) வேற்றூர் சென்று வாழ்பவன், விழாநாளன்று வீடு வந்திருக்கிறான், குடும்பத்ினருடன் கூடிக்குலவ, களித்து இருக்க, கனிவுடன் பேச''— என்று சர் சண்முகம் கூறினார். அஃதன்றோ தமிழ்ப்பண்பு, அதனை யன்றோ நாம் விரும்புவோம்! ஆனால், அமெரிக்கா சென்று திரும்பி

பிறகு, இதுவரை (இடையே ஓர் நாள் கன்னிமாரா ஓட்டலிலே பேசினது தவிர) சர் சண்முகம், குடும்பத்தாரைக் கண்டு குசலம் விசாரித்திருக்கக்கூடாதா, கூடிப்பேசிக் குலவிட லாகாவதா, தள்ளாடும்போது கைகொடுத்திருக்கலாகாதா? தன் ஆற்றலெனும் செல்வத்தைத் தந்திருக்கக் கூடாதா? ஏன் அதைச் செய்யத் தவறினார்? பாகப் பிரிவினை ஏற் பட்டு விட்டதா! குடும்பத்தின் உயர்வு தாழ்வு பற்றிக் கருதிடாத உதவா மகனா அவர்! இதுவே, என்னை வாட்டி வதைப்பது. இசைச் செல்வத்தை வளர்த்திடவும், கலைச் செல்வத்தைக் கண்டு களிக்கவும், சர் சண்முகம் ஓய வில்லை. ஆனால் குடும்பத்தையே மறந்தார். எனவே, அவருடைய நெஞ்சமெனும் பாகனுக்கு இனியேனும், தேரை விரைந்து செலுத்து என்று அவர் கூறாரா, என்றோர் ஆவல் என் மனதைப் பிய்த்தது.

## II

இலட்சியத்துக்காகவும், அந்த இலட்சியத்தை அடைய உதவும் கருவி போன்ற கட்சிக்காகவும், சொந்த நலனையும் உயர் பதவியையும் வெறுத்து ஒதுக்கும் வீரமும், கஷ்ட நஷ்டம் ஏற்கும் சகிப்புத்தன்மையும் ஒருவருக்கு ஏற்பட்டு விட்டால், அவரைத் தலைவராகக் கொண்ட கட்சியும் அதனைச் சார்ந்துள்ள மக்களும், முன்னேற்றமடைய முடியு மென்பது திண்ணம். அரண்மனை மாடியிலே அம்சதூளிகா மஞ்சத்திலே அமர்ந்துள்ள அரிவையை அடைய வேண்டி, ஆங்குச் சென்ற ஆணழகன், அகழியின் ஆழத்துக்கோ அதிலே அலையும் முதலையின் வாய்க்கோ அஞ்சினால், யாங்ஙனம் மங்கையைப் பெறமுடியும்! இலட்சியமெனும் எழிலுடை யாளைப் பெற்று இன்புற எண்ணுவோரிற் பலர், அகழிக்கு அஞ்சி, புறத்தே நின்று புகைபடு மனமுடன் போரிட்டுக் கொண்டோ, புலம்பியோ கிடப்பர். ஒரு சிலருக்கே, உழவுக் கேற்ற விளைவு எனும் மொழிவழி நடக்கும் அறிவாற்ற லுண்டு. அவர்தமைச் சலிப்பு அண்டாது. சாகசத்துக்கு

அவர் பலியர்கார். போலியைக் கண்டு ஏமாறார். புல்லரின் புன்மொழி கேட்டுப் புழுங்கார். தாக்கிய வேலினைத் தூக்கி யெறிந்துவிட்டுப், போர்க்குப் புகின் யார்க்கும் இது நேரல் முறையே என்பது தெரிந்து புலியுடன் போரிடுகையிலே, கிலி என்னும் வலி கொளல்கூடாது என்பதறிந்து, உயிர் கெடும்வரை, நெடு வரை போல் நின்று போரிடுவர் வீரர். கட்சிப் பணியும், களத்துப் பணி போன்றே, வீரருக்கு ஏற்ற தேயன்றி, விலாவிலே விரக்திப்புழு நடமாடுவோருக்கோ, மனத்திலே சுயநலமெனும் குளவி கொட்டிடுவோருக்கோ ஏற்றதன்று. சிறுசெயல் புரிய மட்டுமே தெரிந்தோர்க்குப் பெருநெறி பிடித்தலரிது. கட்சிப் பணிக்கு இத்தகைய கடமை யுணர்ந்த காவலர் தேவை. அதிலும், தூங்கிடும் இனத் தைத் தட்டி எழுப்பிடும் பணி, சாமான்யமானதன்று. நான், சர் சண்முகம் அவர்களை இப்பணிபுரிய முன்வரவேண்டு மென்றுதான் அழைக்கிறேன். அரசோச்ச அல்ல! அதற்கு ஆயிரம் ஆட்கள், நான் நீ என்று போட்டியிட்டுக்கொண்டு முன் வருவார் என்பது எனக்குத் தெரியும். பாணரையும் பாடினிகளையும் முன் அனுப்பிப் பரிசும் தந்து, பட்டம் பெற முயலும் பேர்வழிகள் பலருண்டு. மரம் பழுத்தால் வௌவாலை வாவெனக் கூவி அழைப்பானேன்! ''போ'' வெனத் துரத்தவே, ஆட்கள் வேண்டும். நான், சர் சண் முகத்துக்கு அனுப்பும் அழைப்பு, அரசோச்ச அல்ல—அரசு அமைக்க!! இரண்டுக்கு மிடையே உள்ள வித்தியாசம் பெரிது. நாவாயில் செல்ல அழைப்பதற்கும், நாவாய் கட்டிச் செலுத்துமாறு கூறுவதற்கும் உள்ள வித்தியாசம் போன்றது. சர் சண்முகத்தின் ஆற்றல், அரசாள்வதின் மூலமாக விளங் குவது எளிது; ஆனால், அரசு அமைப்பதன் மூலம் அவர் ஆற்றலின் சிகரம் காண்போம்! கரியைக் கொண்டு கரும்பு பறிக்கச் செய்வதா? மலைமரங்களையன்றோ முறித்திடச் செய்யவேண்டும்! வேங்கையை அழைத்து விளாங்கனியை ஒடித்திடச் செய்வதா! சர் சண்முகத்தின் அறிவாற்றலுக் கேற்ற காரியம், அரசாள்வதல்ல, அரசு அமைப்பது! அவர் ஆண்ட கொச்சியிலே, சின்னாட்கள் மிஸ்டர் டிக்சன் எனும்

முன்னாள் சேலம் கலெக்டரன்றோ அரசாண்டார்! கொச்சியோ, வேறு எந்த சீமையோ, ஆள்வது, கொங்கு வேங்கையின் வீரதீரத்துக்குச் சரியான வேலை கொடுப்ப தாகாது.

மாசிடோனியா (Macedonia) மன்னன் பிலிப், தன் மகனுக்கு, அரணும் அழகும் அமைந்த அரசைத் தந்து சென்றான். மகன், அந்த மண்டல முடி தரித்து மட்டுமே ஆண்டிருப்பின், அவன் புகழ் மங்கியிருக்கும். இங்கும் எங்கும், இன்றும் என்றும், அவன் புகழ் எவரும் படித்து இன்புறுமாறு, அவன் தன் நிலையைச் செய்து கொண் டான்! யாங்ஙனம்? தந்தை தந்த தரணியுடன் அமைந் தானில்லை. ''அவன் மகன் இவன்'' எனும் சொல் போய், ''இவன் தந்தை அவன்'' எனும் மொழி தோன்றுமாறு, அவன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். அஃது என்னையெனில், பிலிப் தந்த மாசிடோனியோ நாட்டு எல்லையிலே நின்று விடாது, அலெக்சாண்டர், காற்றெனச் சுழன்று களம்பல கண்டு, நாடு பல வென்று, நானிலம் புகழ, இன்றும் வரலாற்றின் மூலம், வாகையுடன் வாழுகின்றான்.

''பொன் மூட்டையினைக் கழுதையின் முதுகிலே ஏற்றி, அக்கழுதையை அனுப்பினால், அது பிடித்து விடும் ஒரு பட்டினத்தை!'' என்றுரைத்தானாம் பிலிப் அதாவது, இலஞ்ச இலாவணம் கொடுத்து எந்த இலங்கையையும் பிடித்துவிடலாம் என்றான்—எங்கும் விபீஷணர் கிடைப்பர் என்ற எண்ணத்தால்! அலெக்சாண்டரோ, பொன்கொண்டு போனானில்லை, போருக்குப் போனான்; புகழோடு திரும் பினான்; தன் உயிரைப் பணயமாக வைத்து வீர விளை யாட்டாடினான், வேந்தர்க்கழகு வேலியாளுதல், வீரர்க் கழகு வேலி கோலுதல் என்ற உரைக்கேற்ப. மாசிடோனி யாவை மட்டுமே அலெக்சாண்டர் ஆண்டிருப்பின், கிரேக்க நாட்டிலேயோ, அதை ஒட்டிய நாட்டிலேயோ மட்டுமே அவன் பெயரை மாசிடோனிய மன்னருள் ஒருவன் என்ற

பட்டியிலே படிப்பர்; உலகு அவனை அறிந்திராது. இன்றோ! உலகு அறியும். உலகில் பலப்பல அழியும், அவன் புகழோ நிலைத்து நிற்கும்! அரசு ஆள்வதற்கும், அரசு அமைப்பதற்கும், வித்தியாசம் என்னை எனில், பிலிப்பின் மகனாக வாழ்வதற்கும் அலெக்சாண்டராகத் திகழ்வதற்கும் உள்ள வித்தியாசமென்பேன்! சர் சண்முகத்தை, நான், அவர் ஆற்றலறிந்தே அரசாள அழைக்காமல், அரசு அமைக்க அழைக்கிறேன். மரத்தில் பழங்குலுங்கும் வேளையிலே மந்தி தாவுமானாலும், கனியுதிரும்! அதுபோலக் கட்சி கனியுறுந்தறுவாயிலே, கடுவனோ மந்தியோ களித்துக் கூத்தாடும், கனி கிடைக்குமெனும் கருத்தினால். ஆனால், தோட்டம் அமைத்துத் துரவு எடுத்து, நீர் பாய்ச்சித் தரு வளர்த்திடும் செயலே முக்கியமானது. சர் சண்முகத்தை நானழைப்பது, தீஞ்சுவை தரும் பதவிப்பலாவைப் பறித்திட அல்ல; அதற்குக் கீச்சிடும் கடுவன்களும், மையலூட்டும் மந்திகளும் என்றுமுண்டு, எங்குமுண்டு. நான், சர் சண்முகத்தை அழைப்பது, திராவிடத் தனி அரசு அமைக்க, வெறும் பதவியில் அமரவல்ல.

சர் சண்முகம் அவர்களைத் தலைவராக்கும் பணியினைத்தான் வேறு சிலர் மேற்கொண்டுள்ளனரே, பயமேன் உனக்கு, என்று கூறுவீர்கள். உண்மையிலேயே வேறு சிலர் வேண்டி அழைக்க வேண்டிய அளவு, சர் சண்முகம், தூர விலகி நிற்கலாமா, நிற்கிறாரா, நிற்பது ஏன் என்ற கவலை எனக்கு. வினை முற்றிய தலைவன், வீடு திரும்பாது, சோலையிலோ சாலை ஓரத்திலோ, தங்குவானேன்? அவர், தமது அன்புக்கு இருப்பிடமான மனை புக அழைப்பு வேண்டுமா? அதுவா, தமிழ்ப் பண்பு என்று, என்மனம் என்னைக் கேட்கிறது. அதுமட்டுமல்லவே? மகனே, வா! மாசிலாமணியே வா, வா! தலைமகனே வா, வா!—என்று வருக அந்தாதியைப் பலர் பாடப்பாட எனக்குப் பயந்தான் மேலிடுகிறது.

ஊரைக் கலக்கி வைக்கும் ஊத்துக்காட்டு அம்மையே, நாட்டைக் கலக்கி வைக்கும் நல்ல பத்ரகாளியே, வேண்டி

அழைக்கிறோமே வேலாத்து அம்மையே,'' என்று, சிலம்பைச் சுற்றி, உடுக்கை முழக்கி, உள்ளே சென்ற குடிவகை, ஆவி மயமாக வெளியே வருமளவு உரத்த குரலிலே அம்மனை வேண்டிக்கூவும், பூஜாரிகளை நான் கண்டிருக்கிறேன். ! அதன் பலனாக ஆவேசம் வரும். வந்ததும் ஊத்துக் காட்டாளோ, சோத்துக் குடையாளோ, பூஜாரியையும் பக்தர்களையும் பார்த்து, ''ஆடுவெட்டிக் கோழி வெட்டி பூஜை ஏண்டா போடலே, வேண்டிக் கொண்டபடி விருந்து படைக்கவேயில்லை!'' என்று கோபத்தைக் கக்கக் கேட்டிருக்கிறேன். அதுபோன்ற பூஜை போடும் முறை, அரசியலிலே, மகா ஆபத்தாயிற்றே என்றன்றோ நான் அஞ்சுகிறேன்.

மேலும், கட்சிப்பணி புரியத் தலைமைப் பதவி தேவையா என்பது, ஆழ்ந்து பதில் கூறவேண்டிய கேள்வி என்பதை அறிஞர் சண்முகம் அறிவார். பெரியார் கட்சித் தலைவராக இருக்கையிலே, அவர் பக்கம் நின்று சர் சண்முகம் பணியாற்றவும், தமிழகம் அதைக் காணவும், ஒருகாலம் பிறக்கக்கூடாதா! ''இதோ எனது குடும்பமுதியோர்' என்று பெரியாரைச் சர் சண்முகம் சுட்டிக்காட்டவும், ''நான் வயதேறியவன், இதோ என் இளமையின் உருவம்'' என்று பெரியார், சர் சண்முகத்தைச் சுட்டிக்காட்டவும் ஆலுக்கு விழுதுவிட்டது என்று ஆரியர் இது கண்டு அஞ்சவுமான நிலைமை, ஏற்படக்கூடாதா! பெரியாரின் தவறுகள்—பெரியாரின் குறைபாடுகள்—அவர் செய்யும் பிடிவாதம்—அவருடைய ஆற்றல் குறைவு—என்ற இன்னோரன்ன கூறி, பெரியாரைக் கண்டித்துவிட்டு, அவராலேயே கட்சி நசிந்து விட்டது என்று பொய்யுரைத்துவிட்டு, ஆகவே சர் சண்முகம் வரவேண்டும், என்று அழைக்கும் தோழர்கள், உண்மையிலேயே சர் சண்முகம், தலைவராகவேண்டுமென்று விரும்பி இதைச் செய்கிறார்களா என்பதே என் சந்தேகம். நாதியற்று, நடுத்தெருவிலே கிடத்தப்பட்ட அகதியைப் பெரியார், இன்று கூரை வீட்டிலே குடியிருக்கச் செய்திருக்கிறார்; இனி மாடிவீடு கட்ட, சர் சண்முகம் வரட்டும், வர

வேண்டும், வருவது முறையுங்கூட. அதைக் கூறாது, ஏழடுக்கு மாளிகையைப் பெரியார் குட்டிச் சுவராக்கி விட்டதாகவும், மண்மேட்டிலே மாளிகை அமைக்கச் சர் சண்முகம் வரவேண்டுமென்றும் கூறுவது அழகா, நீதியா, மனச்சாட்சிக்குச் சரியா என்று கேட்கிறேன். உண்மையிலே, சர் சண்முகம் வேறுவேறு இடங்கட்கு ''இரவல்'' அளிக்கப்பட்டிருந்தபோது, அவருக்கும் எனக்கும், தமிழர் யாவருக்கும் சொந்தமான மனை, அரசியல் மார்க்கட்டிலே, காங்கிரஸ் மார்வாடியிடம் சிக்கி, ஏலம் கூறப்பட்டபோது, மனையை மீட்டவர் யார்? இதனை மற்றவர் கூறுவதை விட, சர் சண்முகம் கூறவேண்டும். சண்முகமாலை பாடப் பெரியாரை வசைபாடவேண்டுமா! சண்முக வரவு பெரியாரின் துறவாக முடியவேண்டுமா! இருவரும் இருக்குமளவு, கட்சியிலே இடமில்லையா! தேரை விரைவாகச் செலுத்திச் சர் சண்முகம் தமது மனைபுகவேண்டுகிறேன். ஆயிரக்கணக்கிலே தொண்டர்கள் அவரை ஆரவாரத்தோடு வரவேற்பர்! சிலம்பொலியும் பூஜையும் வேண்டாத நேரே, நொந்துக்கிடக்கும் முதியவர் அருகே சென்று, ''பெரியாரே! அஞ்சற்க! வினைமுற்றி நான் வீடு திரும்பிவிட்டேன். இனி உமது பணி குறைய, நான் உதவி புரிவேன். என் ஆற்றல் இனி நமது மனைக்குப் பயன்படும்'' என்று கூறவேண்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாருக்கு அவர் அளித்த அறவுரையின், அடுத்த அதிகாரம், இதுவாக இருக்க வேண்டுமென்பது என் அவா! அது ஈடேறுமா?

சர் சண்முகம் கட்சித் தலைவராகவேண்டும், என்ற பிரச்னையைக் கிளப்பும் வேலையுடன் வேலையாகப், பெரியாரைக் கண்டித்தும் சிலர் இருப்பது, உண்மையில் எனக்குப் பிடிக்கவில்லை. சர் சண்முகத்துக்கும் அது பிடிக்காது என்றே நான் கருதுகிறேன். பெரியாரின் பெருந்தொண்டு, வரப்பும் வாய்க்காலும் அமைந்த கட்சிக்குமட்டுமல்ல, தமிழகத்துக்கே பெரிதும் பயன்பட்டதென்பதை மறுத்துப் பேசுவோர், நாளை சர் சண்முகத்தைச் சாடாமலா இருப்பர்! தமிழரின் தன்மானத்துக்கே வித்தூன்றிய

தலைவரின் வயோதிகப்பருவம், வாகை சூட்டி, வாழ்த்தும், 'பக்தர்கள்' நிரம்பியதாக இருப்பது முறை! அஃது இல்லையே, என்ற குறையோடு மட்டுமன்றி, அவருக்கு வசைமாலைதொடுத்துச் சூட்டிடல் முறையாகுமா, என்று கேட்கிறேன்.

உலகிலே பலபல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசிய நாவலரையும் நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கும், பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்யாசத்தை உணர வேண்டுகிறேன். அவர்கள் படித்த, பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே, கல்வீச்சு மண்வீச்சுக்கிடையே, என்பதை அறிய வேண்டும். அதிலும் சகலமும் உணர்ந்த சகலகலா வல்லவர்களும், வெறும் சாமியாடிகளைக் கண்டித்துப் பேசவும் சக்தியற்றுக் கிடந்தகாலை, பெரியாரின் பெருங்காற்றுத் தமிழகத்திலே வீசி ,நச்சு மரங்களை வேரோடு கீழே பெயர்த்தெறிந்தது என்பதை உணரவேண்டும். உணர்ந்திடின், கட்சித் தலைமையை ஏற்கச் சர் சண்முகம் வரவேண்டும் என்று எழுதுவதுடன், பெரியாரையும் சேர்த்துக் கண்டிக்கும் செயலை எவரும் புரியார். சர் சண்முகம், கட்சியின் நடுநாயகமாகத் திகழ்வதற்குப் பிறரின் தூண்டுதல் தேவையா! அதிலும் தூற்றல் முதலடியாகவும் தூண்டுதல் கடையடியாகவும் கொண்ட கவிதை, காதுக்கும் கருத்துக்கும் கேடுண்டாக்கும், கட்சியிலே கலகலப்பையும், அதன் மீட்சிப் பாதைக்கு வழி அடைப்பையும் உண்டாக்கும் என்பது என் அபிப்பிராயம். அதனை நான் வெளியிட்டதற்குக் காரணம், பெரியாருக்கு வக்காலத்துப் பெறவேண்டுமென்பதுஅல்ல. அவர் எவ்வளவோ எக்ஸ்—பார்ட்டித் தீர்ப்புகளைக் கண்டு கடகடவெனச் சிரித்துவிட்டு, மடமடவென நடப்பவர். சர் சண்முகம் போன்றாரின் பணி, கட்சிக்கும், கட்சியின் மூலம் தமி

மூருக்கும் பயன்பட வேண்டுமே என்ற கவலையினாலேயே, இதனை எழுதினேன்.

இன்றுமுதல் வேண்டுமானால் சர் சண்முகம், கட்சிப் பணி புரியத் தொடங்கட்டும், ஆயிரக்கணக்கிலே வாலிபர்கள் அவருடைய அணிவகுப்பிலே நிற்பர், அதைக் காணலாம். கட்சியின் பொருட்டுக் கொள்கைக்காகத், திராவிடத் தனி அரசு அமைக்கத் தியாகமும் வீரமும் உடனிற்கச் சர் சண்முகம், போர்க்கோலம் பூண்டால், எத்தனையோ வாலிபர்கள், தங்கள் வாழ்க்கையினைத் திரணமாகக் கருதித், தீயிலே குதிக்கவுந்தயாராவர். ஓராண்டு கட்சித் தொடர்பு, ஈராண்டு கட்சி நிழல், மூன்றாண்டு கட்சி முறுவல் பெற்றோரும், இன்னமும் எனக்கொரு பதவியில்லையா, பட்டம் கிட்டவில்லையா, என்று கேட்டிடுவது என்போன்றவர் உள்ளத்தை என்ன பாடுபடுத்துகிறது, என்பதை விவரிக்கத் தேவையில்லை. இத்தகையோர் மத்தியிலே இருந்துழலும் ஒரு சில உண்மைத் தொண்டர்கள், உள்ளம் ஒடிந்து போவதும், விழலுக்கு நீர்வார்த்துக் கெடுவானேன் என்று எண்ணுவதும் சகஜந்தானே! இந்நிலையை நீடிக்கவிடுவது, திராவிடத்தைக் கெடுப்பதாகும் என்று எச்சரிக்கிறேன், விசனத்தோடு. கட்சித் தலைவர் மாறவேண்டுமென்பதற்காகப் பெரியாரைக் கண்டித்து எழுதுவது முறையாகாது என்பதையும், கட்சிக்குப் பணிபுரிய, தலைமைப் பதவி இன்றியமையாததல்ல வென்பதையும், தியாக உணர்ச்சியுடன் தொண்டாற்றும் திறன் உள்ள தலைவர் வேண்டுமென்பதையும் , இன்று நமக்கு வேண்டிய தலைவர் அரசாள அல்ல, அரசு அமைக்க, என்பதையும் எடுத்தெழுதினேன். இவ்வளவும், வர்ணாசிரமம் ஒழிக! என்ற பரணியைப் பல் கலைக்கழகத்திலே, அன்று சர் சண்முகம் பாடினதன் விளைவே. எனக்கு எவ்வண்ணம் இப்பரணி, எழுச்சியை ஊட்டிற்றோ, அதேபோலே, இந்து, மித்திரன், முதலிய ஏடுகட்கு எரிச்சலையூட்டிற்று. பாசி படர்ந்த மனத்தினிடம் நான் பரிசுத்தத்தை எதிர்பார்க்க வில்லை. எனவே அப்பத்திரிகைகளின் போக்கு எனக்கு வியப்பூட்ட

வில்லை. அவை கக்கிய கண்டனம், காசநோயாளியின் இருமல்போல, அவைகளின் நோய்க்குள்ள குறிகளேயன்றி வேறல்ல; எனவே பரிதாபமன்றிச் சீற்றமெழவில்லை, அவற்றிடம். ஆனால் அவைகளிலே ஒன்றான மித்ரன், கண்டனத்தினூடே கோத்திருந்த ஒரு கருத்து, என்னைச் சற்றுச் சிந்திக்கச் செய்தது, தோழர்களே! சற்றுச் சோகத்தையும் தந்தது.

சர் சண்முகம், வகுப்புத் துவேஷம் வளர்க்கிறார், என்றுரைத்தது மித்ரன். இது, பழய பஞ்சாங்கத்திலே ஒரு பகுதி! அதுகண்டு நான் ஆச்சரியப்படவுமில்லை ஆயாசப் படவுமில்லை. ''நாசமாய்ப் போனவன், மணி பன்னிரண்டாகியும் தூங்கக் காணோமே'' என்று கைநொடிப்புடன் கூறுவாள் கள்ளி. காமவேதனையாலும், அதனைத் தீர்த்திடும் கள்ளப் புருடனாலும் பீடிக்கப்பட்ட கள்ளிக்குக் கணவன் விழித்திருப்பது கூடக் குற்றமெனத் தோன்றலாம். விபசாரியின் இந்த விசாரத்தைக் கண்டு, ''அபசாரம் அபசாரம்'' என்று கூறும் பேர்வழி, ஆண்மையற்றவனாகத் தானே இருக்க முடியும்! வில்லுக்கு ஒரு அம்பு, பல்லுக்கு ஒரு எலும்பு, அதுபோல் பாதிராத்திரி வேளையிலே பக்கத்துக்கோர் ஆள், தேடும் பாதகியின் மொழியைத் துச்சமெனத் தள்ளிடுதல்போல, நான் ஆரிய ஏடுகளின், கண்டன மொழிகளைத் துச்சமாகவே கருதுகிறேன். ஆனால் மித்ரன் ஒன்று எழுதிற்று, என் உள்ளம் கொஞ்சம் வேதனையடைந்தது. சர் சண்முகம் வர்ணாசிரமக் கோட்டையைத் தகர்க்கவேண்டுமென்று கூறுகிறார். அவர் நமது பழய நூற்களின் அருமை பெருமைகளை இப்போது தான் கொஞ்சங் கொஞ்சம் தெரிந்துகொண்டதாகக் கூறுகிறார். இனி, அவைகள் முழுதும் உய்த்து உணர்ந்துவிட்டால் வர்ணாஸ்ரமக் கோட்டையைத் தகர்க்கும் எண்ணத்தையே, அவர் கைவிட்டு விடுவார்!—என்று மித்ரன் எழுதிற்று.

சர் சண்முகம், கலையின் உயர்வுபற்றி, தமிழ்க் காப்பியங்களின் அருமை பெருமை பற்றிப் பேசினாரல்லவா! அதை

மித்ரன், தனக்குச் சாதகமாக உபயோகிக்கிறது. வர்ணாசிரமத்தை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணம் ஒரு நோய், தமிழ்க்கலையுணர்வு, அதனை நீக்கிடும் ஒரு மருந்து; மருந்து போன்ற அந்தக் கலையுணர்வினைச் சர் சண்முகம், இப்போது கொஞ்சம் கொஞ்சமாக உட்கொண்டு வருகிறார். இன்னும் மருந்தினைச் சற்று அதிகமாகப் பருகினால், நோயேபோய் விடும், என்ற தொனியிலே மித்திரன், தனது தம்பூரை மீட்டுகிறது. இது வெறும் நாரதகானமாக இருக்கக்கூடும். வர்ணாசிரமம் நோயா, வர்ணாசிரமத்தை ஒழித்தாகவேண்டும் என்ற விருப்பம் நோயா, எது நோய், என்பது வேறு விஷயம். கலை, மருந்தாவிருந்தா, என்பது வேறு விஷயம். அறிஞர் யாவரும், நாட்டை நலியச் செய்த நோய், வர்ணாசிரமம் என்றே கூறினர். வர்ணாசிரமத்தை மித்திரன், நாட்டை வளமாக்கும் வனிதாசிரமமாகக் கருதலாம், மித்ரபலம் பெருக அது ஏதுவாகக் கூடும்; அதுவும் வேறு விஷயமே. வர்ணாசிரமத்தை ஒழிக்கும் எண்ணம், பழங்காப்பியப் படிப்பினால் பாழ்பட்டுவிடும், என்ற கருத்தை மித்திரன் வெளியிட்டிருக்கிறது; உவமைத் தகராறுகளை ஒதுக்கிவிட்டால் இது விளங்குகிறது. இதிலே உள்ள சூட்சமம், என்னைச் சோகிக்கச் செய்கிறது. உண்மையிலேயே, கலை உணர்வு பெருகப் பெருக, தமிழர் என்ற இன உணர்வு அருகுமோ, அண்ணல் சண்முகத்துக்கும் இது நேருமோ, என்றே நான் அஞ்சுகிறேன். சர் சண்முகம், இதுபோது, தமிழ்க் காப்பியமெனும் பூங்காவிலே உலவுகிறார் என்பதும், அங்கு பறித்தெடுத்துத் தொடுத்த அழகிய மாலையினை வசந்த வட்டிலிலே வைத்துத் தமிழருக்குத் தருகிறார் என்பதும், கலாரசிகர்களுடன் கூடிக்குலவி, காவியக்கனி ரசமருந்திக்களிக்கிறார் என்பதும் பிறர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். மித்திரனும் அதனை அறிந்து, ''சரி! சரி!! அந்த ரசம் இன்னும் கொஞ்சம் உட்கொண்டால், வர்ணாசிரம ஒழிப்பு என்ற பேச்சு ஒழியும்'' என்று எழுதுகிறது. இது என்னைச் சிந்தனையிலாழ்த்திற்று. இனி அச்சிந்தனை பற்றிக் கூறுகிறேன். இதுபோது நீவிர்

சற்றே உமது சிந்தனையைச் செலவிட வேண்டுகிறேன். மித்திரன் கூறின வாசகத்தின் மர்மம் என்ன?

அழகான அந்திவானம்! ஆற்றோரத்திலே நாரை, கவலையுடன். கண்கள் முழுதும் திறந்துமில்லை, முழுதும் மூடியுமில்லை. கபடம் நிறைந்தவிழி, நாரைக்கு. நின்ற கோலத்திலே, தவங்கிடக்கிறது நாரை; சாதாரண ரிஷிகள் போலத் தனது முக்திகோரியல்ல! ஆற்றிலே துள்ளிக் குதித்து அல்லற்படும் மீன்களுக்கு, முக்தி தர!! எந்த ஆற்றோரத்திலும், பிற நீர் நிலையங்களிலும், நாரை நின்றிடும் இக்காட்சியை எவரும் காணலாம். கல்லெடுத்து வீசிடின், நாரை சென்று விடும். ஆனால் 'கவிதையை வீசி, அந்தக் காட்சி, என்றும் கருத்துள்ளோரின் மனதைவிட்டு அகலாத வண்ணம் ஒருவர் நாரைக்கு ''அமரத்துவம்'' அளித்துள்ளார். நாரை மீனைக் கொத்தித் தின்பதற்காக, அடக்கமே உருவானதுபோல, அங்குக் காத்திருக்கிறது அதன் தீய எண்ணம் துளியும் வெளியே தெரியாதபடி. நாரை நடிக்கிற நேர்த்தியைக் கவிஞர் காணுகிறார். மீன் தேடிடும் நாரை, ஆற்று நீரிலே இறங்கி அலையக்காணோம், வட்டமிடவுமில்லை, பதைக்கவுமில்லை; வேறு ஏதோ காரியத்துக்காக, அல்லது வெறும் பொழுதுபோக்குக்காக அந்தஆற்றோரத்தை அடைந்தது போலப் பாவனை புரிகிறது. அந்த நாரையின் நினைப்பு முழுதும், மீனின்மீது! நடிப்போ, சர்வ பரித்தியாகத்துக்கும் தயாராக இருப்பதுபோல்! இதைக் கண்ட கவிஞர், பறவை இனங்களிலே இவ்வளவு கவடம் கற்றதாக நாரை இருப்பதுபோல, மக்களிலே யார்உளர், என்று எண்ணாமலிருப்பாரா? கற்றோர்க்கும் மற்றையோர்க்கும், இதுதானே வித்யாசம்! கற்றோர், காட்சியுடன் கருத்தினைப் பிணைப்பர். மற்றையோர், காண்பர், களிப்பர், மறப்பர்! கவிக்கு, ஆற்றோரத்திலே நாரை நிற்கும் காட்சி, வஞ்சகத்தை மறைக்கும் நடிப்பு, மக்களிலே ஒருசாராரின் மனப்பாங்கையும் நடவடிக்கையையும் நினைவூட்டுகிறது. உவமை கண்டு உளம் களிக்கிறார். இயல்பினால் மட்டுமே உவமையன்று! இடமுங்கூட, ஒன்றாகவே இருக்கும் உவமை

அவருக்குத் தோன்றுகிறது. அதே ஆற்றங்கரைகளிலே, செவ்வானம் தோன்றும் வேளையிலே, நாரை போலவே, நினைப்பை நடிப்பால் மறைக்கும் ஒரு கூட்டத்தாரின் குணம் அவருக்கு நினைவிற்கு வருகிறது; ஒரு நேர்த்தியான கவிதையும் பிறக்கிறது, கவிஞரின் உள்ளத்திலிருந்து.

''பொன்மலைசுடர் சேரப்
புலம்பிய விடனோக்கித்
தன்மலைந்துலகேத்தத்
தகைமதியேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா
னொலி நீவியிளநாரை
முக்கோல்கொள் அந்தணர்
முதுமொழி நினைவார்போ
லெக்கர்மேலிறை கொள்ளு...''

நாரையைக் கண்டதும், பார்ப்பனவரின் நினைவு, கவிக்கு! ஆற்றோரத்திலே, அந்திவானத்திலே, நிற்கும் நாரை, மந்திர உச்சாடனம் செய்வதுபோன்ற பாவனையுடன், நீர்நிலையங்களருகே நித்த நித்தம் அமர்ந்துள்ள, பார்ப்பனரின் உருவம் போன்றிருந்ததாம் கவிக்கு! எந்தக் காலத்துக் கவி? கலித்தொகையாம்!! அந்தக் காலத்திலேயே, ஆரிய இனம், காரியம் பலிக்கக் கவடவேடமிட்டுக் கிடந்தது என்பதற்குச் சான்றுகள் அனேகமுண்டு. இன்றும் அந்த இயல்பு கொஞ்சமும் மாறாதுதானிருக்கிறது. நாரைபோல நின்றிருக்கும் நடிப்புத் திறனை அந்த இனத்தவர் செம்மையாகச் செய்வர்.

கலை எனும் அருவியோரத்திலே, ஆரிய நாரைகள் அமர்ந்துள்ளன; கலையருவிக் காட்சியிலே, தம்மை மறந்திருப்பதாகப் பாவனை! முதுமொழி நினைவார் போல, கலையின்பத்தையே நினைத்தவண்ணம், ஆரிய நாரைகள் அமர்ந்துள்ளன. இரையும் வேண்டாம் இந்த இன்பமே போதும், என்று கூறுவர்! இதிலுள்ள உண்மையின் உயர்வும், நேர்த்தியும், வேறு எதிலே காணமுடியும் என்றுரைப்பர்.

வேறொன்று வேண்டாப் பராபரங்களாக, கலை வழி பாடன்றிப் பிறிதோர் பெறத்தக்க பேறில்லை என்ற பெருங் குணவான்களாக, யாம் பெற்ற இன்பம் பெறுக இவையகம் என்று உபதேசிக்கும் உத்தமர்களாக, அறிவு பெரிது, அதனி னும் பெரிது அறிவின் பயனாக விளையும் ஆனந்தம், அதனி னும் பெரிது, அந்த ஆனந்தத்தை அனைவரும் பெற்றிடச் செய்தல் என்று கூறிடும் ஆசிரியர்களாகக் காட்சியளிப்பர். அவர்தம் நெஞ்சமோ, ஓர் எரிமலை! விழியோ, எவர் உழைப்பை எங்ஙனம் ஏய்த்துப் பெறுவது என்ற தந்திரத் தைக் கக்கும் குழிகள்! அருவியோரத்து நாரையின் நினைப்புத் துள்ளிக் குதித்திடும் மீனினத்தின் மீது! ஆரிய நாரைகட்கோ, கலையருவியில் குளித்து இன்புற வேண்டிவரும் தமிழரைக் கொத்தித் தின்பதன்றி வேறில்லை. கலையருவியே, இக் காரணத்திற்குத் துணையாக நிற்கிறது. கடிவாளத்திற்கு வாய் திறந்த பிறகு, குதிரையின் கொட்டம் அடக்கப்படுவது ஆச்சரியமாகுமா? மூக்கணாங்கயிற்றுக்குச் சம்மதித்த பிறகு, மூலைவாரினால், சாட்டைதானே பேசும்! அது போலத்தான், கலையருவியிலே நீந்தி மகிழத் தொடங்கி விட்டால், ஆரிய நாரைகளின் கூரிய மூக்கின் வேலையும் தொடங்கும். கலையருவி அங்ஙனமுளது இங்கு. எனவே தான், ''சரி, சரி, செட்டியாரே! கலை உணர்வு பெற்று வருகிறீர்களல்லவா! அந்த உணர்வு இன்னும் கொஞ்சம் அதிகரிக்கட்டும், பிறகு ஆரிய திராவிடப் போராட்டத்திலே உமக்கிருக்கும் ஆர்வம், பஞ்சாகப் பறக்கிறது பாரீர்'' என்று மித்திரன் கூறுகிறது.

''ஒரே ஒரு செங்கல் பெயர்த்துவிட்டால் போதும்!'' என்று கருக்கலிலே நின்று கன்னமிடும் கள்ளன் கூறுவான்.

''கண் சிவந்துவிட்டது. கைகால் துடிக்கிறது. பேச்சும் படபடக்கிறது. இன்னும் ஒரேஒரு கிளாஸ் குடித்துவிட்டால் போதும், ஆசாமி கீழேசாய்வான். பிறகு அகப்பட்டதைச் சுருட்டலாம்'' என்று, மதுவை ஊற்றி மடியைத் தடவும் தடியர் கூறுவர்.

''இப்போதுதான் என்னிடம் அவருக்குப் பிரேமை அதிகரிக்கிறது. இது இன்னும் கொஞ்சம் வளர்ந்துவிட்டால் போதும், பிறகு நான் சொன்னபடி ஆடுவார்; சொத்து முழுவதையும் எழுதிக் கொடுத்தாகவேண்டும் என்று கட்டளையிட்டாலும் தட்டாமல் செய்வார்'' என்று கண்வெட்டால் கருத்தைவெட்டிய காமக்கள்ளி தன்னிடம் சிக்கிய சீமானைக் குறித்துக் கூறுவாள்.

''முகத்திலே இன்னும் ஒரே ஒரு குத்து விழுந்தால் போதும், ஆசாமி கீழே விழுவான். தங்கத்தோடாவும் வெற்றிமாலையும் நமக்குத்தான்'' என்று கூறுவான், குத்துச் சண்டைப் பந்தயத்திலே ஈடுபட்டவன்.

''இன்னும் சில நாட்களில் ஆசாமி சிவலோகப் பிராப்தியடைவான். பிறகு நானே சீமான், நமதே வாழ்வு'' என்று லோபியின் வாரீசு கூறுகிறான்.

இந்த ''ரகங்களிலே'' எதை நீங்கள். மித்ரன் வாசகத்திற்கு உவமையாகக் கொள்வீர்களோ, எனக்குத் தெரியாது தோழர்களே! எனக்கென்னமோ, இவ்வளவும் இன்னும் பலவும் தோன்றின, மித்திரன், சர் சண்முகம், பண்டைக் காப்பியங்களை மேலும் நன்றாகப் படிப்பாரானால் வர்ணாசிரமக் கோட்டையைத் தகர்க்க வேண்டுமென்ற நினைப்பையே விட்டுவிடுவார், என்று எழுதி இருந்ததைப் படித்ததும். சூட்சுமமின்றிச் சுதேசமித்திரன் எழுதாதே, வீணுக்கு வார்த்தையை வீசிடாதே, இந்த வாசகத்திற்கு விசேஷார்த்தமின்றி, மித்திரனில் இடம்பெறாதே, என்று எண்ணியே ஏங்கினேன். சென்ற கிழமையே உம்மிடம் இயம்பினேன்; இக்கிழமை, அதுகுறித்துச் சிந்தித்தேன்; செக்கர்கொள்வானமும், சிந்துபாடும் சிற்றாறும், நின்றிடும், நாரையும், நினைவிலே நின்றன!

''வர்ணாசிரமம்'' என்ற தலைப்பிலே, கலைப் படிப்பு, ஆரியக்குழியிலே, தமிழரைத் தள்ளக் கூடியதாக இருக்கிறது என்று எழுதுகிறாயே, சர்சண்முகம், தமிழ்க்

கலையிலே ஆர்வங்கொண்டிருப்பதால், நல்லது விளையுமே யன்றி நாசமா நேரிடும், விளக்கு, என்று அன்பரொருவர் கேட்கிறார். பழைய காப்பியங்களைப் படிக்கப் படிக்க, ஆரிய திராவிடப் போராட்ட உணர்ச்சி ஒழியும் என்பது, ஆரியருக்கு நன்கு தெரிந்திருக்கிறது. ஆகவேதான், தற்காலப் புத்தறிவுப் பிரச்னைகளைப் பற்றிப் பேசும்போது எழுதும்போதுங்கூடப், பழைய ஏடுகளுடன் அவைகளை இணைத்துக் காட்டுகின்றனை. இரு கருத்துகள் அவர்கட்கு, இரண்டும் இடையூறு உண்டாக்குவனவே! ஒன்று இன்றைய உலகிலே புதிதாக ஒரு அறிவும் இல்லை, பழமையிலேயே யாவும் உள, என்று பேசுவதன்மூலம், புத்துலக உணர்வு வராமல் தடுப்பது. மற்றொன்று, அத்தகைய பழமை உணர்வின்படி நிற்பின், வர்ணாசிரமம் நிலைக்கும் என்பது. இவ்விரண்டும், நாட்டுமக்களை நலியவைத்து, ''முகத்துதித் தோரை'' முடிசூடா மன்னராக்கும் முறைக்குப் பயன் படுகின்றன. எனவேதான், நான் கலையருவியிலே கவலையுடன் ஆரியநாரை அமர்ந்திருக்கிறது, அதைக் கவனத்தில் வையுங்கள் என்று கூறினேன்.

எந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவவிடாதே! எதையும் உனக்குச் சாதகமானதாக்கிக் கொள்ளத்தவறாதே! என் பவை, ஆரியரின் இலட்சியம், இரண்டாயிரம் ஆண்டுகளாகவே! இதன்படியேதான், கலையையும் அவர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் புகுத்தும் கருவியாக்கினார்கள். உணவு கண்முன் ஊசலாடுகிறது என்ற உவகையுடன் துள்ளிக் குதிக்கும் மீனுக்குத் தூண்டிலே தூக்கு மரமகிறது! அதுபோலக் கலையழகு காண்போம் என்று எண்ணிப், பழமைமுன் கூத்தாடும் தமிழர், ஆரிய ஆதிக்கத்திலே சிக்கிவிடுகின்றனர். ஒரு சிறு சம்பவம். புத்துலகப் பற்றுக்கொண்ட ஒரு திருவாளரின் திருமனையிலே நடைபெற்றது, கற்பனையல்ல; ஆனால் கண்ணியமான முறைக்காகவேண்டி, பேருக்கு முகமூடியிட்டிருக்கிறேன்; உமது மன்னிப்பை எதிர்பார்த்து.

''வாருங்கோ! நேற்றுமாலை நெடும்நேரம் வரை காணோம், எங்கே போயிருந்தீர்கள்?'' என்று கேட்டார் புத்துலகப் பற்றுடையார். பழமையாளர் சொன்னார் ''பரத நாட்டியம் காணச்சென்றேன். பரமானந்தம் கொண்டேன். பாத்திரம் முதல் தரமானது. அபிநயம் அபாரம். கீதம், லலிதமாக இருந்தது'' என்று. புத்துலகப் பிரியருக்கு நடனங் காண ஆவல் பிறந்தது, கலைக்காகத்தான்! கண்டார். ''கண்டவுடன் எந்தன் உள்ளம் கொள்ளைகொண்ட கள்வா' என்ற பாட்டுக்கு அபிநயம் அழகுற நடந்தது. அம்மையும் கலைக்காகத்தான் அதனை நடத்தினார். இருவரும் தங்களை அறியாமல் கட்டிலறை நோக்கி நடந்தனர், அது வேறு விஷயம். பிறகு, நர்த்தனத்தத்து வந்தான் நடராஜர், என்று புத்துலகப்பிரியருக்குப் பழமையாளர் புகன்றார். விக்ரகம் வாங்கப்பட்டது, அந்தத் தூக்கி நின்றாடும் காட்சி யிலே, கூத்தின் விளக்கங்காணத்தான், வேறு எதற்குமல்ல; காலையிலே காண்பார், கலையழகை எண்ணுவார், கூத்தனின் சிலை மூலம். பிறகு பழமையாளர், ''விக்ரக கத்தை வீணாகப் பாழாக்குகிறீர். நீராட்டாது விட்டீரேல், அது பாசி ஏறிப் பாழ்படுமே'' என்றுரைத்தார். ஆமென் றார், புத்துலகர். அபிஷேகம் என்ற முறையிலே அல்ல, விக்ரகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது என்ற முறைக் காக, நீராட்டி வரலானார்.

''பளபளப்பான சிலைக்கு ஒரு பட்டுத் துண்டும் கட்டிப்பாருங்கள். அதன் அழகே அலாதிதான்'' என்றார் திருவாளர் பழமை. மிஸ்டர் புதுமை, ''இது ஒரு பிரமாதமா, கொண்டு வா, கொள்ளேகாலம் பட்டு வேஷ்டி'' என்றார். ''வீட்டிலே, பறிப்பாருமின்றி மலரும் மலர், உமது அறையிலே மணமூட்டட்டும். அதைப்பறித்து மாலை தொடுத்துக் கூத்தன் சிலையிலே போட்டுவிடுங்கள்'' என்றார், பழமை. அதுவும் நடந்தது. ''உங்களுக்கிருக்கும் வேலையிலே, காலையிலே இந்தக் காரியங்களையெல்லாம் எப்படிச் செய்து கொண்டிருக்க முடியும், யாராவது ஒரு ஐயனை வேலைக்கு வைத்து விடுங்கள்'' என்று பழமை

யோசனை கூறினார். ஐயரும் வந்து சேர்ந்தார். அவர் தமது வேலையைச் சரியாகச் செய்கிறாரா என்று பார்க்கக் காலையிலே மிஸ்டர் புதுமை செல்லலானார். ஐயர், விபூதி மடலை நீட்டினார். இரண்டொரு வாரங்களிலே ''குனித்த புருவம்'' எனும் தோத்திரம் பாடவும், கூத்தனை எட்ட நின்று கும்பிடவும், குடும்பக்கோயில் குருக்கள் தரும் குங்கும விபூதியைப் பயபக்தியுடன் வாங்கவும், மிஸ்டர் புதுமை பழகிவிட்டார். திருவாளர் பழமை ''தீர்த்துக் கட்டி விட்டோம் ஒரு தீப்பொறியை'' என்று தமது குறிப்புப் புத்தகத்திலே பொறித்துக் கொண்டார்.

இதுபோலக் கலையிலே தொடங்கி ஆரியவலையிலே வீழும்வரை பலர் சென்று விடுவதைக் கண்டதாலேயே நான், ''கலையின் பேரால் ஆரியர் நடத்தும் சூது இது, எச்சரிக்கை'' என்றுரைக்கிறேன்.

பழைய காப்பியங்களைப் படித்துக் கலையுணர்வு பெறுவது, இன எழுச்சியைச் சாகடிக்கும் நச்சு, என்ற மித்திரன் வாசகம், ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தென்பது என் கருத்து. ஒருவரை மற்றொருவர் அடிமைகொள்ள, வசியப்படுத்த, வீழ்த்த, வகை பல உண்டு. முறை பல உண்டு. வீரர் வேல்கொண்டு போரிடுவர், தமது ஆற்றலையே, ஆதிக்க அளவு கோலாகக் கொண்டு, வீரமற்று வஞ்சக உள்ளங் கொண்டோர், மறைந்திருந்து தாக்குவர், மாற் றானை மாய்த்திட எம்முறையும் ஏற்றதே என்று கூறுவர். மராமரங்களுக்குப் பின்புற மிருந்து வாலியைக் கொன்ற தால் காரியத்தைச் சாதிக்கும் கயவரும் உண்டு! எதிர்ப் போனின், உடன்பிறந்தாரையோ, ஏவலரையோ, விலைக் குப்பெற்று, விபீஷணாழ்ஸ்திரத்தால் வீரனை வீழ்த்தும் வகையுமுண்டு. மாயமொழி பேசியும் மாற்றானை மாய்ப்ப துண்டு! எதிரியின் ஏமாளித்தனத்தைத் தெரிந்து அவனைச் சாய்ப்பவருமுண்டு. உலகம் பலவிதம். கரியைப் பிடித் திழுத்துக் கரகர வெனச் சுழற்றி அடிக்கும் வீரனானாலும், கனகவல்லிகளின் கடைக்கண் பார்வையாலோ, புன்சிரிப்

பெனும் பாணத்தாலோ, அதரமெனும் அஸ்திரத்தாலோ, அடியற்ற நெடும் பனையாவதுமுண்டு. தேவர்கள் யாவரையும் தீர்த்துக்கட்டும் மாவலி பெற்ற அசுரர்கட்கு, அமிர்தம் தந்திடின். அமரர் உலகு அசுர உலகாகுமென்றெண்ணிய அரி, அழகி உருக்கொண்டு ஆடிப்பாடி அசுரரை ஏய்த்த சூது, ஆண்டவன் லீலையாகப் போற்றப்படும் இந்நாட்டிலே, வேறுபலர், மோகினிரூபம் வீரரை வீழ்த்தும் வேல் என்று கொண்டதிலே ஆச்சரியப்படுவதற்கில்லை. ''சர்வ வல்லமையுள்ளவரே, சாகசத்தைச் சக்கரமாகக் கொண்டே அசுரரை சம்ஹரித்தார் என்றால், சாதாரணமக்கள்; அம்முறையைக் கையாளாமல் இருப்பரோ! இங்ஙனம், ஒருவரை ஒருவர் வீழ்த்தப் பல்வேறு வகையும், பல்வேறு கருவியும் இருத்தல் போலவே, ஒரு இனத்தை மற்றோர் இனம் அடக்கக் கையாளும் முறையும் பலவகைப்படும். தீப்பந்நமும் திடீர்த்தாக்குதலும் ஒரு முறையாக அமைந்திருக்கிறது! படையில் கலகமூட்டுவதும் பாசறை கெடுத்தலும்,சிலசமயம் கையாளப்பட்டன. அடுத்துக் கெடுப்பதும், அணைத்து அழைப்பதும் சில சமயம் நடந்ததுண்டு. உலகிலே இதுபோல, இனப்போரின்போது, ஒவ்வோர் விதமான முறையைக் கையாண்டிருக்கிறார்கள். ஆரிய இனம் எப்படை கொண்டும் திராவிடரை வீழ்த்தவில்லை; அப்புறப்படையினருக்குப் போரிடும் ஆற்றலே இருந்ததில்லை. திராவிட இனம், ஆரிய தாசராக மாறிட ஆரியர் கையாண்ட முடை, கலையருவியிலே திராவிடரைத் தள்ளியதுதான்! எமது கலையழகைக் காணீர், என்று கூறித் திராவிட இனத்தை மயக்கி, வீரரைக் கோழைகளாக்கி வீழ்த்தினர். அன்று வீழ்த்தியது மட்டுமல்ல, இன்றும், இனி என்றுங்கூட அந்தக் கலை எனும் அங்குசத்தால் திராவிடமெனும் மதகரியை அடக்கலாம், என்ற மனப்பான்மையுடனேயே ஆரிய இனம் இருக்கிறது. அதிலே ஓரளவு உண்மையும் இருக்கிறது

மாயா உலகைத் துறக்க எண்ணினார் ஓர் மலையாண்டி காவி அணிந்தார், காடேகினார் கடும் பசி வந்துற்றபோதன்றி கண்திறவார். கடுந்தவம் செய்து

வந்தார். ஓர் மாலை, முல்லை மலர்ந்திருக்கக் கண்டார், நறுமணத்தைப் பெற்றார், நன்று நன்றென நவின்றார். இரவு இறைவனின் திருவருளை வேண்டினார், உறங்கினார். காலையிலே, முல்லை கண்ட பக்கம் சென்றார், மலரைக் காணோம்! மகேஸ்வரனைச் சிலவிநாடி மறந்தார் முல்லையைப் பறித்தது யாரோ, என்ற சிந்தனையில் ஈடுபட்டார். அருகே, காலடிக்குறி கண்டார், சற்றுங் கோபங் கொண்டார். மாலைவேளையில் கைப்பிடியாகக் கள்ளனைப் பிடிப்போமென்று கருத்துட் கொண்டார்; காயமே இது பொய்யடா என்றார்; கண் மூடினார் கனிமரத்தடியிலே. மாலையில் சென்றார் முல்லைப் புதருக்கு. முழுமதியன்ன முகவதி, முல்லைச் சிரிப்புடன் நின்றிடக் கண்டார், முல்லையைப் பறித்தபடி! ''பேசா மலரைப் பறிக்கும் பேசும் மலரே!'' என்று அழைத்தார். வணங்கினாள் வனிதை, வந்தவழி சென்றாள்; விழியை அப்பக்கமிருந்து வாங்கிட விரக்தி மார்க்க வித்தகருக்கு நெடுநேரமாயிற்று. மறுதினம் மாலை, மங்கை வருமுன்னம், மலரைப் பறித்தார். வந்ததும், வாஞ்சனையுடன் அவளிடம் தந்தார். தருகையிலே, கரத்தோடு கரம் சேரக் கருத்தோடு கருத்து மோதிக் கொண்டது. மறுதினம், காலை முதல் காடு முழுதும் சுற்றி வகைவகையான புஷ்பங்களைப் பறித்தார் துறவி; மாலை நேரத்திலே, முல்லைப் புதருக்கு ஓடோடி வந்தார், முல்லையைக் கொய்தார்; ஏன் இன்னும் அந்த இரஞ்சித சுந்தரி வரவில்லை என்று தன் நெஞ்சைக் கேட்டார் மங்கை வந்ததும், ''இதோ மல்லிகை, இது முல்லை, செண்பகக்கொத்து, ரோஜா, இதோ செந்தாமரையும் உண்டு காண்'' என்று, மலர்க் குவியலைக் காட்டினார். ''மகானே! இந்த மங்கையின் பொருட்டு இவ்வளவு சிரமமா?'' என்று கேட்டாள் மங்கை. அன்று அந்த மது உண்டதால் புதிய உற்சாகம் பெற்ற நீறுபூசி, நீற்றையும் நிகண்டையும், நித்ய பூஜையையும் நிஷ்டையையும் துறந்தார்; மலர் பறித்திடவும் மாலை தொடுத்திடவும், மங்கையைக் கண்டிடவும் மலர் தந்திடவும் அவருக்கு, நேரமும்

நினைப்பும் இருந்தது. இந்த 'சக்தி' பூஜையின் பலனாக, அவர் சன்யாச ஆசிரமத்திலிருந்து கிரஹஸ்தாசிரமம் புகுந்து மாயா உலக பந்தம் வேண்டேன் என்ற மனனத்தைத் துறந்து மனையறம் படித்து, அந்த ஊரிலேயே முதல்தரமான புஷ்பம் விற்பவரானார், என்றோர் கதை உண்டு. கலை இங்குள்ள நிலையிலே, அதிலே இலயிப்பவர் கதியும், மலையாண்டி மனையாண்டியானது போலத்தான் முடிகிறது, என்று நான் எண்ணுகிறேன். கலா ரசிகராகத் தொடங்கும் வாழ்க்கை கனபாடியின் தோழராக்கி, பக்தராக்கி, ஆரிய அடிமையாக்கி விடுகிறது. அந்த விதத்திலே கலை அமைந் திருக்கிறது. சங்க நூற்களிலேயுங்கூட சந்து கண்ட இடங் களிலே வந்து நுழைந்து கொண்டது ஆரியம். கடைச்சங்கத் திற்குப் பிறகோ எனில், ஆரியக் கருத்தேஉட்பொருளாகவும், கலையே கவசமாகவும் அமைந்த நூற்கள் பெருகிவிட்டன. சங்க நூற்களிலே, யானை அலறக் கேட்டு அஞ்சிய தலை மகளை அஞ்சற்க என்று கூறி ஆதரித்த தலைமகனைக் காண்கிறோம்; பிறகோ, அண்ணனை ஆனையாக்கியனுப்பி வள்ளியைப் பயமுறுத்தி மணம்புரியும் வேலன் கதை வீடு தோறும் புகுந்தது காண்கிறோம். சங்க நூற் சித்திரம் சிலருக்கே தெரியும்; புராணக் குப்பையோ, தெரியாதார் மிகமிகச் சிலரே.

சங்க நூற்களிலே, மந்திக்குக் கனி பறித்தீயும் காதற் கடுவனைப் பற்றிய சித்திரம் காண்கிறோம். பிறகோ, சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுக்கும் சர்வ பண்டித னாம் அனுமனைக் காண்கிறோம். உண்மை உவமையை உரைத்த உயர் நூலை அறிந்தோர் சொற்பம்; புராணப் புளுகைப் போற்றிடுவாரோ, பெருந்தொகையினர். ஆண் மான் பெண்மானுக்குத் துணை நிற்கும் அழகிய காதலறத் தைக் காட்சியாக்கிய கவிதை படித்த தமிழனுக்கு, மாரீசனின் மாய மான் கதை கலையாக்கப்பட்டு விட்டது! முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை, எனும் நிலப்பண்பு தெரிந்து இன்புற்ற இயல்பு முன்பு! பிறகோ, நாலுவர்ண மெனும் நச்சுப் பொய்மைகயில் நெளியும் நிலைமை!! கலை

யின் பேரால், ஆரியக் கற்பனைகள், தமிழரின் கருத்திலே தூவப்பட்டு விட்டன. இதனை நன்கறிந்தே சுதேசமித்திரன், ''கலையுணர்வுப்பெறப் பண்டைய காப்பியங்களைப் படித் திடட்டும் சர் சண்முகம், அதன்மூலமாகவே அவரை முறி யறிக்க முடியும்'' என்று கருதுகிறது. முடியுடை வேந்தரை யும் வீரரையும் வீழ்த்திய முறை அதுவன்றோ, சர் சண் முகம் மட்டும் என்ன, தப்பவா போகிறார், என்று மித்திரன் கருதுகிறது. நறுமலர்க் கூடையிலே நச்சரவு இருந்திடின், மலர்தேடும் கையிலே விஷப் பல்லன்றோ தீண்டும்! பழைய காப்பியத்திலே பிரேமை அதிகரித்தால், திராவிடப்பண்பு பாழ்பட வழி இருக்கிறது என்பதறிந்தே, சுதேசமித்திரன் அந்தச் சொல்லை வீசியிருக்கிறது. உண்மையிலேயே, சர் சண்முகம், கலையின் மேம்பாட்டினைச் சுவைக்கக் காப்பியக் கடலிலே மூழ்கிடுவதை நான் தடுக்கவில்லை. ஆனால், அக் கடலிலே, ஆரிய அலை மோதுகிறது, சுனாதனமெனும் சுறா மீன்கள் உலவுகின்றன, வர்ணாசிரமம் எனும் வாயகன்ற திமிங்கிலமுளது, என்று எச்சரிக்கை செய்யா விடின், எனக்கு அவர்பால், உள்ள அன்பினை மறந்தவ னாவேன். கலையுலகிலே, அவர் உலவுவது, ஆரியபுரிக்கு அவரை அழைத்துச் செல்லாதிருக்கவேண்டும். கலையார் வத்திலே ஈடுபட்டு, ஆரியராவது திராவிடராவது, என்று கூறிடும் முத்துரங்கமாகவோ, இகலோகத்தைப் பற்றி இவ்வளவு கவலைப்பட்டுக் கிடப்பானேன் பரலோகத்தைப் பற்றியன்றோ சிந்தனை செயல்வேண்டும் என்று கூறிடும் முத்துரங்கமாகவோ, இகலோகத்தைப் பற்றி இவ்வளவு கவலைப் பட்டுக் கிடப்பானேன் பரலோகத்தைப் பற்றி யன்றோ சிந்தனை செயல்வேண்டும் என்று கூறிடும் பாரா யண பக்தராகவோ, மாறிடாதிருக்கவேண்டும்.

□ □ □

# 3
# நெற்றியில்...நெஞ்சில்?

"என்னடி அது, கூட்டுகிற சத்தத்தைக் காணோம்"

"இதோ, பெருக்கிக்கிட்டுதானேம்மா இருக்கிறேன். பீரோ கண்ணாடியைத் துடைச்சேன்."

"கண்ணாடியைத் துடைச்சியா, கண்ணாடியை! கண்ணாடி எதிரே நின்று கொண்டு, அழகைப் பார்த்துக்கிட்டே போலிருக்கு. வர வர உனக்கு 'ராங்கி' அதிகமாகுதடி நண்டு"

"நண்டு" என்று அழைக்கப்பட்ட வேலைக்காரியின் உண்மையான பெயர் மீனாட்சி. வேலைக்கு வந்த அன்று. "என்னடி பெயர்?" என்று எஜமானி கேட்டபோது, 'மீனாவுங்க'" என்று பணிவுடன் பதில் சொன்னாள் வேலைக்காரி, "மீனும், நண்டும்" என்று கூறிக்கொண்டே மின்னல்கொடியாள் சிரித்தாள். மீனாவுக்குத் தெரியுமா, அந்தச் சிரிப்பு எவ்வளவு அழுத்தக்காரர்களின் பெட்டிகளை எல்லாம் திறந்திருக்கிறது என்று. அவள் மரம்போலநின்றாள். அன்று முதல் மின்னல் கொடியாள், மீனாவை 'நண்டு' ஆக்கினாள்.

அன்று மின்னல் கொடியாளுக்குப் பிரத்யேகமான சந்தோஷம். ஜெமீன் குடிகளின் பாதுகாப்புச் சங்கத் தலைவர் ஜெயச்சந்திரர், மின்னல் கொடியாளின் முதலியாரிடம் ஒரு பந்தயம் கட்டினார். அதாவது முதலியாருக்கு ஆண் குழந்தை பிறக்குமென்று—இல்லை; பெண் தான் என்று முதலியார் கூறினார்.

"ஆண்" என்றார் ஜெயச்சந்திரர்.

"பந்தயம் என்ன?" என்று மின்னல் கொடியாள் கேட்டாள்.

"ஒரு வரை திருகுபில்லை" என்றார் ஜெயச்சந்திரர்.

ஒரு வாரத்திற்கெல்லாம், முதலியாருக்கு 'பெண் குழந்தை' பிறந்தது! (வீட்டில் முதலியாரின் மனைவிக்கு) ஜெயச்சந்திரர் தோற்றார். அதற்காக அவர் வருத்தப் படவில்லை—கொஞ்சம் முந்திக்கொண்டதால், அவள் முதலி யாரின் பொருளாகி விட்டாள். இல்லாவிட்டால் ஜெயச் சந்திரன்...

மின்னல் கொடியாளுக்காகப் போட்டியிட்டவர் பலர். ஏழாவது கீர்த்தனை முடிப்பதற்குள் பாட்டு வாத்தியாருக் கும் பக்க வாத்தியாருக்குமே பலமான போட்டி. சங்கீத விஷயமாக அல்ல—மின்னல் கொடியாள் விஷயமாகத்தான்!

ஒருமுறை மின்னல் தாளம் தவறிவிட்டாள்—பாட்டு வாத்தியாருக்கு, அது ஓர் அற்புதமான சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

''தக்க தக்கிட்டா..தக்க தக்கிட்டா' என்று உச்சரித்த படி சிட்டிகை போட்டுக் காண்பித்தார். பிறகு மின்னலின் தொடையிலே அவரே அந்தத் தாளத்தைப் போட்டுக் காட் டினார். பாட்டு வாத்தியாருடன் ஒவ்வொரு நாளும் தவ றாமல் வந்து மின்னலின் கீதப் பயிற்சியைக் கவனித்து வந்த பிடில் முத்தையாவுக்குப் பிரமாதமான கோபம். ''எப்படி யய்யா..மின்னல் கொடியாளைத் தொட்டுத் தாளம் போட்டுக் காட்டலாம்? ஏன், சொன்னால் போதாதா?'' என்று கேட்டார்.

''அட, அபசுரமே! நீயா என்னுடைய ஞானத்தைக் குறைகூற வந்துவிட்டாய்?'' என்று பாட்டு வாத்தியார் கண்டித்தார்.

''ஏனய்யா! உங்க ரெண்டு பேருடைய வித்துவத்தைப் பற்றி விவாதித்துக் கொள்ள என் வீடுதானா இடம்? இதற் குத்தானா...மாதம் பதினைந்து?'' என்று, மின்னலின் தாயார் முருகாயி கூறிய பிறகுதான், தாளச்சண்டை ஓய்ந் தது. இப்படிப் பலருக்குள் போட்டியை, சண்டையை மூட்டி விட்ட மோகனச் சிரிப்புக்காரி அந்த மின்னல் கொடியாள்.

ஜெயச்சந்திரர் பரிசாகக் கொடுத்த வைரத் திருகுபில் லையை வைத்துக்கொண்டு கூடத்திலே ஜவ்வாது பொட்டைச் சரிபார்த்துக்கொண்டிருந்த சமயம் அது. படுக்கை யறையைக் கூட்டப்போன மீனா, நிலக்கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தாள். இரண்டொரு நிமிஷம்! கூட்டும் சத்தம் கேட்காது போகவே, மின்னல்தான் 'நண்டு'வைச் கூப்பிட்டாள். கூப்பிட்டு, ''அழகைப் பார்த்துக் சொல்கிறாயாடீ!'' என்று கேட்டாள். இல்லையென்று சொன்னாள் மீனா. அது, உண்மை—பொய் இரண்டும் கலந்த பேச்சு. மீனா கண்ணாடியைத் துடைக்கவில்லை—பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்—ஆனால் அவள் தன் அழகைப் பார்த்துக் கொள்ளவில்லை. நெற்றியிலே இருந்த வீக்கத்தைப் பார்த்துக் கொண்டாள். அவளுக்குக் கிடைத்த பரிசு அது.

அவள், கணவன், ''கோழிச் சண்டை'' விடுபவன்.! எத்தனையோ விதமான தொழில் செய்து பார்த்து, கடைசியில், அவன் இந்தத் தொழிலைக் கண்டுபிடித்தான். நாளும் பள்ளிக்கூடத்துக்கு முன்புறம் கோழிச் சண்டை விடுவான்—காசு திரட்டுவான், பந்தயம் கூடக் கட்டுவார்கள் சில பேர். கோழியை, மில்டரி ஓட்டல் சின்னான் வாடகைக்குத் தந்து வந்தான். அதாவது, வாரத்துக்கு ஒரு ஜதை கோழி தருவான். எப்படியோ பாடுபட்டு, அந்தக் கோழிகளுக்குச் சண்டை போடக் கற்றுக் கொடுத்து விடுவான், கொண்டான் 'கொண்டைய நாயுடு' என்று கையிலே—பெரிய எழுத்திலே 'பச்சை' குத்திக் கொண்டு தான் இருந்தான். ஆனால் ஊரார் அவனை, 'கொண்டான்' என்றுதான் அழைப்பார்கள். கோழிக்கும் சண்டை போடும் திறமை வரும். ஞாயிற்றுக்கிழமையும் வந்துவிடும்—அன்று ஸ்பெஷல் கோழிப்புலவு தயாராகிவிடும்—புதிய கோழிகள் கொடுப்பான் சின்னான், திங்கட்கிழமை. இப்படியே கோழிகள் மாறிக்கொண்டே இருக்கும், கோழிகளின் திறமைக்குத் தக்கபடி, கொண்டானுடைய போதை ஒரு நாளைக்குக் கைலாயம் வரை அழைத்துச் செல்வதாக

இருக்கும். ஒரு நாளைக்கு எறும்பு கடித்த மாதிரி மட்டுமே இருக்கும். இந்த போதையின் அளவிலே அவன் அக்கறை காட்டி வந்ததால் வாடகைக்குப் பெறுவதைவிட, சொந்தத்திலே வாங்கி விடலாமே என்ற எண்ணம் பிறக்கவில்லை. பிறந்தாலும், 'மாலையிலே அந்தச் சோலையிலே உள்ள மயக்க மருந்து' அந்த எண்ணத்தைக் கொன்று விடும்.

வாடகைப் பணத்தைச் சரியாகச் சில சமயம் கொடுக்க மாட்டான் கொண்டான். கெஞ்சிப் பழக்கமில்லாதவன். எனவே, கோபமாகவே வீட்டுக்கு வருவான். மிகவும் கஷ்டப் பட்டு விஷயத்தைத் தெரிந்து கொள்வாள் மீனா. பிறகு அந்த மில்டரி ஓட்டல் அண்ணனைப் பார்த்து, நல்லதனமாகப் பேசி, கோழிகளைக் கொடுக்கும்படி சொல்வாள். அவனும் கொடுப்பான். மீனாவின் நடை, நொடி, பாவனை, முகவெட்டு எல்லாம் சின்னானுக்குப்பிடித்திருந்தது.ஆனால் 'அண்ணேன்' என்று அவள் கூப்பிடும்போது மட்டும்அவனுக்குக் கண்ணில் 'சால்னா'த் துளி விழுந்த மாதிரி எரியும். 'அண்ணே' என்று மீனா சொன்ன உடனே, சின்னான், 'ஏண்டியம்மா தங்கச்சி.'' என்று கேலியாகப் பதிலளிப்பான். முன் வார்த்தை தூது; பின்னால் வரும்வார்த்தைகள் சும்மா ஒப்புக்குக் கூறுவது, என்பது அவன் எண்ணம். மீனாவுக்கு அவனுடைய போக்கு புரியாமல்போகவில்லை.ஆனால் கொண்டானுக்குத் துரோகம் செய்ய அவள் மனம் ஒப்புவதில்லை. கோழி வாங்கிப் போக வரும்போது, ஒரு 'கப்' சாயாவும் சின்னான் தருவான். ''ஏண்ணே! அவருக்கு ஒரு ஜதை கோழியை விலைக்கேதான் வாங்கிக் கொடேன். நீதான் பகவான் புண்ணியத்தாலே நல்லா சம்பாதிக்கிறியே. இந்த உபகாரம் செய்யறதானே அண்ணே.'' என்று மீனா கேட்பாள். சின்னான் பரம திருப்தி அடைவான்.

''ஆவட்டும் தங்கச்சி! செய்வோம்...எனக்கும் ரொம்ப நாளா...மனசிலே எண்ணம் உண்டு. எதுக்கும் வேளை வர வேணுமில்லே'' என்று கூறுவான். மீனா அவன் எதற்கு வேளை தேடுகிறான் என்பதைப்புரிந்துகொள்ளாமலில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் எப்படியாவது தட்டிக்

கொடுத்துக் கொண்டே சின்னான் உதவியைப் பெற்றுத்தன் புருஷனை ஒரு வழிக்குக் கொண்டுவரவேண்டும் என்பது தான். சின்னானின் நோக்கம் வெளிப்படையாகத் தெரி கிறது...இஷ்டமில்லை—அத்தகைய சுபாவக்காரியல்ல.... ஆனாலும், அவனிடம் சண்டை போட்டுக் கொள்ளவும் இஷ்டமில்லை. என்னமோ ஒழிந்து போகிறான்—நம் வரை யில் நாம் ஜாக்கிரதையாக இருப்போம் என்று அவள், பாவம், எண்ணிக் கொண்டிருந்தாள்.

மின்னல் கொடியாளுக்குப் பரிசு கிடைத்த அன்று தான், வழக்கத்துக்கு மாறாகச் சின்னான், கோழி கேட்க வந்த மீனாவை, ''தங்கச்சி! நல்ல சமயத்திலே வந்தே! வா, வா!'' என்று அழைத்தான். — கபீரென்று இருந்தது மீனாவுக்கு; ஒருவிதமாகி விட்டது. ..இருந்தாலும் தைரி யத்தை வரவழைத்துக் கொண்டு, ''என்னாண்ணே! அவ்வளவு அக்கரையாக, என்னைத் தேடின காரணம்?'' என்று கேட்டாள்.

''தா! இத பாரு மீனா..நான் எப்பவும் மனுஷாளை மறக்கற வழக்கம் கிடையாது!'' என்று பொதுவான தத்து வம் பேசினான் சின்னான்.

இவ்வளவும் கடையின் தாழ்வாரத்தில் நடக்கிறது.

கடை அமைப்பே அவளுக்கு அன்றுதான் கொஞ்சம் பயம் தந்தது. தாழ்வாரத்துக்கும், உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கும் கொஞ்ச தூரம்தான் இருந்தது. ஒருவருக்கொருவர் தெரிய முடியாது; குறுக்கே இருந்த சுவரை எடுக்கும் விஷயமாக, கட்டடக்காரருக்கும் சின்னா னுக்கும் தகராறு.

''கொஞ்சம் மாவு இடிக்க வேணும் மீனா. ஆள் வர வில்லை'' என்று சேதியை ஆரம்பித்தான் சின்னான்.

''அடேயப்பா! இதுக்காக..தேடினேன், தேடினேன்னு சொன்னே! அதுக்கென்ன, இடித்துத் தர்ரேன். எங்கே உரல் இருக்கு?'' என்று கேட்டாள், மீனா.

''புழக்கடை நடையிலே இருக்கு. நீ போ. நான் ஆளை அனுப்புகிறேன். என்றான்.

உண்மையாகவேதான் அரிசியை ஆள் கொண்டு வந்து கொடுத்தான்—மகிழ்ச்சியாகவே மீனா மாவு இடித்துக் கொண்டிருந்தாள். ஓட்டலில் கூட்டம் குறைந்தது. குறும்புக்காரராக இருந்த இரண்டோர் ஆட்களை கடைவீதிக்கு வேறு வேலையாக அனுப்பிவிட்டான் சின்னான். முஸ்தீபு செய்து கொண்டு, 'கல்லா'வில் வேறு ஆளை உட்கார வைத்துவிட்டு, மாவிடிக்கும் இடம் சென்றான். அவன் வந்த பிறகு தான் அந்த இடமும் ஒரு குகை போல இருப்பது தெரிந்தது மீனாவுக்கு! கொஞ்சம் பயந்தாள். சின்னான் அவளருகே சென்று கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்தான். அவளும் அவனைக் கவனிக்காதவள் போலவே மாவிடித்துக் கொண்டிருந்தாள். ''வேலை நடக்கட்டும்!'' என்று கூறிக்கொண்டே அவளை அவசரமாக முத்தமிட்டான். அவன் பிடியிலிருந்து விலகினாள் வேகமாக. அந்த வேகத்திலே, எதிரிலிருந்தசுவரிலே மோதிக் கொண்டாள். நெற்றியில் சிறிது காயம்; வீக்கம்! சின்னான் சரேலென அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான். வழக்கமாக உட்காரும் இடத்தில் சென்று, சோகமாக உட்கார்ந்து கொண்டான்.

அவள் மாவு இடித்துவிட்டு, அதனை ஒழுங்காகத் தட்டிலே கொட்டி, ஓட்டல் ஆளிடம் கொடுத்துவிட்டு வீடு வந்தாள். வரும்போது அவளும் சின்னானிடம் ஒன்றும் பேசவில்லை; சின்னானும் அவளைக் கவனிக்காதது போலிருந்துவிட்டான். கோழிகளைமட்டும் ஓட்டல் ஆள் கொடுத்தான்.

அந்த நெற்றி வீக்கத்தைத்தான் மீனா, மின்னல் கொடியாளின் படுக்கையறைக் கண்ணாடி முன்பு பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களாகி விட்டன. நானாவிதமான மாறுதல்கள்! கொண்டான் சிறை சென்றுவிட்டான். சின்னான் பெரிய ஓட்டல்காரனாகிவிட்டான். குடி வகை

யும் கொடுத்து வாடிக்கைக்காரரைப் பெருக்கிக் கொண்டு. முதலியாரை தேர்தல் சுரண்டி விட்டது! ஜெயச்சந்திர ருக்குத் தோல்வியும் தேய்பிறையும், சொத்தில்—செல் வாக்கில் சகலத்திலும் மின்னல் கொடியாளிடம்.

இப்போது மீனா பணிப்பெண் அல்ல; பிரபல ஓட்டல் முதலாளி சின்னானின் வைப்பு. குதிரை வண்டியில் வந்து இறங்குகிறாள், மின்னல் வீட்டுக்கு. ''வாடிம்மா மீனா!'' என்று வரவேற்கிறாள் மின்னல். ''என்னக்கா, உடம்புக்கு?' என்று சுகம் விசாரிக்கிறாள் மீனா. பழைய பீரோவும்—நிலக்கண்ணாடியும் இப்போது அங்கு இல்லை. மீனாவின் நெற்றியில் திலகம் கொஞ்சம் கலைந்திருக்கிறது. மின்னல் அதனைச் சரி செய்து விடுகிறாள். அவள் கையில் அந்தத் தழும்பு தென்படவில்லை. நான்கு ஆண்டுகள் ஆகி விட்டன அல்லவா! மேலும், மீனாவின் தழும்பு நெற்றி யிலிருந்து மறைந்து இருதயத்தில் பதிந்து விட்டது.

அவள் விபச்சாரியாகி விட்டாள். அக்காவுக்கு மற்றொரு தங்கை! ஆண்களின் காமப்பசிக்கு மற்றோர் இரை! சமுதாயத்துக்கு மற்றோர் சனியன்! வறுமையில் புழுத்த புழு!

□ □ □

# 4
# எங்கும் அவன்

''**சோ**ளக் கொல்லைதானேடா! முக்கா ஏக்கரு, உங்க அப்பனுக்கு.''

''ஆமாங்க! மூணு ஏக்கர் இருந்ததுங்க முன்னாடி. அம்மாவுக்கு சீக்கு வந்தப்ப போயிடுச்சி...''

''உங்க ஆத்தாளும்தானே போயிட்டா....''

''வருஷம் மூணு ஆகுதுங்க. அம்மா காலமாயி. அப்பாரு அப்ப இருந்து பித்துப் பிடிச்சவர்போலக் கிடக்கறாரு....''

''சரி, சரி! இப்ப இந்த முக்கா ஏக்கர் பேர்லே 'மூணு நூறு கேக்கறியே கடன்—எப்படிடா கொடுக்கறது.''

''பாடுபட்டு வயத்தைக் கட்டி, வாயைக்கட்டி, பணத்தை மிச்சம் பிடிச்சி கடனைக் கட்டிவிடுவேனுங்க...''

''கடனைக் கட்டற ஆசாமியைப் பாரு, கலியாணமானதும், வசவசன்னு பெத்துத் தள்ளப்போறே, கொழந்தைகளை! குடும்பம் பெருக்குமே தவிர காசு எங்கேடா மிஞ்சப் போவுது?''

''இல்லிங்க! வரப் போறவளோட அதிர்ஷ்டம், எங்க குடும்பத்தை வாழ வைக்கும்னு....''

''ஜோசியம் சொல்லிட்டாங்களா! யாரு? அந்தப் பூஜாரியா? சரி, எக்கேடா கெட்டுப்போ. கலியாணத்துக்குன்னு கேக்கறப்ப, இல்லைன்னு அபசகுனம் மாதி

ரிச் சொல்லக் கூடாது என்பாங்க. அமாவாசை கழிச்சி வா, தர்ரேன். கூடவே பத்திரம் எழுத்தரப் பாரு...''

''பண்டரி ஐயாதானுங்களே!.... கூட்டிக்கிட்டு வாரேன்.''

''சொக்கன், சோளக்கொல்லையைக் காட்டிக் கடன் வாங்கியாவது சொர்ணத்தைக் கலியாணம் செய்து கொள்ளத் தீர்மானித்ததற்குக் காரணம், பணம் சேர்த்துக் கொண்டிருக்கும் பட்டாளம், சொர்ணத்தின் மீது ஒரு கண் வைத்திருந்தான் என்பதுதான்.

''அக்கா சொல்லிச்சி மாமா வர்றாங்களாம் மதறாஸ் பட்டணத்திலே இருந்து....''

''வரட்டுமே! என்னை என்ன ஊருக்கெல்லாம் மேளம் கொட்டிச் சொல்லச் சொல்தா சொர்ணம், ராஜாவர்றாரு ராஜாவர்றாருன்னு.''

சொர்ணத்தின் தம்பியிடம் இப்படிப் பேச்சு அடிக்கடி கோபம்.

கோபத்தைத் தாங்கிக் கொள்ளும் வேலையை, உழவு வேலையோடு சேர்த்து ஏற்றுக் கொண்டது எருது. 'வரட்டுலே!' என்று சொக்கன் அலட்சியமாகப் பேசினானே தவிர, உள்ளூரப் பயந்தான். பட்டாளம் ஒவ்வொரு தடவை வருகிற போதும் ஒவ்வொரு விதமான புது உடையுடன் வருகிறான். போன வருஷம் வந்தபோது கையிலே தங்க முலாம் போட்ட கடியாரம்! விரலிலே மோதிரம் பளபளத்தது! வாயிலே, வழக்கமான சிகரெட்டு! பேச்சிலே குறும்பு!

''சொக்கோய்! தொலைவிலே இருந்து பாத்தா, நிற்கிறது நீயா, உன் கொல்லையிலே இருக்கிற பொம்மையான்னு சரியாப் புரியலைடோய்!''

''ஏன் கண்ணிலே அத்தனை மப்பு! பட்டணத்திலே கண்ணாஸ்பத்திரி இல்லே? காட்டிக்கறதுதானே.''

''குறும்பாடா செய்யறே டே! மாடுகூட பழகறவன் தானே! புத்தி வேறே எப்படி இருக்கும்.''

''தெரியும், சும்மா கிடடா! தெருப் பொறுக்கி நாய்க ளோட சுத்தறவனுக்கு ரொம்பபேரு, இப்படித்தான் தேசம் ஆள்ற ராஜாப் போலப் பேசறது. போ! போ!'' இப்படிச் சில தடவைகளில் சச்சரவுகூட மூண்டுவிடும். பட்டாளம் பேச்சை வளர்த்துவதில்லை; சொக்கனுடைய தட்டுக்கு எருதே, 'ததிங்கினதோம்' போடுகிறபோது, நம்ம முதுகு எம்மாத்திரம் என்ற பயம்.

எப்போதாவது சந்தை கூடும் இடத்துக்கு, சொர்ணத் துடன் சேர்ந்துபோகும் வாய்ப்புக் கிடைக்கும் சொக்க னுக்கு. ஒரே மகிழ்ச்சி, பெருமை. பார்ப்பவர்கள் எல் லோருமா நல்ல இயல்பினர், பலவிதமான பேச்சு, காதில் விழும்.

''பய, சொக்குப்பொடி போட்டுட்டாண்டா....''

''கிளிபோல பொண்ணு இருக்குது: இவன் இருக்க றான் தடியனாட்டம்.''

''கட்டிக்கிட்டா மாடிவீடு கட்டித் தரேன்னு சொல்லி இருப்பான்.''

''மாடி வீடு கட்டற முகத்தைப் பாரு.''''

''பொண்ணு பாரேன்! என்னமோ ஒரு பெரிய இள வரசன் கூடப் போறதுமாதிரி, நடை நடக்கறதை.''

கோபத்தை அடக்கிக் கொள்வான் சொக்கன்.

ஒரு எண்ணம் மட்டும் தோன்றும். சொர்ணம் கண்டு பெருமைப்படக் கூடிய விதமாக,வாழ்ந்து காட்டவேண்டும் ஊரார் புகழ்ந்திடும்படியாக நடந்து, ஊரே தன்னைப்புகழ் வதைக் கேட்டு சொர்ணம், பெருமை கொண்டிட வேண் டும் என்ற எண்ணம்.

கடனைப் பெற்றுக் கொண்டான். ஊர்ப் பெரியவரை அனுப்பிவைத்தான் சொர்ணத்தின் தந்தையிடம். சொர்ணத்தைத் தரச் சொல்லிக் கேட்டிட. சொர்ணத்தின் தகப்பனார் துளியும் பிடி கொடுக்கவில்லை. ''சோளக் கொல்லை பேர்லேகூடக் கடன்! இவனை நம்பி எவன் ஒரு பெண்ணை ஒப்படைப்பான்? மனசு இடம் கொடுக்கல்லே. மேலும் பட்டாளம் நம்ம பெண்ணைக் கட்டிக் கொள்ளணும்னு ஒரு எண்ணம் கொண்டிருக்கிறதா தெரியுது'' என்றார் அந்த முதியவர். ஊர்ப் பெரியவர், பட்டாளம், பட்டணம்போய் நாலுகாசு சம்பாதித்திருந்தாலும், நடவடிக்கை சரியில்லை என்கிற பேச்சு இருப்பதையும், 'தொடுசு' ஒண்ணு இருக்கதாக கேள்வி என்பதையும் சொல்லிப் பார்த்தார். ''எவ்வளவோ ஆடிக் கிடந்ததுகளெல்லாம் ஒரு கால்கட்டுப் போட்டதும், தன்னாலே அடங்கிப் போகல்லியா, பட்டாளமும் அப்படித்தான்'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டார் சொர்ணத்தின் தந்தை.

இந்தச் சமயமாகப் பார்த்து, சொக்கனுடைய அப்பா, எங்கோ சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார். அவரைத் தேடி அலைவதும், சொர்ணத்தை எண்ணி ஏங்குவதுமே சொக்கனுடைய வேலையாகி விட்டது. கடன் வாங்கி வைத்திருந்த பணத்தைக் கொண்டு, வேறோர் சிறு கொல்லையை வாங்கினான். அதிலே ஒரு வழக்கு முளைத்தது! புதிதாக வந்த கொல்லை, பழைய கொல்லையையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய்விட்டது. சொக்கன், கூலிக்கு உழுபவனானான்.

கடன் கொடுத்து, கொல்லை மேட்டை எழுதி வாங்கிக் கொண்டாரே, ஏலகிரி-அவருடைய வீட்டிலே எடுபிடி. அவர் நிலத்தைக் கவனித்துக் கொண்ட நேரம்போக.

ஏலகிரியின் ஒரே மகள்— விதவை—இளவயது. படித்த பெண், பண்புமிக்கவள். பெயர் கனிமொழி. உனக்கு நேரிட்டு விட்ட கதியால் மனம் உடைந்த நிலை

என்றாலும், இனி உயிர் வாழ ஏதேனும் தொண்டாற்றி வருவது என்ற உறுதி கொண்டு, ஒரு இலவச மருத்துவ மனை அமைத்து, அதிலே வேலைக்கமர்ந்த டாக்டர் கமலாவுடன் பணி புரிந்து வந்தாள்—முதலுதவி முறை பயின்று.

ஒவ்வோர் சமயம் சொக்கனுக்கு ஒரு எண்ணம் வரும்—சொர்ணத்தைப் பற்றி, டாக்டரம்மாவிடமாவது, எஜமானியம்மாவிடமாவது சொல்லி உதவி கேட்கலாமா என்று. உடனே ஒரு 'ரோஷ' உணர்ச்சி குறுக்கிட்டு அந்த எண்ணத்தை விரட்டிடும்.

மருத்துவ மனையில், சொக்கன் பணியாளாக வாய்ப்புக் கிடைத்தது. அதை மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டான். வேலை நேரம் போக, டாக்டரிடம் பேசுவதிலேஅவனுக்கு ஆர்வம். உலகின் நிலையைத் தெரிந்து கொள்ளும் பள்ளிக் கூட மாக்கிக் கொண்டான் அந்த மருத்துவ மனையை.

டாக்டர் கமலாவின் கணவன், இந்திய விமானப்படையில் வேலை பார்த்து வருபவர். ஆகவே அவரைப் பற்றிய பேச்சு கிளம்பும் போதெல்லாம், போர்-படை-பாது காப்பு-நாட்டைக் காத்திடும் கடமை-இவை பற்றிய விளக்கம் கிடைக்கும் சொக்கனுக்கு. ஒரு ஆர்வம் அரும்பிற்று அவன் மனதில்—நாட்டைக் காத்திடும் படையில் சேர்ந்தால் என்ன என்ற எண்ணம்.

'பாய்—பாய்' என்றும், பஞ்சசீலம் என்றும், பாசம் காட்டிப் பேசுவந்த சீனா, இந்தியாவைத் தாக்கிற்று என்ற செய்தி கிடைத்ததும், சொக்கன் மனதிலே அரும்பிக் பிக் கொண்டிருந்த எண்ணம் மலர ஆரம்பித்தது. அவன் படையில் சேர முடிவெடுக்கச் செய்தது, டாக்டர் கமலாவின் கண்ணீரும், கனிமொழியின் புன்னகையுந்தான்.

ஒரு தந்தி, டாக்டர் கமலா அதனைப் படித்ததும் முகத்தில் அறைந்து கொண்டு 'கோ'வெனக் கதறக் கண்

டான். 'சொக்கா! என் கணவர்...யுத்தத்தில்...மரணம்'" என்று விம்மியபடி கூறிக் கேட்டுப் பதறினான். டாக்டருக்கு என்ன ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் திகைத்தான்; அவனுடைய கண்களிலும் நீர் துளிர்த்தது.

நாட்டுக்காக உயிரை ஈந்தார்;

வீரமரணமடைந்தார்.

அவர் பெயர் நிலைத்து நிற்கும்!

நாடே புகழ்கிறது அந்த வீரனை!

சொக்கன் இதுபோல எண்ணிட எண்ணிட, படையில் சேர்ந்தாக வேண்டும் என்று எண்ணம் உறுதியாகி விட்டது.

ஏலகிரியிடம் சொல்லிவிட்டு படையில் சேரச் சென்னை செல்வது, டாக்டரிடம் சிபாரிசு கடிதம் வாங்கி கொண்டு என்று தீர்மானித்து ஏலகிரியின் வீடு சென்றான். அங்கு அவன் கண்டதும் கேட்டதும், அவனுடைய நெஞ்சினை நெகிழ வைத்தது.

ஏலகிரி கண்ணீர் சிந்தியபடி.....

அவர் எதிரில் புன்னகை உதிர்த்தபடி கனிமொழி.

''அப்பா! நாட்டுக்குப் பேராபத்து வருகிறபோது, நம்மைப் போன்ற விவரம் அறிந்தவர்கள்கூட வீறு கொண்டு எழாவிட்டால், நாடு என்ன கதியாவது அப்பா! பயனற்ற வாழ்வு என்று எண்ணிக் கிடந்தேன்; இப்போது நாட்டுக்குப் பயன்படும் நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. கலங்காதீர்கள். களிப்புடன் விடை கொடுத்து அனுப்புங்கள். களத்திலே போராடிக் காயமுற்று உயிருக்கு மன்றாடும் உத்தமர்களுக்குத் தொண்டாற்றுவதைக் காட்டிலும் தூய்மையான தொண்டு இல்லை,'' என்று கேட்போர் நெஞ்சம் நெகிழும்படிக் கூறிடக் கேட்டான். அதற்குப் பிறகு, அவனுக்குப் படையிலே சேருவதற்குத் துளியேனும்

தயக்கம் எழத்தான் முடியுமா? சொக்கன் படை வீர னானன்.

சொக்கன்—டாக்டர் கமலா—கனிமொழி இவர் போன்றார் பல்லோர் நாடு காத்திடக் கிளம்பியதால் ஏற்பட்டதோர் மகத்தான எழுச்சியின் முன் நிற்கொணாது, பாய்ந்து வந்த சீனப் படை பதுங்கிக் கொண்டது. போர் ஓய்ந்தது. டாக்டர் கமலாவும் கனிமொழியும் வீடு திரும் பினர். சொக்கன் படையிலேயே தங்கிவிட்டான்.

கடன்பட்ட நெஞ்சம் கரைவது போல, காலம் கடு வேகத்துடன் கரைந்தது. காஷ்மீருக்குள் பாகிஸ்தான் புகுந்தது; தாக்குதலை முறியடிக்கக் கிளம்பிய ஆற்றல் மறவர் படையில் சொக்கன்!

வெற்றிமேல் வெற்றி பெற்று, பாகிஸ்தானிய தளங் களை அழித்து, இந்தியப் படைகள் முன்னேறி வருவ தனை இதழ்கள் மூலம் அறிந்து, டாக்டரும் கனிமொழி யும், இந்த வீரப்படையில் ஏதாவதொரு பிரிவிலேதான் நமது சொக்கன் இருப்பான் என்றெண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தனர்! சீனப்படை எடுப்பின்போது சென்று பணியாற்றுவது போன்றே இப்போதும் சென்றிட விரும் பினர். அதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டி ருந்தபோது, எதிரியின் இலக்குகளைத் தாக்கித் தகர்த் திடும் போரில் வீரம் காட்டி வெற்றி கண்ட சொக்கன், களத்தில் மாண்டான் என்ற செய்தி கிடைத்தது; கண்ணீர் புரண்டது. ஆனால் தலை நிமிர்ந்தது.

நம்ம ஊர் சொக்கன், போரிலே மாண்டு போனா னாம்! பெரிய வீரன், தீரன், தியாகி என்று சர்க்கார் பாராட்டியிருக்கிறது என்று கிராமத்தார் பேசிக் கொண் டனர்.

மருத்துவமனை விழாவின்போது பலர் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தில், சொக்கன் காணப்

பட்டான். சொக்கன் படத்தைப் பெரிய அளவுள்ளதாக்கி ஊர்ப் பொது இடத்தில் வைத்து, மாலையிட்டு வணக்கம் செய்தனர். டாக்டரும் கனிமொழியும் வந்திருந்த பலரும் கசிந்துருகி நின்றனர்.

சொர்ணம், அந்தப் படத்தைக் கண்டு சிலையானாள்! 'அவரைத்தான் நான் மணம் செய்து கொள்ள இருந்தேன்— அவர் மறைந்தார்— இனி நான் விதவையே தான்' என்று எண்ணிக் குமுறி நின்றாள்.

சொர்ணத்தின் தம்பி மறுநாள் இதழ்களில், சொக்கனின் படம் வெளியிடப்பட்டிருந்ததனைக் கண்டான். சொர்ணத்துக்குக் காட்டினான். கண்டாள்; கண்ணீர் உகுத்தாள். இவர் எனக்கு ஏற்றவர் அல்ல என்றல்லவா அப்பா சொன்னார்! 'இவர் வீரர், நாடுகாத்திட்ட தீரர், நாட்டுக்காக உயிரையே தந்த தியாகி!'— என்றெல்லாம் எண்ணிக் குமுறினாள். அதே இதழில் மற்றோர் பக்கத்தில், போர்க் காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை நடத்தி பிடிபட்ட, பட்டாளம், ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை பெற்றதாக ஒரு செய்தியும் வெளியாகி இருந்தது. சொர்ணம் அதைக் காணவில்லை. அவர் கண்களில் எதுவுமே தெரியவில்லை; எங்கு நோக்கினாலும் சொக்கனுடைய உருவமே தெரிந்தது.

□ □ □

# 5
# விழுப்புரம் சந்திப்பு

''இன்னும் ஒரு அரை மணிநேரத்திலே வண்டி விழுப்புரம் வந்துவிடும். சூடாக காப்பி வாங்கிக் கொடுங்கள்; இருமல் கொஞ்சம் குறையும்.

''அரை மணி நேரத்திலா...இல்லையே...ஒரு மணி நேரத்துக்குமேல் ஆகுமே...வண்டி லேட்டாக...அல்லவா போகிறது...''

''லேட்டோ, சுலோவோ, வண்டி ஓடுகிறதே, அதைச் சொல்லும்.''

''எல்லா இடத்துக்கும் மின்சார வண்டி போடப் போகிறார்களாமே...அந்த வண்டி வேகமாகப் போகும்.''

''ஆமா.....இந்த இருமல் இவருக்கு எத்தனை நாட்களாக...''

''நாட்களா? ராமா! ராமா! மூணு வருஷமா உயிரை வாட்டுது இந்த இருமல்...''

''கோழை நிறைய வர்ரதோ...''

''ஒரு பொட்டுக்கூடக் கிடையாது..''

''புகைஞ்சி புகைஞ்சி இருமறது....''

''என்ன வைத்தியம் செய்தும்...''

''கொஞ்சம் சுமார்னு, சொல்லுவா...அவ கல்நெஞ்சக்காரி...கற்பகம்—எனக்கென்று வந்து வாய்த்த சனி...''

''நோய் உம்மை வாட்டினா, உம்மோட 'பார்யா' என்ன செய்ய முடியும்...மனம் நொந்து பேசலாமோ...நீர் படுகிற கஷ்டத்தைப் பார்த்து, அந்த அம்மாவோட கண் களிலே நீர் தளும்பறது...''

''தலைப்பாடா அடிச்சிண்டேன்; வேண்டாம் பட்ட ணத்து வாசம், என் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதுன்னு... கேட்டாளா...மகன் படிக்கக் கிளம்பினான், இவ கிளம் பிட்டா, என்னையும் இழுத்துண்டு...''

''சில பேருக்கு, பட்டணத்து வாசம் பிடிக்கறதில்லை. எனக்கேகூட, நாலு வருஷம், விட்டு விட்டு காய்ச்சல்... நானும், என் மகனோட படிப்புக்காகத்தான் பட்டணம் போனவன்...''

''ஏதோ கடவுளோட கடாட்சம், உமக்கு ஒண்ணும் இல்லை.''

''எனக்கு ஏதாவது நோய் ஏற்பட்டா தேவவியே... என் மகளுக்கு உடம்பு சரியில்லே....''

''இதேபோல இருமலா!''

''இருமலா இருந்தா பரவாயில்லையே...நல்ல மருந் தெல்லாம் இருக்கே..இன்ன வியாதின்னு கண்டு பிடிக்கவே, டாக்டர்கள் பாடு கஷ்டமாக இருக்கு. இந்த லட்சணத்திலே மகனே ஒரு டாக்டர்...கெட்டிக்காரன் என்றும் பேர். வரு மானமும் நிறைய...''

''அவராலேயே சொல்ல முடியலியா, என்ன வியாதி இது என்ற விவரம்?''

''விவரம் சொல்றான், விளக்கம் சொல்றான்...அதிலே ஒரு குறைச்சலும் இல்லே; வியாதி போகலியே.''

''வயிற்று வலியோ.''

''உடல் பூரா...தேள் கொட்டின மாதிரி...துடியாய்த் துடிக்குது...ஒரு பத்து நிமிஷம்...பிறகு ஒரு மணி நேரம் மயக்கம்.''

''இப்படி எத்தனை நாளா?''

''வருஷம் நாலு ஆகுது.''

''நாலு வருஷமாகவா, அவ்வளவு பெரிய பட்டணத்திலே ஒரு நல்ல டாக்டர் கிடைக்கல்லே, இந்த வியாதியைப் போக்க.''

''இது வியாதியே அல்ல என்கிறாளே, அத்தனை டாக்டர்களும்...என் மகனும், டாக்டர் பாஷை பேசறான்... எல்லாம் மனம்தான் காரணமாம்...மனதிலே வியாதியிருக்கே தவிர, உடலிலே இல்லை என்கிறான்.''

''அதிசயமா இருக்கே.''

''அநியாயமா இருக்கேன்னு சொல்லுங்கோ...நரம்புகளுக்கு வலிவு ஏற, மனதுக்குத் தெம்பு வருமாம்; மனதுக்குத் தெம்பு வந்தால் மயக்கம் தன்னாலே போயிடுமாம்....இதைத்தான் சொல்றா.''

''அதாவது, இது ஒரு வகையான இஸ்டீரியா.... ஒருவித வலிப்பு வியாதி.''

''என் மகன் இதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கான். எத்தனை நாளைக்கு இதைக் கேட்டுக்கொண்டு இருக்கமுடியும். அதனாலேதான் அவனோட விஷயத்தைச் சொல்லாமல் நான் கிளம்பினேன்....என் சொந்தக் கிராமம், திருச்சி பக்கம். துறையூர் பாதையிலே...அங்கே இரண்டு மூன்று தலைமுறையா மாந்திரீகத்திலே கியாதி பெற்ற குடும்பம் ஒன்று இருக்குது. கேள்விப்பட்டிருக்கலாம்—சிலபேராவது, திரிசூலம் பிள்ளை என்பவரைப்பற்றி. அவர் நாற்பது நாள் விபூதி அடித்து மந்திரம் போட்டா, இந்த வலி, மயக்கம் எல்லாம் மாயமாய் போய்விடும்.

பலருக்கு குணம் ஆனது எனக்கே தெரியும். இப்ப நான் அவரைப் பார்த்துப் பேசி, கையோடு பட்டணத்துக்கு அழைத்துக்கொண்டு போகத்தானே வந்திண்டிருக்கேன்.''

''மாயம், மந்திரம், முடிக்கயிறு இதிலே எல்லாம் நம்பிக்கை யாருக்கு இருக்குது, இந்தக் காலத்திலே.''

''இப்படிச் சொல்லுவான் என்றுதான் என் மகனிடம் விவரம் சொல்லாமல் புறப்பட்டேன். அவனோ டாக்டர்! அவன் ஒத்துக் கொள்வானா மாந்திரீகத்தை?''

''எப்படியோ ஒண்ணு; கொழந்தைக்கு குணமானா போதும்.''

''பெரியவாளோட ஆசீர்வாதமும் கிடைக்கறது. எனக்கென்னமோ திரிசூலம் பிள்ளையோட மாந்திரீக பலத்திலே, நிறைய நம்பிக்கை. என்னதான் காலம் மாறி விட்டது என்று சொன்னாலும், ஒரே அடியா எல்லா வற்றையும் மறந்துவிட முடியுமா?''

''நான்கூடக் கேள்விப்பட்ருக்கிறேன், அந்த மந்திரக் காரர் விஷயமா...மூணுமாடி வீடு இருக்காமே அவருக்கு.''

''முப்பது நாற்பது ஏக்கர் அயன் நஞ்சை போன வருஷம்தான் வாங்கினார். பலருக்குக் குணம் ஆகி இருக்கு. டாக்டர் படிச்ச பையனோட இதைச் சொல்லலாமோ! சொல்லல்லே! குணமான பிறகு அவனே தெரிந்துக் கொள்றான்''

''இந்தக் காலத்து வைத்தியப் படிப்பு என்னதான் அதிசயமானதாக இருந்தாலும், மூலிகை, மாந்திரீகம், இதிலே இன்னமும் பலன் இருக்கத்தான் செய்யுது.''

''இல்லாமலா, திரிசூலம் பிள்ளையோட தேவதா விலாசத்தைத் தேடி, மாதம் முன்னூறு பேருக்குக் குறையாம வருகிறாங்க? நல்ல கைராசிக்காரர். வெள்ளிக்கிழமை மௌன விரதம். மகமாயி ஒவ்வொரு ராத்திரியும் பிரசன்னம்

அவருக்கு. இந்தக் காலத்திலே நம்பமாட்டா. ஆனா அவரை நேரிலே பார்த்தா தெரியும். வயது கிட்டத்தட்ட அறுபது இருக்கும். ஒரு நோய்நொடி வரணுமே! கிட்டே வருமா! காலையிலே ஆற்றுத் தண்ணீர்லே குளிக்கிறார், ஆறு மணிக்கு முன்னே. ஒருநாள் காய்ச்சல்னு படுத்தாரா!''

''ஆமாம். குழந்தையை அழைத்துக்கொண்டு போய் காட்டாம, நீங்க மட்டும் போறிங்களே.''

''கொழந்தையை அழைத்துக்கொண்டு கிளம்பினா, என் மகன் கேட்கமாட்டானோ, எங்கே? எதுக்கு? என்றெல்லாம். அதனாலே ஒரு நிலத்து விஷயமா, கிராமம் போயிட்டு வர்றேன்னு சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன். திரிசூலம் பிள்ளை எனக்கு ரொம்ப வேண்டியவர். நிலைமையைச் சொல்லி, அவரையே பட்டணத்துக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்....''

'' அவர் கிராமத்திலே இல்லாது போனா, மத்தவங்க....''

''அவருடைய மகனுக்கும் மாந்திரீகத்திலே பயிற்சி. பேச்சும் நின்றது.

இருமலால் அவதிப்படும் கணவனுக்குக் காப்பி கொண்டுவர மனைவி ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள்.

மகளுடைய 'மயக்கம்' போக்க மாந்திரீகரைத் தேடிச் செல்பவர், வண்டியிலிருந்து கீழே இறங்கி நின்றார்.

திருச்சியிலிருந்து கிளம்பிய ரயில், எதிர் வரிசையில் வந்து நின்றது.

இரு இரயில்களிலுமிருந்து பலர், வேகமாக, காப்பி விடுதிக்கு விரைந்தனர். பலர் போவதைக் கண்டதும், இவருக்கும் காப்பி சாப்பிடலாம் போல தோன்றிற்று; சென்றார். காப்பி வாங்கி ஆற்றிக் கொண்டிருக்கும்போது, அங்கு ஓர் புறத்தில், இவர் போலவே காப்பி ஆற்றிக்

குடித்துக் கொண்டிருந்த ஒரு இளைஞனைப் பார்த்தார். அடையாளம் கண்டு கொண்டு மெத்த ஆவலுடன் அவனை நோக்கிச் சென்றார். அவனும் இவரைக் கண்டு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் கொண்டான்.

''கும்பிடப்போன தெய்வம், குறுக்கே வந்தது போல நீங்க வந்தீங்களே...அடா! அடா! இதல்லவா தெய்வ சங்கல்பம்....''

''பத்து நிமிஷம்கூட ஆகல்லே, உன்னைப் பத்திப் பேசி; நீயே வந்துவிட்டாயே. பலே! பலே! எங்கே இப்படி?''

''பட்டணத்துக்குத்தான்; உங்களைப் பார்க்கத்தான்; உங்களுடைய உதவியைத் தேடித்தான்.''

''உங்க குடும்பத்துக்கு உதவி செய்ய நான் எப்பவும் கடமைப்பட்டவன். என்ன அவ்வளவு அவசரமான காரியம்.''

''அவசரம் மட்டுமில்லிங்க, ஆபத்துன்னு சொல்லணும். காலையிலே சென்னை போனதும், உடனே, பெரிய ஆஸ்பத்திரியிலே சேர்த்தாகணும். உங்க மகன் இருக்காரே டாக்டரு, அவரோட தயவாலேதான் இந்தக் காரியம் ஆகணும். இருதய வியாதிங்க அப்பாவுக்கு...''

'' யாருக்கு? திரிசூலம் பிள்ளைக்கா! இருதய வியாதியா?''

''ஆமாங்க, ஒரே மயக்கம்.''

''மயக்கம் மந்திரிச்சா போயிடும்னு.''

''மாந்திரீகம், பேய் பிசாசு விஷயத்துக்குப் பலன் கொடுக்கும்ங்க. அப்பாவுக்கு வந்திருப்பது இருதய வியா திங்க.....''

''ஆயிரத்தெட்டு பேருக்கு, அவர் மயக்கம் போக்கி இருக்கறாரு...''

''உங்களிடம் சொல்றதிலே தவறு கிடையாதுங்க. அதெல்லாம், இந்தக் காலத்துக்கு ஒத்து வராதுங்க. மாந்திரீகத்திலே நம்பிக்கை இருந்தாதான ' ந பயன்....''

''நம்பிக்கை உங்களுக்குக் கிடையாதோ....?''

''இருந்ததுங்க...முன்னே...போன வருஷம் சின்ன வரு, உங்க மகன், டாக்டரு வந்திருந்தாரு பாருங்க, அப்ப, விவராமா இதுபற்றி பேசினாருங்க. மயக்கம் என்றா ஏதோ ஒரு கெட்ட தெய்வத்தோட வேலை என்று நாங்க சொல்றது...அவரு அது ஒரு விதமான வியாதின்னு சொன்னாரு. அப்பாவுக்கு, அப்ப, இலேசா மயக்கம். பரிசோதனை செய்து பார்த்து, இது இருதய சம்பந்தமானதுன்னு சொன்னாரு.''

''என் மகன் சொன்னதாலே...''

''மாயம், மாந்திரீகம் இதெல்லாம் விவரம் தெரியா திருக்கிற வரையிலேதான் பலிக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். அதுமட்டுமில்லிங்க. மற்றவங்களுக்கு மயக்கம் போக, அப்பா சொல்கிற அவ்வளவும்—பூஜை முடிக்கயிறு—விபூதி அடிக்கறது—எல்லாம் செய்து பார்த்தாச்சி. ஒரு பலனும் இல்லே. கடைசியிலே, சின்னவரைப் பிடிச்சி பெரிய ஆஸ்பத்திரியிலே சேர்த்தாகணும். கிளம்பிவிட்டோம். அப்பா முதல் வகுப்பிலே இருக்கிறாரு. வாங்க! உங்களைப் பார்த்தா, அவருக்கு ஒரு தெம்பு பிறக்கும்.''

முதல் வகுப்பில், முகத்தில் பயம் கப்பிக் கொண்ட நிலையில், திரிசூலம் பிள்ளை படுத்துக்கொண்டிருந்தார். அவருக்குத் தைரியம் கூறிவிட்டு, அவருக்குத் துணையாக இருந்து பெரிய மருத்துவ மனையில் சேர்த்து விடும்படி, மகனுக்கு, அவசரம் அவசரமாக ஒரு கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு, திருச்சி செல்லும் இரயிலில் ஏறிக் கொண்டார், சோமசுந்தரம்.

—முற்றும்—



## பேரறிஞர் அண்ணா

அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைக்க வைக்கக் கூடியது. பொதுமேடை வானில் முன்பு ஒளிர்ந்த மின்மினிகள், விண் மீன்கள், பிறைமதியங்கள் யாவும் ஒதுங்க, பேரொளி வீசிப் புதுப் பொழுது மலரச் செய்யும் 'வெங்கதிரவன்' அண்ணா அவர்களே என்பதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவை குன்றாது, எப்பொருள் பற்றியும் அறிவுப் பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதும் திறன் அவர் தனியுரிமையே ஆகும். எழுத்துக்கு ஒரு நடை, மேடைப் பேச்சிக்கு ஒரு நடை உரையாடலுக்கு ஒரு நடை என்பது அவரிடம் காணமுடியாது. இருந்தால் இருப்பார்; எழுந்தால் எதிலும் ஒரே காளமேகந்தான்.


**பூம்புகார் பதிப்பகம்**

63, பிராட்வே, சென்னை-600 108